
www.Padasalai.Net www.CBSEtips.in

இப்பொழுது விற்பனையில்

# கவிமணி இன்பத்தமிழ்

கற்றலில் எளிமை! கற்பித்தலில் புதுமை!









2023-24

கல்வி ஆண்டிற்கான புதிய பதிப்பு

- உரைநடை
- கவிதைப்பேழை
- விரிவானம்
- இலக்கணம்
- மொழிப்பயிற்சி

9

www.Padasalai.Net
Kindly send me your study materials to padasalai.net@gmail.com

# கவிமணி இன்பத்தமிழ்

## ஒன்பதாம் வகுப்பு

**பேரன்புடையீர் வணக்கம்,**

கடந்த 29 ஆண்டுகளாகப் பள்ளி மாணவர்களுக்குரிய உரைநூல்களையும் மாதிரி வினா – விடை நூல்களையும் சிறந்த முறையில் பதிப்பித்து வெளியிட்டு வருகிறோம். இந்நூல்கள் அனைத்தும் மாணவர்களின் கற்றலை மேம்படுத்தி, பள்ளித்தேர்விலும் அரசு பொதுத்தேர்விலும் உயர் மதிப்பெண்கள் பெற உற்ற துணையாக அமையும்.

பாடநூலில் உள்ள அனைத்து வினாக்களுக்கும் எளியநடையில், சுருக்கமாக விடையளிக்கப்பட்டுள்ளன. பாடநூலை முழுமையாகப் புரிந்துகொள்ளும் வகையில் தேவையான அளவு கூடுதல் வினா–விடைகளும் வழங்கப்பட்டுள்ளன. கற்பித்தலில் நீண்ட நெடிய அனுபவம்மிக்க ஆசிரியர்களைக் குழுக்களாகக் கொண்டு, நூல்கள் அனைத்தும் சிறந்த முறையில் உருவாக்கப்பட்டுள்ளன.

**தேர்ந்தெடுக்கப்பட்ட பாடங்கள் சிலவற்றை, தங்களின் மேலான பார்வைக்கு இங்கே வழங்கியுள்ளோம். நூலைப் பார்வையிட்டு மாணவர்களுக்குப் பரிந்துரை செய்யும்படி ஆசிரியர்களை அன்புடன் வேண்டுகிறோம். நன்றி! வணக்கம்!**

**இவ்வுரை நூலில் ...**

- உரைநடை வினா – விடை
- கவிதைப்பேழை வினா – விடை
- விரிவானம் வினா – விடை
- இலக்கணம் வினா – விடை
- கற்பவை கற்றபின் / மொழியோடு விளையாடு
- கலைச்சொல் அறிவோம் / மொழியாக்கம் / நயம் பாராட்டுதல்
- காட்சியைக் கண்டு கவினுற எழுதுதல்
- உள்நிலைத் தேர்வு வினாக்கள் / மாதிரி வினாத்தாள்கள்
- மனப்பாடப்பகுதி

ஆகிய அனைத்தும் இடம்பெற்றுள்ளன.


# MERCY Publications

43, Bunder Street, Chennai - 600 001.



நூல்களைச் சலுகை விலையில் மொத்தமாக வாங்க,
கீழ்க்கண்ட எண்களில் தொடர்பு கொள்ளவும்
99415 16187 / 74492 00092 / 70102 31425

விலை : ரூ250.00


www.Padasalai.Net

| இயல் | பொருளடக்கம் | |
|---|---|---|
| | உரைநடை உலகம் | திராவிட மொழிக்குடும்பம் |
| 1. | கவிதைப்பேழை | தமிழோவியம் |
| | | தமிழ்விடு தூது |
| | விரிவானம் | வளரும் செல்வம் |
| | கற்கண்டு | தொடர் இலக்கணம் |
| 2. | உரைநடை உலகம் | நீரின்றி அமையாது உலகு |
| | கவிதைப்பேழை | பட்டமரம் |
| | | பெரியபுராணம் |
| | | புறநானூறு |
| | விரிவானம் | தண்ணீர் |
| | கற்கண்டு | துணைவினைகள் |
| 3. | உரைநடை உலகம் | ஏறுதழுவுதல் |
| | கவிதைப்பேழை | மணிமேகலை |
| | விரிவானம் | அகழாய்வுகள் |
| | கற்கண்டு | வல்லினம் மிகும் இடங்கள் |
| | | திருக்குறள் |
| 4. | உரைநடை உலகம் | இயந்திரங்களும் இணையவழிப் பயன்பாடும் |
| | கவிதைப்பேழை | ஓ, என் சமகாலத் தோழர்களே! |
| | | உயிர்வகை |
| | விரிவானம் | விண்ணையும் சாடுவோம் |
| | கற்கண்டு | வல்லினம் மிகா இடங்கள் |
| 5. | உரைநடை உலகம் | கல்வியிற் சிறந்த பெண்கள் |
| | கவிதைப்பேழை | குடும்ப விளக்கு |
| | | சிறுபஞ்சமூலம் |
| | விரிவானம் | வீட்டிற்கோர் புத்தகசாலை |
| | கற்கண்டு | இடைச்சொல் – உரிச்சொல் |

www.Padasalai.Net

| இயல் | பொருளடக்கம் | |
|---|---|---|
| 6. | உரைநடை உலகம் | சிற்பக்கலை |
| | கவிதைப்பேழை | இராவண காவியம் |
| | | நாச்சியார் திருமொழி |
| | விரிவானம் | செய்தி |
| | கற்கண்டு | புணர்ச்சி |
| | | திருக்குறள் |
| 7. | உரைநடை உலகம் | இந்திய தேசிய இராணுவத்தில் தமிழர் பங்கு |
| | கவிதைப்பேழை | சீவகசிந்தாமணி |
| | | முத்தொள்ளாயிரம் |
| | | மதுரைக்காஞ்சி |
| | விரிவானம் | சந்தை |
| | கற்கண்டு | ஆகுபெயர் |
| 8. | உரைநடை உலகம் | பெரியாரின் சிந்தனைகள் |
| | கவிதைப்பேழை | ஒளியின் அழைப்பு |
| | | தாவோ தே ஜிங் |
| | | யசோதர காவியம் |
| | விரிவானம் | மகனுக்கு எழுதிய கடிதம் |
| | கற்கண்டு | யாப்பிலக்கணம் |
| 9. | உரைநடை உலகம் | விரிவாகும் ஆளுமை |
| | கவிதைப்பேழை | அக்கறை |
| | | குறுந்தொகை |
| | விரிவானம் | தாய்மைக்கு வறட்சி இல்லை |
| | கற்கண்டு | அணியிலக்கணம் |
| | ➲ | மாதிரி வினாத்தாள்கள் |
| | ➲ | மனப்பாடப்பகுதி |

www.Padasalai.Net

# இயல் – 1

## உரைநடை உலகம்

# திராவிட மொழிக்குடும்பம்

### குறுவினா

1. **நீங்கள் பேசும் மொழி எந்த இந்திய மொழிக்குடும்பத்தைச் சேர்ந்தது?**
   ★ நாங்கள் பேசும் மொழி, தென் திராவிட மொழிக்குடும்பத்தைச் சேர்ந்தது.

### கூடுதல் வினாக்கள்

2. **தம் எண்ணங்களை மனிதர் எவ்வாறெல்லாம் தெரிவிக்க முயன்றனர்?**
   ➤ மெய்ப்பாடுகள், சைகைகள், ஒலிகள், ஓவியங்கள் ஆகியவற்றின் மூலம் தம் எண்ணங்களை மனிதர், தெரிவிக்க முயன்றனர்.
3. **உலக மொழிகள் எவற்றின் அடிப்படையில் மொழிக்குடும்பங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன?**
   ➤ உலக மொழிகள், அவற்றின் பிறப்பு, தொடர்பு, அமைப்பு, உறவு ஆகியவற்றின் அடிப்படையில் மொழிக்குடும்பங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன.
4. **தமிழ் என்ற சொல் 'திராவிடா' என எவ்வாறு உருவானது?**
   ➤ 'தமிழ்' என்னும் சொல், தமிழா > தமிலா > டிரமிலா > ட்ரமிலா > த்ராவிடா என்னும் மாற்றங்களைப் பெற்றுத் 'திராவிடா' என உருவானது.
5. **பிரான்ஸிஸ் எல்லிஸ் கண்டறிந்த தென்னிந்திய மொழிகள் யாவை?**
   ➤ பிரான்ஸிஸ் எல்லிஸ் கண்டறிந்த தென்னிந்திய மொழிகள் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகியவை ஆகும்.
6. **ஹோக்கன் என்பார் எவ்வெம்மொழிகளை இணைத்துத் 'தமிழியன்' என்று பெயரிட்டார்?**
   ➤ ஹோக்கன் என்பார், தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், மால்தோ, தோடா, கோண்டி ஆகிய மொழிகளை இணைத்துத் 'தமிழியன்' என்று பெயரிட்டார்.
7. **மொழிகள் பரவிய நில அடிப்படையில் திராவிட மொழிகள் எவ்வாறு பகுக்கப்பட்டன?**
   ➤ மொழிகள் பரவிய நில அடிப்படையில், தென்திராவிட மொழிகள், நடுத்திராவிட மொழிகள், வட திராவிட மொழிகள் என்று, திராவிட மொழிகள் மூன்று வகைகளாகப் பகுக்கப்பட்டன.
8. **தென்திராவிட மொழிகள் யாவை?'**
   ➤ தென்திராவிட மொழிகள், தமிழ், மலையாளம், கன்னடம், குடகு, துளு, கோத்தா, தோடா, கொரகா, இருளா ஆகியவை ஆகும்.
9. **நடுத்திராவிட மொழிகள் யாவை?**
   ➤ நடுத்திராவிட மொழிகள், தெலுங்கு, கூயி, கோண்டா, கோலாமி, நாய்க்கி, பெங்கோ, முண்டா, பர்ஜி, கதபா, கோயா, கோண்டி ஆகியவை ஆகும்.
10. **வடதிராவிட மொழிகள் யாவை ?**
    ➤ வடதிராவிட மொழிகள், குரூக், மால்தோ, பிராகுயி ஆகியவை ஆகும்.
11. **அண்மையில் அறியப்பட்ட திராவிட மொழிகளைக் கூறுக.**
    ➤ எருகலா, தங்கா, குறும்பா, சோழிகா ஆகியவை, அண்மையில் அறியப்பட்ட திராவிட மொழிகள்.
12. **திராவிட மொழிகளின் பழமையான இலக்கியங்களைக் கூறுக.**
    **தமிழ்** – சங்க இலக்கியம் **தெலுங்கு** – பாரதம்
    **கன்னடம்** – கவிராஜ மார்க்கம் **மலையாளம்** – ராம சரிதம்.
13. **திராவிட மொழிகளின் தொன்மையான இலக்கண நூல்களைக் கூறுக.**
    **தமிழ்** – தொல்காப்பியம் **தெலுங்கு** – ஆந்திர பாஷா பூஷணம்
    **கன்னடம்** – கவிராஜ மார்க்கம் **மலையாளம்** – லீலா திலகம்

www.Padasalai.Net

## சிறுவினா

**1. சங்க இலக்கியத்தில் காணப்படும் கடற்கலனுக்குரிய சொல், கிரேக்க மொழியில் எவ்வாறு மாற்றம் பெற்றுள்ளது?**

* சங்க இலக்கியத்தில் நாவாய், வங்கம், தோணி, கலம் எனக் கடற்கலன்கள் குறிக்கப்பட்டுள்ளன. இவற்றுள் ‘கலன்’ என்பது ‘கலயு கோய்’ எனவும், ‘நாவாய்’ என்பது ‘நாயு’ எனவும், ‘தோணி’ என்பது ‘தோணீஸ்’ எனவும், ‘எறிதிரை’ என்பது ‘எறுதிரான்’ எனவும் கிரேக்க மொழியில் மாற்றம் பெற்றுள்ளது.
* ‘எறிதிரை’ என்னும் தமிழ்ச்சொல்தான் கிரேக்கத்தில் ‘எறிதிரேசியன் ஆப் த பெரிபுலஸ்’ என்ற கடல்நூலாக விளங்குகிறது.

**2. திராவிட மொழிகளின் பிரிவுகள் யாவை? அவற்றுள் உங்களுக்குத் தெரிந்த மொழிகளின் சிறப்பியல்புகளை விளக்குக.**

* தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், துளு, குடகு, குவி, கோண்டா போன்ற மொழிகள், திராவிட மொழிகளின் பிரிவுகள் ஆகும்.
* தமிழ், தொன்மையும் இலக்கிய இலக்கண வளமும் உடைய மொழி. பிற திராவிட மொழிகளைவிடவும் தனித்து இயங்கும் மொழி; பிறமொழிக் கலப்புக் குறைந்த மொழி; பிற திராவிட மொழிகளின் தாய்மொழியாகவும் கருதப்படுகிறது.
* தேன்போன்ற இனிமையுடைய மொழி தெலுங்கு. இதன் எழுத்துமுறை, தேவநாகரியை ஒட்டி அமைந்தது; பாரதத்தை நன்னயப்பட்டர் தெலுங்கில் மொழிபெயர்த்தார்.
* கன்னடம், கர்நாடகம் திரிந்து கன்னடம் ஆயிற்று; கரு + நாடு + அகம் – கருநாடகம் எனத் திரிந்தது என்பர்; இதன் எழுத்து, தெலுங்கை ஒட்டி அமைந்தது.
* மலையாளம், சேரநாட்டின் மொழி; தமிழோடு ஒத்த இனமொழி என்பர்; சேரநாட்டில் தமிழே பேச்சுமொழியாகவும், இலக்கிய மொழியாகவும் இருந்தது; மலையாள இலக்கியமாகிய இராம சரிதம், தமிழ் இலக்கியம் போலவே உள்ளது.

**3. மூன்று என்னும் எண்ணுப்பெயர், பிற திராவிட மொழிகளில் எவ்வாறு இடம்பெற்றுள்ளது?**

* ‘மூன்று’ என்னும் எண்ணுப்பெயர், தமிழில் ‘மூன்று’ எனவும், மலையாளத்தில் ‘மூணு’ எனவும், தெலுங்கில் ‘மூடு’ எனவும், கன்னடத்தில் ‘மூரு’ எனவும், துளுவில் ‘மூஜி’ எனவும் இடம்பெற்றுள்ளது.

**4. காலந்தோறும் தமிழ்மொழி தன்னை எவ்வாறு புதுப்பித்துக் கொள்கிறது?**

* தமிழ்மொழி தனக்கெனத் தனித்த இலக்கண வளம் பெற்றுள்ளது; “பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையி னானே” என்கிறது நன்னூல்.
* தலைமுறைக்குத் தலைமுறை சிற்சில மாற்றங்களைப் பெற்று வளர்ந்து வரும் மொழியாக உள்ளது. சொற்கோவையை ஆயும்போது, பழஞ்சொற்கள் வீழ்ச்சியும், புதுச்சொற்கள் எழுச்சியும் பெற்றுப் பெருகி வருவதையும் காணலாம்.
* பழமைப் பண்புகள் மாறாமல் புதுப்பண்புகளோடும் தன்னைப் புதுப்பித்துக் கொள்கிறது.

## கூடுதல் வினாக்கள்

**5. திராவிட மொழிக்குடும்பம் எவ்வாறு வகைப்படுத்தப்பட்டுள்ளது? விளக்குக.**

* திராவிட மொழிக்குடும்பம், மொழிகள் பரவிய நில அடிப்படையில் தென்திராவிட மொழிகள், நடுத்திராவிட மொழிகள், வடதிராவிட மொழிகள் என மூன்றாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.
* தமிழ், மலையாளம், கன்னடம், குடகு, துளு, தோடா ஆகியவை தென் திராவிட மொழிகள்.
* தெலுங்கு, கூயி, கோண்டா, கோலாமி, பெங்கோ, முண்டா, கோண்டி ஆகியவை நடுத்திராவிட மொழிகள். குரூக், மால்தோ, பிராகுயி ஆகியவை வடதிராவிட மொழிகள்.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

**6. திராவிட மொழிகளின் பொதுப் பண்புகளைக் கூறுக.**

**திராவிட மொழிகளின் பொதுப்பண்பு :**

அ) சொற்களின் பகுதியான வேர்ச்சொல் (அடிச்சொல்) பொதுவானதாக உள்ளது.
கண் – தமிழ், கண்ணு – மலையாளம், கன்னு – தெலுங்கு, கொண் – தோடா.

ஆ) எண்ணுப் பெயர்கள் ஒன்றுபோலவே உள்ளன.
மூன்று – தமிழ், மூணு – மலையாளம், மூடு – தெலுங்கு.

இ) சொல் ஒற்றுமை
மரம் – தமிழ், மானு – தெலுங்கு, மரம் – மலையாளம்; ஒன்று – தமிழ், ஒகடி – தெலுங்கு, ஒண்ணு – மலையாளம், ஒந்து – கன்னடம்.

உ) பெயர், வினை, எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் முதலியவை பலவகைகளில் ஒத்திருக்கின்றன.

ஊ) பெயர்ச்சொற்களின்பின் உருபுகளைச் சேர்க்கும்முறையும் ஒத்திருக்கின்றது.

**7. தமிழின் தனித்தன்மைகள் யாவை?**

- தமிழ்மொழி, தொன்மையான இலக்கண இலக்கிய வளம் உடையது.
- இலங்கை, சிங்கப்பூர், மலேசியா முதலான நாடுகளில் பேசப்படும் பெருமையுடையது.
- தனக்கெனத் தனித்த இலக்கண வளத்தைப் பெற்றுத் தனித்தியங்கும் மொழி.
- திராவிட மொழிகளின் தாய்மொழியாகக் கருதப்படுகிறது.
- பிறமொழித் தாக்கம் குறைந்து காணப்படுகிறது.
- பிறமொழிச் சொற்களை நீக்கினாலும் தனித்து இயங்க வல்லது.
- இந்தியாவின் தொன்மைக் கல்வெட்டுகளைப் பெற்ற மொழி.
- நாள்தோறும் வளர்ந்து வரும் புதிய தொழில்நுட்பங்களை ஏற்றுச் சீரும் சிறப்புமாக உள்ள மொழி.
- பழமைக்குப் பழமையாய், புதுமைக்குப் புதுமையாய்த் தனிச்சிறப்புடன் விளங்குகிற மொழி.

## நெடுவினா

**1. திராவிட மொழிகளின் ஒப்பியல் ஆய்விற்குத் தமிழே பெருந்துணையாக இருக்கிறது என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விவரிக்க.**

தமிழ்மொழி பழமையும் தொன்மையும் பெற்றது. பன்னெடுங்காலமாக மாறாத இளமைத் தன்மையும், எத்தகைய கால மாற்றத்திலும் மங்காப் பொலிவுடனும் விளங்குகிறது.

புதிய படைப்புகளுக்கு ஈடுகொடுத்து வளர்ந்து வந்துள்ளது. தமிழின் தொன்மையை உலகிற்கு அளித்த முதன்மையாளர் கால்டுவெல் ஆவார்.

திராவிட மொழிகளுக்குள் இருக்கும் இலக்கணக் கூறுகளைச் சுட்டிக்காட்டி, அவற்றின் ஒற்றுமைகளைக் கால்டுவெல் எடுத்துரைத்தார்.

திராவிட மொழிகளில் எண்ணுப்பெயர்கள் ஒன்றுபோலவே உள்ளன. சான்றாக ஐந்து, தமிழ் – ஐந்து, மலையாளம் – அஞ்சு, தெலுங்கு – ஐது, கன்னடம் – ஐது.

திராவிட மொழிகளில் உயிர் எழுத்துகளில் உள்ள குறில் நெடில், பொருளை வேறுபடுத்தத் துணை செய்கின்றன. குறில் – அடி, வளி, நெடில் – ஆடி, வாளி.

திராவிட மொழிகளில் திணை, பால் பாகுபாடு இயற்கையானது. திராவிட மொழிகள், பெயர்ச் சொல்லின்பின் வேற்றுமை உருபுகளைச் சேர்த்துப் பொருள் உணர்த்தும். பெயரடைகள் பால், எண் என்ற வேறுபாடு உணர்த்தாமல் பொதுவாக உள்ளன.

திராவிட மொழிகள் வினைச்சொல், திணை, பால், எண் ஆகியவற்றைத் தெளிவாகக் காட்டும். இதற்குத் தமிழ்மொழி துணை செய்கிறது. திராவிட மொழிகளின் பொதுப்பண்புகளைப் பெற்றுள்ளதால், அவற்றைப் பிரித்தறிய உதவுகிறது. எனினும், தனக்கெனச் சில தனித்தன்மைகளையும் கொண்டுள்ளது.

தமிழின் பல அடிச்சொற்களின் ஒலியன்கள், திராவிட மொழிகள் வழங்கும் இடத்திற்கு ஏற்ப, ‘ஒலி பெயர்த்தல்’ விதிப்படி திராவிட மொழிகளின் வடிவம் மாறி இருக்கிறது.

இவ்வகையில் திராவிட மொழிக்குடும்பத்துள் தொன்மையான மூத்த மொழியாகத் திகழ்கின்ற தமிழே, பிற திராவிட மொழிகளைவிட ஒப்பியல் ஆய்வுக்குப் பெருந்துணையாக அமைந்துள்ளது.

www.Padasalai.Net

## பலவுள் தெரிக

1. குழுவில் விடுபட்ட வரிசையைத் தேர்ந்தெடுக்க .

| குழு – 1 | குழு – 2 | குழு – 3 | குழு – 4 |
|---|---|---|---|
| நாவாய் | மரம் | துறை | தன்வினை |
| ______ | ______ | ______ | ______ |
| தோணி | மர | விருத்தம் | காரணவினை |

அ) 1 – வங்கம், 2 – மானு, 3 – தாழிசை, 4 – பிறவினை
ஆ) 1 – தாழிசை, 2 – மானு, 3 – பிறவினை, 4 – வங்கம்
இ) 1 – பிறவினை, 2 – தாழிசை, 3 – மானு, 4 – வங்கம்
ஈ) 1 – மானு, 2 – பிறவினை, 3 – வங்கம், 4 – தாழிசை

**விடை : அ) 1 – வங்கம், 2 – மானு, 3 – தாழிசை, 4 – பிறவினை**

## கூடுதல் வினாக்கள்

2. திராவிட மொழிகளில் மூத்த மொழியாய் இயங்குவது ______.
அ) மலையாளம் ஆ) கன்னடம்
இ) தமிழ் ஈ) தோடா
**விடை : இ) தமிழ்**

3. 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' என்னும் நூலை இயற்றியவர் ______.
அ) கால்டுவெல் ஆ) ஹாக்கன்
இ) பிரான்சிஸ் எல்லிஸ் ஈ) வில்லியம் ஜோன்ஸ்
**விடை : அ) கால்டுவெல்**

4. சமஸ்கிருதக் கலப்பின்றித் தனித்தியங்கும் ஆற்றல் பெற்ற மொழி ______.
அ) துளு ஆ) தமிழ்
இ) பர்ஜி ஈ) குடகு
**விடை : ஆ) தமிழ்**

5. பணத்தாளில் தமிழ்மொழி இடம்பெற்றுள்ள வெளிநாடுகள் ______.
அ) சிங்கப்பூர், இந்தோனேஷியா ஆ) மலேசியா, மொரிஷியஸ்
இ) இந்தோனேஷியா, இலங்கை ஈ) மொரிஷியஸ், இலங்கை
**விடை : ஈ) மொரிஷியஸ், இலங்கை**

6. உலகத் தாய்மொழி நாள் ______.
அ) பிப்ரவரி 8 ஆ) பிப்ரவரி 16
இ) பிப்ரவரி 25 ஈ) பிப்ரவரி 21
**விடை : ஈ) பிப்ரவரி 21**

7. தமிழை ஆட்சிமொழியாகக் கொண்ட நாடுகள் ______.
அ) தென் ஆப்பிரிக்கா, வட ஆப்பிரிக்கா ஆ) இலங்கை, சிங்கப்பூர்
இ) மொரிஷியஸ், ஆஸ்திரேலியா ஈ) இங்கிலாந்து
**விடை : ஆ) இலங்கை, சிங்கப்பூர்**

## கற்பவை கற்றபின்

**1. உங்கள் பெயருக்கான விளக்கம் தெரியுமா? உங்கள் பெயரும் உங்கள் நண்பர் பெயரும் தனித்தமிழில் அமைந்துள்ளதா? கண்டறிக.**

**என் பெயர் அறிவரசன் :** அறிவு + அரசன் – அறிவில் மேலானவன்.

**நண்பர் பெயர் :** திருவேங்கடம் = திரு + வேங்கடம் – அழகிய வேங்கடப்பதி (மாலவன் குன்றம்).

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net

**2. பயன்பாட்டில் எவ்வாறெல்லாம் தமிழ்மொழியின் வேர்ச்சொற்கள், வடிவ மாற்றங்கள் பெறுகின்றன என்பது குறித்து வகுப்பில் கலந்துரையாடுக.**

**எ – கா :** செய் – செய்தாள், செய்கிறாள், செய்வாள், செய்து, செய்த, செய்வீர், செய்கிறோம்.

**முருகன்** : நம் தாய்மொழி தமிழ், நமக்கு மட்டுமன்றி, பிறமொழிகளைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் கையாளவும் எளிதாக உள்ளது.

**வல்லவன்** : என்ன அப்படிச் சொல்கிறாய்? அது எப்படிச் சாத்தியமாகும்?

**முருகன்** : 'செய்' என்பது ஓர் அடிச்சொல். இதை நீ சொன்னால், எதிரில் உள்ளவர் எதையாவது செய்யத் தயாராகிவிடுவர். இப்படி இந்த அடிச்சொல்லுக்கு ஒரு தனித்தன்மை உண்டு.

**வல்லவன்** : அப்படியா? நாம் பேசும் வா, போ, கொடு, எடு, நில் என்பன எல்லாம் கூட, அப்படித்தான் இருக்கின்றன இல்லையா?

**முருகன்** : இந்த அடிப்படையான சொல்லை, இதற்குமேல் பிரிக்கமுடியாது. இதனை இலக்கணத்தில் 'பகுதி' என்பர். 'வேர்ச்சொல்' என்றும் கூறுவார்கள்.

**தேன்மொழி** : அப்படிப் பெயரிடக் காரணம் என்ன?

**முருகன்** : இந்த அடிச்சொல் ஒன்றிலிருந்து, நாம் எத்தனையோ சொற்களைப் பொருள் வேறுபடும் வகையில் உருவாக்கலாம்.

**மலர்விழி** : அது எப்படிப் பொருள் வேறுபடும்?

**முருகன்** : சொல்கிறேன், கவனமாகக் கேள். நான் இப்போது என்ன செய்கிறேன்?

**மலர்விழி** : பேசுகிறாய்.

**முருகன்** : இதையே நான் சொன்னால் எப்படிச் சொல்லவேண்டி இருக்கும்?

**மலர்விழி** : 'பேசுகிறேன்' என்று, சொல்லவேண்டி இருக்கும்.

**முருகன்** : நீ சொன்ன 'பேசுகிறாய்' என்பதற்கும், நான் சொல்லவேண்டிய 'பேசுகிறேன்' என்பதற்கும் வேறுபாடு உள்ளதா, இல்லையா?

**மலர்விழி** : ஆம்; உள்ளது.

**தேன்மொழி** : இந்த வேறுபாடு ஏன் வந்தது?

**முருகன்** : 'நான்' – பேசுகிறேன். 'நீ' – பேசுகிறாய். இதுதான் வேறுபாடு. 'நான்' என்பது என்னை (தன்மையை)க் குறிக்கிறது; 'நீ' என்பது உன்னை (முன்னிலையை)க் குறிக்கிறது. அதனால் – தன்மையில் 'பேசுகிறேன்' எனவும், முன்னிலையில் 'பேசுகிறாய்' எனவும் கூறப்படுகின்றன.

**தேன்மொழி** : இதுவே பன்மையாக 'நாம்', 'நீங்கள்' (நீவிர்) என்று இருந்தால் என்னவாகும்?

**முருகன்** : பேசுகிறோம், பேசுகிறீர் என்றாகும். இதுதான் வேறுபாடு. இந்தச் சொற்களை வினைச்சொற்கள் என்று கூறுவர்.

**வல்லவன்** : ஆமாம், வினைச்சொற்கள் என்பது, ஒருமை பன்மையில் வேறுபடும். காலம் காட்டும் – இடம் சுட்டும் என்று, ஆசிரியர் சொன்னது நினைவில்லையா?

**தேன்மொழி** : ஒருமை, பன்மை புரிகிறது. காலம் என்பது இறப்பு, நிகழ்வு, எதிர்வு என மூவகைப்படும் என்பதும் தெரிகிறது. அது என்ன இடம்?

**முருகன்** : இடம் தெரியாதா? இதை முதலில் பெயர்ச்சொற்கள் கொண்டு விளக்குகிறேன். நான், நாம் என்பவை தன்மை இடப்பெயர்கள்; நீ, நீவிர் என்பவை முன்னிலை இடப்பெயர்கள். இந்த இரண்டையும் தவிர்த்து, மூன்றாவது இடத்தில் வைத்துப் பேசப்படும் அவன், அவள், அவர், அது, அவை என்பவை, படர்க்கை இடப்பெயர்கள். இதை அடியொற்றி வினை அடிச்சொற்களின் அடியாகப் பிறக்கும் வினைச்சொற்கள் வேறுபடும். நான் ஓர் அட்டவணையைக் காட்டுகிறேன். அது எளிதாகப் புரிந்துகொள்ள உதவும்.

| | இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
|---|---|---|---|
| தன்மை ஒருமை | செய்தேன் | செய்கிறேன் | செய்வேன் |
| தன்மைப் பன்மை | செய்தோம் | செய்கிறோம் | செய்வோம் |
| முன்னிலை ஒருமை | செய்தாய் | செய்கிறாய் | செய்வாய் |
| முன்னிலைப் பன்மை | செய்தீர் | செய்கிறீர் | செய்வீர் |
| படர்க்கை ஆண்பால் | செய்தான் | செய்கிறான் | செய்வான் |
| படர்க்கைப் பெண்பால் | செய்தாள் | செய்கிறாள் | செய்வாள் |
| படர்க்கைப் பலர்பால் | செய்தார் | செய்கிறார் | செய்வார் |
| படர்க்கை ஒன்றன்பால் | செய்தது | செய்கிறது | செய்யும் |
| படர்க்கைப் பலவின்பால் | செய்தன | செய்கின்றன | செய்யும் |

**முருகன்** : இந்த அட்டவணையைப் பார்த்தால் புரியும். எல்லாச் சொற்களுமே 'செய்' என்னும் வேர்ச் சொல்லைக் கொண்டவையே. ஆனால், தனித்தனியே பொருள் உணர்த்துகின்றன. காரணம் எண், பால், இடம்தான்.

**தேன்மொழி** : இதைப்போல வேறு வேர்ச்சொல் சேர்த்தால், வேறு வினைமுற்றுக் கிடைக்கும் அல்லவா?

**முருகன்** : இந்தச் சொற்கள் எல்லாம் பொருள் முடிந்துள்ளன. இனி, செய்த, செய்து எனச் சொல் பொருள் முடியாமல் நின்றால், எச்சமாகிவிடும். இந்த எச்சம், பெயர்ச்சொல்லால் பொருள் முடிவு பெற்றால், 'பெயரெச்சம்' எனப்படும்.

எ – கா : செய்த பொருள்.

வினைச்சொல்லால் பொருள் முடிவு பெற்றால், 'வினையெச்சம்' எனப்படும்.

எ – கா : செய்து பார்.

**மலர்விழி** : இந்தக் கலந்துரையாடல் மிகவும் பயனுள்ளதாக இருந்தது. இனியும், இதுபோலப் புரியாதவற்றைப் பேசித் தெளிவடையலாம்.

# கவிதைப்பேழை

# தமிழோவியம்

## குறுவினா

**1. தமிழோவியம் கவிதையில் உங்களை மிகவும் ஈர்த்த அடிகள் குறித்து எழுதுக.**

* வாழ்வியல் கூறுகளை நுட்பமாகக் கூறுவதோடு, மானிட இனத்தின் மேலான வாழ்க்கை வழிகாட்டியாக விளங்கும் அறிவுக் களஞ்சியம் பற்றிக் கூறும்

"மானிட மேன்மையைச் சாதித்திடக்
குறள் மட்டுமே போதுமே ஓதி, நட..."

என்னும் இந்த அடிகளே என்னை மிகவும் ஈர்த்தன.

**2. "அகமாய்ப் புறமாய் இலக்கியங்கள்**
**அவை அமைந்ததைச் சொல்லும் இலக்கணங்கள்"**
**இலக்கியங்களின் பாடுபொருளாக இவ்வடிகள் உணர்த்துவன யாவை?**

* அகம் – அகவாழ்க்கை – அகத்திணை. புறம் – புறவாழ்க்கை – புறத்திணை.
* மக்களின் அகவாழ்க்கை முறைகளையும், புறவாழ்க்கையோடு தொடர்புடைய செய்திகளையும் பாடுபொருளாகக் கொண்டு, இலக்கிய இலக்கணங்கள் தோன்றியுள்ளன என்பதனையே, இவ்வடிகள் உணர்த்துகின்றன.

www.Padasalai.Net

### கூடுதல் வினா

**3. தமிழின் தொன்மை, புதுமை குறித்துத் தமிழோவியம் கூறுவது யாது?**

➤ தமிழ்மொழி, உலகில் என்றென்றும் நிலைபெற்றது; தோற்றத்தில் தொன்மை உடையது.
➤ உலகில் புதியதாய்த் தோன்றும் தொழில்நுட்பத்தை ஏற்று, என்றும் புதியதாய்க் கணினித் தமிழாய் எக்காலத்திலும் நிலையாய் வலம்வரும் மொழி. இதுவே, 'தமிழோவியம்' கூறும் செய்தி.

### சிறுவினா

**1. 'புதுக்கோலம் புனைந்து தமிழ் வளர்ப்பாய்' – உங்கள் பங்கினைக் குறிப்பிடுக.**

✶ உலக நாடுகளுடன் போட்டியிட, அறிவுச் செல்வமாகிய அறிவியல், மருத்துவம், பொறியியல் சார்ந்த நூல்களை, உடனுக்குடன் மொழிபெயர்ப்புச் செய்வேன்.
✶ ஈரோடு தமிழன்பன் போலப் புதுப்புது வடிவங்களில் கவிதை நூல்களைப் படைப்பேன்.
✶ அரிய கருத்துகளை எளிய பாடல்கள்வழி வெளிப்படுத்திக் கவிதைக்குரிய காட்சிகளும் காட்சிகளுக்குரிய கவிதைகளும் எழுதுவேன்.
✶ பொறியியல், மருத்துவம், வேளாண்மை, அறிவியல் தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் புதுநூல்கள் இயற்றுவேன்.

### கூடுதல் வினாக்கள்

**2. தமிழின் தொன்மை, புதுமை குறித்துத் தமிழோவியம் கூறுவது யாது?**

➤ உலகில் தமிழானது, காலம் பிறக்கும்முன் பிறந்தது; எக்காலத்திலும் நிலையாய் இருப்பது. அதனால் புதிது புதிதாய்த் தோன்றும் தொழில் நுட்பத்தை ஏற்று, என்றும் இளமையாய்த் திகழ்கிறது.
➤ மக்களின் அகவாழ்க்கையை அகத்திணை என்றும், புறவாழ்க்கையைப் புறத்திணை என்றும் தொல்காப்பியர் இலக்கணம் வகுத்துக் கூறுகிறார்.
➤ காப்பியங்கள், தமிழின் பெருமைக்குச் சான்றாகும். நீதி நூலாகிய திருக்குறள், சமய நூல்கள், சித்தர்களின் பாடல்கள், சங்ககால இலக்கிய இலக்கணங்கள் தொன்மைக்குச் சான்றுகளாகும்.
➤ கணினி, இணையம் போன்ற அறிவியல் துறைகளில் தமிழின் புதுமையைக் காணலாம்.

**3. தமிழோவியம் – ஆசிரியர் குறிப்பு வரைக.**

| | |
|---|---|
| **பெயர்** | – ஈரோடு தமிழன்பன் |
| **ஊர்** | – ஈரோட்டை அடுத்த சென்னிமலை |
| **பிறப்பு** | – 1936ஆம் ஆண்டு |
| **பெற்றோர்** | – நடராசன், வள்ளியம்மை |
| **பெற்ற பட்டங்கள்** | – கரந்தைப் புலவர் கல்லூரியிலும், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலும் பட்டம் பெற்றவர். |
| **பணி** | – முனைவர் பட்டம் பெற்றுச் சென்னைப் புதுக்கல்லூரியில் பேராசிரியராகப் பணிபுரிந்தவர். சென்னைத் தொலைக்காட்சியில் செய்தி வாசிப்பாளராகப் பணியாற்றியுள்ளார். |
| **எழுதிய நூல்கள்** | – கட்டுரை, கவிதை நூல்களை எழுதியுள்ளார். வள்ளுவம் குறித்துப் புதுக்கவிதையில் ஒப்பியல் இலக்கியம் படைத்தவர். ஹைக்கூ, சென்ரியு, லிமரைக்கூ எனப் புதுப்புது வடிவங்களில் கவிதை நூல்களைத் தந்துள்ளார். |

### பலவுள் தெரிக

1. காலம் பிறக்கும்முன் பிறந்தது தமிழே! – எந்தக்
காலமும் நிலையாய் இருப்பதும் தமிழே!, – இவ்வடிகளில் பயின்று வரும் நயங்கள்.

அ) முரண், எதுகை, இரட்டைத்தொடை ஆ) இயைபு, அளபெடை, செந்தொடை
இ) மோனை, எதுகை, இயைபு ஈ) மோனை, முரண், அந்தாதி

**விடை : இ) மோனை, எதுகை, இயைபு**

### கூடுதல் பலவுள் தெரிக

2. தமிழில் சிற்றிலக்கிய வகைகள் ______ வகைப்படும்.

அ) 55 ஆ) 72 இ) 84 ஈ) 96

**விடை : ஈ) 96**

www.Padasalai.Net www.CBSEtips.in


### இலக்கணக்குறிப்பு

**எத்தனையெத்தனை, விட்டுவிட்டு** – அடுக்குத்தொடர்கள்

**ஏந்தி** – வினையெச்சம்

கால**மும்** – முற்றும்மை

### பகுபத உறுப்பிலக்கணம்

1. **வளர்ப்பாய் – வளர் + ப் + ப் + ஆய்**
   **வளர்** – பகுதி, **ப்** – சந்தி, **ப்** – எதிர்கால இடைநிலை,
   **ஆய்** – முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி.
2. **வளர்த்தது – வளர் + த் + த் + அ + து**
   **வளர்** – பகுதி, **த்** – சந்தி, **த்** – இறந்தகால இடைநிலை, **அ** – சாரியை,
   **து** – ஒன்றன்பால் வினைமுற்று விகுதி.

### கற்பவை கற்றபின்

**1. பிறமொழிக் கலப்பின்றித் தனித்தமிழில் இரண்டு மணித்துளிகள் வகுப்பறையில் பேசுக.**

மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய தலைவர் அவர்களே! சான்றோர் பெருமக்களே! இருபால் ஆசிரியப் பெருமக்களே! மாணவ மாணவியரே! அனைவருக்கும் என் உளம் கனிந்த வணக்கங்கள்.

பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள், சமூக நீதியை நிலைநாட்டவும், சாதி, சமய ஆதிக்கங்களை எதிர்த்துப் போராடவும் செய்தார். இந்தியத் தேசிய விடுதலை இயக்கத்தில் தீவிரமாக ஈடுபட்டார். இந்தியா, குயில் ஆகிய இதழ்களின்மூலம், மக்கள் மனத்தில் புரட்சிக் கருத்துகளை விதைத்தார். பெண்களிடம் மண்டிக் கிடந்த அறியாமை, கல்லாமை, அடிமையுணர்வு நீங்கப் பாடினார். ‘சஞ்சீவி பர்வதத்தின் சாரல்’ என்ற நூலில்,

“பெண்ணடிமை தீருமட்டும் பேசும் தமிழ்நாட்டில்
மண்ணடிமை தீர்ந்து வருதல் முயற்கொம்பே”

என்று பாடினார். தேசியம் விடுதலை பெறுவதற்குமுன்பே, சமுதாயத்தில் மூடநம்பிக்கைகளும் சாதிக் கொடுமைகளும் அழிய வேண்டும் என்று, அறைகூவல் விடுத்தார். தாய்மொழியாம் தமிழ்ப் பற்றாளர். ‘எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழென்று சங்கே முழங்கு’ எனப் பாடினார். வாழ்க புரட்சிக் கவிஞர்! வளர்க அவர்தம் தொண்டு! என்று கூறி, விடைபெறுகிறேன். நன்றி! வணக்கம்.

**2. கவிதையைத் தொடர்க.**

**அன்னை சொன்ன மொழி**
**ஆதியில் பிறந்த மொழி**
**இணையத்தில் இயங்கும் மொழி**
**ஈடிலாத் தொன்மை மொழி**
**உலகம் போற்றும் மொழி**
**ஊர்கூடி வியக்கும் மொழி**

எண்ணும் எழுத்துமாகிய மொழி
ஏற்றம் தருமே எமது மொழி
ஐயம் நீக்கும் அழகுமொழி
ஒற்றுமை வளர்க்கும் உயர்மொழி
ஓங்கிடச் செய்யும் உன்னதமொழி
ஔவை பேசிய அமுதமொழி – என்றும்
அழியா உயர்தனிச் செம்மொழி!

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

## கவிதைப்பேழை

# தமிழ்விடு தூது

### குறுவினா

1. **கண்ணி என்பதன் விளக்கம் யாது?**
   - ✶ அரும்புகளை எதிர்எதிராக வைத்துத் தொடுக்கப்படும் மாலைக்குக் கண்ணி என்று பெயர்.
   - ✶ அதுபோல இரண்டிரண்டு அடிகளில், செய்திகளை எதுகையால் தொடுப்பது கண்ணி எனப்படும்.

### கூடுதல் வினாக்கள்

2. **முத்தமிழ் – விரித்தெழுதுக.**
   - ➤ இயல்தமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் என்பது முத்தமிழின் விரிவாகும்.
3. **மூவகைப் பாவினங்களைக் கூறுக.**
   - ➤ தாழிசை, துறை, விருத்தம் என்பன, மூவகைப் பாவினங்களாகும்.
4. **தேவர்கள் பெற்ற முக்குணங்கள் யாவை?**
   - ➤ சத்துவம், இராசசம், தாமசம் என்பவை, தேவர்கள் பெற்ற முக்குணங்களாகும்.
5. **மனிதரால் உண்டாக்கப்பட்ட ஐந்து வண்ணங்களைக் கூறுக.**
   - ➤ வெண்மை, செம்மை, கருமை, பொன்மை, பசுமை ஆகியவை, மனிதரால் உண்டாக்கப்பட்ட ஐந்து வண்ணங்கள் ஆகும்.
   - ➤ வெண்மை – வெள்ளை, செம்மை – சிவப்பு, கருமை – கறுப்பு, பொன்மை – மஞ்சள், பசுமை – பச்சை.
6. **தமிழ்விடு தூதில் கூறப்படும் பத்துக் குணங்களைக் கூறுக.**
   - ➤ செறிவு, தெளிவு, சமநிலை, இன்பம், ஒழுகிசை, உதாரம், உய்த்தலில் பொருண்மை, காந்தம், வலி, சமாதி என்பவை, தமிழ்விடு தூதில் கூறப்பட்டுள்ள, பத்துக் குணங்கள் ஆகும்.
7. **உணவின் அறுசுவைகளைக் கூறுக.**
   - ➤ இனிப்பு, கசப்பு, புளிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, கார்ப்பு எனும் ஆறும், உணவின் அறுசுவைகளாகும்.
8. **செவிக்கு விருந்தளிக்கும் ஒன்பது சுவைகளைக் கூறுக.**
   - ➤ நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை, சமநிலை ஆகியவை, செவிக்கு விருந்தளிக்கும் ஒன்பது சுவைகள் ஆகும்.
9. **"ஒழியா வனப்பு எட்டுடையாய்" – எட்டுவகை வனப்புகளைக் கூறுக.**
   - ➤ **எட்டுவகை வனப்புகள் :** அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இழைபு.
10. **தமிழ்விடு தூது – நூற்குறிப்பு வரைக.**
   - ➤ தொண்ணூற்றாறு சிற்றிலக்கிய வகைகளில் தூதும் ஒன்று. 'வாயில் இலக்கியம்', 'சந்து இலக்கியம்' என்ற வேறு பெயர்களாலும் அழைக்கப்படுவது.
   - ➤ தூதுவிடும் பொருளைப் பாராட்டி, அதனோடு ஒத்த பிற எல்லாம் தகுதியுடையன அல்ல என்று கூறுதலும், தலைவன் பெருமை கூறுதலும், தன் துயரம் கூறி மாலை வாங்கி வருமாறு வேண்டுதலும் பொருட்கூறாகும்.
   - ➤ அன்னம்முதல் வண்டுஈறாகப் பத்தையும் தூது விடுவதாகக் 'கலிவெண்பாவால்' பாடப்படுவதாகும். தமிழ்விடு தூது, மதுரையில் கோயில் கொண்டுள்ள சொக்கநாதர்மீது காதல் கொண்ட பெண் ஒருத்தி, தன் காதலைக் கூறித் தமிழைத் தூது விடுவதாக அமைந்துள்ளது.
   - ➤ 268 கண்ணிகளைக் கொண்டுள்ள இதில், தமிழின் இனிமை, இலக்கிய வளம், பாச்சிறப்பு, சுவை, அழகு, திறம், தகுதி ஆகியன விரவியுள்ளன. இதனைப் பாடிய ஆசிரியர், இன்னார் என அறியப்படவில்லை.


Kindly send me your study materials to padasalai.net@gmail.com
www.Padasalai.Net

## நெடுவினா

**1. தூது அனுப்பத் தமிழே சிறந்தது – தமிழ்விடு தூது காட்டும் காரணங்களை விளக்கி எழுதுக.**

* இனிக்கும் தெளிந்த அமுதமே! அமிழ்தினும் மேலான முத்திக் கனியே! இயல் இசை நாடகமாய் விளங்கும் முத்தமிழே! அறிவால் உண்ணப்படும் தேனே! உன்னிடம் விடுக்கும் வேண்டுகோள் ஒன்று உள்ளது. கேட்பாயாக!
* தமிழே! புலவர்கள் குறவஞ்சி, பள்ளு எனப் பாடிச் சிறப்பு அடைவர். நீயும் அவற்றைப் படிக்க எடுத்துக் கொடுப்பாய்! தாழிசை, துறை, விருத்தம் என்னும் மூவகைப் பாவினங்களும் உனக்கு உறவாகும்.
* சிந்தாமணியாய் இருக்கும் உன்னை இசைப்பாடல்களுள் ஒருவகையான 'சிந்து' என்று அழைப்பது தகுமோ! அவ்வாறு கூறும் நா இற்று விழும் அன்றோ? வானவராகிய தேவர்கள்கூட மூன்று குணங்களையே பெற்றுள்ளார்கள். நீயோ! குற்றமில்லாத செறிவு முதலாகிய பத்துக் குணங்களையும் பெற்றுள்ளாய்.
* மனிதரால் உண்டாக்கப்பட்ட வண்ணங்கள் ஐந்து. நீயோ! நூறு வண்ணங்களைக் கொண்டுள்ளாய்! நாவால் உண்ணப்படும் உணவின் சுவையோ ஆறு. நீயோ! செவிகளுக்கு விருந்து அளிக்கும் ஒன்பது சுவைகளைப் பெற்றுள்ளாய்!
* உலகினர்க்கு அழியாத அழகு ஒன்றே ஒன்று. நீயோ! அம்மை முதலிய எட்டு அழகினைப் பெற்றுள்ளாய்! எனத் தமிழின் சிறப்புகளை எல்லாம் கூறித் தூது அனுப்பத் தமிழே சிறந்தது எனத் தமிழ்விடுதூது விளக்கியுள்ளது.

## இலக்கணக் குறிப்பு

**முத்திக்கனி** – உருவகம்

**தெள்ளமுது** – பண்புத்தொகை

**குற்றமிலா**, **சிந்தா** மணி, **அழியா** வனப்பு, **ஒழியா** வனப்பு – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சங்கள்

**நா** – ஓரெழுத்து ஒருமொழி

**செவிகள் உணவான** – நான்காம் வேற்றுமைத்தொகை

**அலது** – அல்லது என்பதன் இடைக்குறை.

## பகுபத உறுப்பிலக்கணம்

1. **கொள்வார் – கொள் + வ் + ஆர்**

   **கொள்** – பகுதி, **வ்** – எதிர்கால இடைநிலை, **ஆர்** – பலர்பால் வினைமுற்று விகுதி.

2. **உணர்ந்த – உணர் + த் (ந்) + த் + அ**

   **உணர்** – பகுதி, **த்** – சந்தி, 'ந்' ஆனது விகாரம், **த்** – இறந்தகால இடைநிலை, **அ** – பெயரெச்ச விகுதி.

## பலவுள் தெரிக

1. தமிழ்விடுதூது, ______ என்னும் இலக்கிய வகையைச் சார்ந்தது.

   அ) தொடர்நிலைச் செய்யுள் ஆ) புதுக்கவிதை

   இ) சிற்றிலக்கியம் ஈ) தனிப்பாடல்

   **விடை : இ) சிற்றிலக்கியம்**

2. விடுபட்ட இடத்திற்குப் பொருத்தமான விடை வரிசையைக் குறிப்பிடுக.

   அ) ______ இனம் ஆ) வண்ணம் ______

   இ) ______ குணம் ஈ) வனப்பு ______

   i) மூன்று, நூறு, பத்து, எட்டு. ii) எட்டு, நூறு, பத்து, மூன்று.

   iii) பத்து, நூறு, எட்டு, மூன்று. iv) நூறு, பத்து, எட்டு, மூன்று.

   **விடை : i) மூன்று, நூறு, பத்து, எட்டு.**

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

3. **அழியா** வனப்பு, **ஒழியா** வனப்பு, **சிந்தா** மணி – அடிக்கோடிட்ட சொற்களுக்கான இலக்கணக்குறிப்பு
அ) வேற்றுமைத்தொகை ஆ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
இ) பண்புத்தொகை ஈ) வினைத்தொகை
**விடை : ஆ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.**

## கூடுதல் வினாக்கள்

4. தமிழரால் உண்டாக்கப்பட்ட வண்ணங்கள் ______.
அ) ஐந்து ஆ) நான்கு இ) ஏழு ஈ) ஒன்பது
**விடை :** அ) ஐந்து

5. தூது இலக்கியம், ______ வெண்பாவால் பாடப்படும்.
அ) குறள் ஆ) கலி இ) வஞ்சிப்பா ஈ) ஆசிரியப்பா
**விடை :** ஆ) கலி

6. இரண்டிரண்டு பூக்களை வைத்துத் தொடுக்கும் மாலைக்குக் ______ என்று பெயர்.
அ) மாலை ஆ) தொடையல் இ) கண்ணி ஈ) கொத்து
**விடை :** இ) கண்ணி

## கற்பவை கற்றபின்

**1. 'நம் எண்ணங்களையும் கருத்துகளையும் எளிதாக எடுத்துரைக்க உதவுவது தமிழ்மொழி' – என்ற தலைப்பில் ஒருபக்க அளவில் உரை ஒன்றை எழுதுக.**

அன்பு நண்பர்களே! மக்கள் தங்களுடைய உளக்கருத்தை மற்றவர்க்குத் தெரிவிக்க உதவும் கருவியே மொழி. நம் தாய்மொழியாகிய தமிழ், இனிமையும் எளிமையும் உடைய மொழியாகும். தமிழ்மொழியில் உள்ள இலக்கண நூல்களையும், இலக்கியங்களையும் தெளிவாகக் கற்பது, நாம் நம் மொழியைத் தெளிவாகப் பேசவும் எழுதவும் துணைபுரியும்.

தாய்மொழி என்பது உலகை அறிமுகம் செய்ய உதவுகிறது. அத்துடன் நம் உள்ளத்தில் தோன்றும் எண்ணங்களைக் கருத்தாக்கி வெளியிடவும் உதவுகிறது. தமிழ், தமிழினத்திற்குச் சுயசிந்தனையை வளர்க்கும். பிறமொழியில் பேச முயல்வதும் எழுத முயல்வதும் முழுமையான அறிவைப் பெற முடியுமா என்பது கேள்விக்குறியே!

தமிழ் அல்லாத பிறமொழி, நம் சிந்தனை வேகத்தைக் குறைக்கும்; பேசும்போது சொற்கள் வந்து விழும் வேகத்தைக் கட்டுப்படுத்தும்; கருத்தை வெளிப்படுத்துவதற்கு உரிய சொல் உடனடியாகக் கிடைக்காது. மொழியை உச்சரிக்கும் முறை தெளிவாக அமையாது; அதனைக் கேட்பவர்க்குத் தெளிவான பொருள் புரிதல் இருக்காது.

தமிழ்மொழியில் அறிவுரைகள் சொல்வதும், அறிவுரை பெறுவதும் எவ்வளவு எளிதோ, அவ்வளவு எளிது பலவேறு துறை பற்றிய செய்திகளைக் கற்பதும் புரிந்து கொள்வதுமாகும். காந்தியடிகள், தம் சுயசரிதையை முதலில் தம் தாய்மொழியான குஜராத்தியில்தான் எழுதினார். தாகூர், நோபல் பரிசு பெற்ற கீதாஞ்சலியை அவரது தாய்மொழியான வங்காளியில்தான் முதலில் பாடினார். பின்னரே அது ஆங்கில மொழிக்கு மாறியது. ஆகவே, நம் தாய்மொழியான தமிழ்மொழியில் கற்று, சிந்தித்து, அறிவை வளர்த்து, அரிய கண்டுபிடிப்புகளை வெளியிட்டு உயர்வு பெறுவோமாக. நன்றி! வணக்கம்.

**2. படித்துத் திரட்டுக.**

**"காதொளிரும் குண்டலமும் கைக்கு வளையாபதியும் கருணை மார்பின்**
**மீதொளிர் சிந்தாமணியும் மெல்லிடையில் மேகலையும் சிலம்பார் இன்பப்**
**போதொளிரும் திருவடியும் பொன்முடி சூளாமணியும் பொலியச் சூடி**
**நீதியொளிர் செங்கோலாய்த் திருக்குறளைத் தாங்குதமிழ் நீடுவாழ்க"**

**– கவியோகி சுந்தானந்த பாரதியார்**

**இப்பாடல் காட்டும் இலக்கியங்களின் பெயர்களை வரிசைப்படுத்துக.**

குண்டலகேசி, வளையாபதி, சீவகசிந்தாமணி, மணிமேகலை, சிலப்பதிகாரம், சூளாமணி, திருக்குறள்.

www.Padasalai.Net

# விரிவானம்

## வளரும் செல்வம்

### குறுவினா

**1. கணினி சார்ந்து நீங்கள் அறிந்த எவையேனும் ஐந்து தமிழ்ச் சொற்களைத் தருக.**

✶ மென்பொருள், உலவி, உறை, செதுக்கி, மடிக்கணினி.

### கூடுதல் வினாக்கள்

**2. கணினி என்றால் என்ன?**

➤ கணினி என்பது, எண் முதலான தரவுகளை உட்கொண்டு, முறைப்படி கோத்த ஆணைக் கோவைகளைச் செயற்படுத்தும் கருவி.

**3. கீழ்க்கண்ட பெயர்களின் எண் அளவுகளை எழுதுக.**

ஒருமா, இருமா, காணி, அரைக்காணி, முந்திரி.

ஒருமா $\frac{1}{20}$, இருமா $\frac{1}{10}$, காணி $\frac{1}{80}$, அரைக்காணி $\frac{1}{160}$, முந்திரி $\frac{1}{320}$.

### சிறுவினா

**1. வளரும் செல்வம் – உரையாடலில் குறிப்பிடப்படும் பிறமொழிச்சொற்களைத் தொகுத்து, அவற்றுக்கு இணையான தமிழ்ச் சொற்களைப் பட்டியலிடுக.**

| | |
|---|---|
| Software / சாப்ட்வேர் | – மென்பொருள் |
| Folder / ஃபோல்டர் | – உறை |
| Browser / ப்ரௌசர் | – உலவி |
| Laptop / லேப்டாப் | – மடிக்கணினி |
| Crop / க்ராப் | – செதுக்கி |
| Million / மில்லியன் | – மெய்யிரம் |
| Cursor / கர்சர் | – ஏவி அல்லது சுட்டி |
| Billion / பில்லியன் | – தொள்ளுண் |
| Cyberspace / சைபர்ஸ்பேஸ் | – இணையவெளி |
| www.tamil.in | – இணைய இணைப்பு |
| Server / சர்வர் | – வையக விரிவுவலை வழங்கி |

### கூடுதல் வினா

**2. பிறமொழிச்சொற்களைத் தொகுத்து அவற்றுக்கு இணையான தமிழ்ச் சொற்களைப் பட்டியலிடுக.**

| | | | |
|---|---|---|---|
| Moniter / மானிடர் | – ஒளித்திரை | Keyboard / கீபோர்டு | – விசைப்பலகை |
| Mouse / மவுஸ் | – சுட்டெலி | Printer / பிரின்டர் | – அச்சுப்பொறி |
| Scanner / ஸ்கேனர் | – வருடி | Online / ஆன்லைன் | – இயங்கலை |
| Wifi / வைஃபை | – அருகலை | You tube / யுடியூப் | – வலையொலி |
| We chat / வி சாட் | – அளாவி | Broad band / ப்ராட்பேன்டு | – ஆலலை |

### பலவுள் தெரிக

**சரியான விடையைத் தேர்ந்தெடுக்க.**

1. தமிழ்ச்சொல்லாகிய நாவாய் என்பதே, ஆங்கிலத்தில் ______ என ஆகியுள்ளது.

அ) நீர் ஆ) நீர்யா இ) நேவி ஈ) தோணி

**விடை : இ) நேவி**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net

## கற்பவை கற்றபின்

1. நீங்கள் நாள்தோறும் வகுப்பறையில் மிகுதியாகப் பயன்படுத்தும் சொற்களைப் பட்டியலிட்டு, அவற்றில் இடம்பெற்றுள்ள பிறமொழிச் சொற்களுக்கு நிகரான தமிழ்ச்சொற்களை அறிந்து எழுதுக.

| சொற்பட்டியல் | பிறமொழிச் சொற்கள் | நிகரான தமிழ்ச்சொற்கள் |
|---|---|---|
| வகுப்பு | க்ளாஸ் ரூம் – Class Room | வகுப்பறை |
| புத்தகம் | புக் – Book | நூல் |
| பிளாக்போர்டு | பிளாக் போர்டு – Black Board | கரும்பலகை |
| பேனா | பென் – Pen | மை எழுதுகோல் |
| பென்சில் | பென்சில் – Pencil | கரி எழுதுகோல் |
| நோட்டு | நோட்புக் – Notebook | எழுதுசுவடி |

2. உரையாடலை நிறைவு செய்க. அவற்றுள் இடம்பெறும் பிறமொழிச் சொற்களைத் தமிழ்ப்படுத்துக.

அருண் : ஹலோ! நண்பா!

நளன் : ______________

அருண் : ஆமாம்! டென் இயர்ஸ் ஆச்சு இல்லையா?

நளன் : ஆமாம். நான் இப்ப மல்ட்டி நேஷனல் கம்பெனி ஒன்றில் பிராஜக்ட் மேனேஜரா இருக்கேன். நீ?

அருண் : ______________

நளன் : அந்த காலேஜ்லதான் என் தம்பி பஸ்டு இயர் படிக்கிறான்.

அருண் : ______________

நளன் : பை! பை!

விடை :

அருண் : ஹலோ! நண்பா!

நளன் : வணக்கம். உன்னைப் பார்த்து ரொம்ப நாளாச்சு.

அருண் : ஆமாம்! டென் இயர்ஸ் ஆச்சு இல்லையா?

நளன் : ஆமாம். நான் இப்ப மல்ட்டி நேஷனல் கம்பெனி ஒன்றில் பிராஜக்ட் மேனேஜரா இருக்கேன். நீ?

அருண் : நான் அருணை பொறியியல் கல்லூரியில், உதவிப் பேராசிரியராகப் பணிபுரிகிறேன்.

நளன் : அந்த காலேஜ்லதான் என் தம்பி பஸ்டு இயர் படிக்கிறான்.

அருண் : நன்றி வணக்கம்.

நளன் : பை! பை!

விடை :
- **ஹலோ** – அடடே!
- **டென் இயர்ஸ்** – பத்து ஆண்டுகள்
- **பிராஜக்ட் மேனேஜர்** – செயல்திட்ட மேலாளர்
- **காலேஜ்** – கல்லூரி
- **பஸ்டு இயர்** – முதலாம் ஆண்டு
- **பைபை** – சென்று வருகிறேன்.
- **மல்டி நேஷனல் கம்பெனி** – தேசியப் பல்நோக்கு நிறுவனம்

www.Padasalai.Net

# கற்கண்டு

# தொடர் இலக்கணம்

## குறுவினா

1. **செய்வினையைச் செயப்பாட்டு வினையாக மாற்றும் துணைவினைகள் இரண்டினை எடுத்துக்காட்டுடன் எழுதுக.**

**செய்வினையைச் செயப்பாட்டு வினையாக மாற்றும் துணை வினைகள் :** படு, பெறு

ஆசிரியர் பாடம் படித்தார். – செய்வினை

பாடம் ஆசிரியரால் படிக்கப்பட்டது. – செயப்பாட்டுவினை

அரசன் கோவில் கட்டினான். – செய்வினை

கோவில் அரசனால் கட்டப்பட்டது. – செயப்பாட்டுவினை

2. **வீணையோடு வந்தாள், கிளியே பேசு – தொடரின் வகையைச் சுட்டுக.**

வீணையோடு வந்தாள். – வேற்றுமைத்தொடர் (ஒடு – மூன்றாம் வேற்றுமை உருபு)

கிளியே! பேசு. – விளித்தொடர்.

## சிறுவினா

1. **தன்வினை, பிறவினை, காரணவினைகளை எடுத்துக்காட்டுடன் வேறுபடுத்திக் காட்டுக.**

- **தன்வினை** – வினையின் பயன் எழுவாயைச் சேருதல்.
  திருடன் **திருந்தினான் – தன்வினை.**
- பிறவினை – வினையின் பயன் பிறரையோ, பிறவற்றையோ (அடையாளம்) சென்றடைதல்.
  காவலர் திருடனைத் திருத்தினார் – பிறவினை.
- **காரணவினை (அ) இயக்குவினை** – எழுவாயின் செயல் பிறவற்றைச் சேர்வதையும், அச்செயல் பிறரைக் கொண்டு செய்யப்படுவதையும் குறிக்கும்.
  காவலர் திருடனைத் திருந்தச் செய்தார் – காரணவினை

| தன்வினை | பிறவினை | காரணவினை |
|---|---|---|
| நட | நடத்து | நடத்துவி |
| காண் | காட்டு | காட்டுவி |

வினைவகைகள் – தன்வினை, பிறவினை, காரணவினை

| தன்வினை | பிறவினை | காரணவினை |
|---|---|---|
| நட | நடத்து | நடத்தச் செய்தார் |
| அடங்கு, திருந்தினான் | அடக்கு, திருத்தினான் | அடக்கச்செய்தாள், திருத்தச் செய்தான் |
| ஆடினான், மாறுவாள் | ஆட்டினான், மாற்றுவாள் | ஆட்டுவித்தான் / ஆடவைத்தான்<br>மாற்றுவித்தான் / மாறச்செய்தான் |
| செய்தான், வா | செய்வித்தான், வருவித்தார் | செய்யவைத்தான், வரவைத்தார் |
| காண், ஆடு | காட்டு, ஆட்டு | காட்டுவி, ஆட்டுவி |

## செய்வினை, செயப்பாட்டுவினை

**செய்வினை** : செய்பவரை முதன்மைப்படுத்தும் வினை செய்வினையாகும்.

எ – டு : திருவள்ளுவர் திருக்குறளை இயற்றினார்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net

**செயப்பாட்டு வினை :** செயப்படுபொருளை முதன்மைப்படுத்தும் வினை செயப்பாட்டுவினையாகும்.

**எ – டு :** திருக்குறள் திருவள்ளுவரால் இயற்றப்பட்டது.

'படு' என்னும் துணைவினை, செயப்பாட்டு வினையாக உருவாகிறது.

இயற்றினார் – இயற்றப்பட்டது – படு; புகழ்ந்தான் – புகழப்பட்டது – படு; வீழ்ந்தது – வீழ்த்தப்பட்டது – படு.

## பொருத்தமான விடையைத் தேர்வு செய்க.

1. செய்பவரை முதன்மைப்படுத்தும் வினை ______.

அ) தன்வினை ஆ) உடன்பாட்டுவினை

இ) செய்வினை ஈ) பிறவினை

**விடை :** இ) செய்வினை

2. செயப்படுபொருளை முதன்மைப்படுத்தும் வினை ______.

அ) செய்வினை ஆ) செயப்பாட்டுவினை

இ) பிறவினை ஈ) தன்வினை

**விடை :** ஆ) செயப்பாட்டுவினை

## தொடர் வகைகள்

| | |
|---|---|
| நட | ஒருசொல் தொடர் |
| மன்னன் வந்தான் | எழுவாய்த் தொடர் |
| வந்தான் மன்னன் | வினைமுற்றுத் தொடர் |
| அண்ணலோடு வருவான் | வேற்றுமைத் தொடர் (ஓடு – வேற்றுமை உருபு) |
| நண்பா கேள் | விளித் தொடர் |
| உண்ணச் சென்றான் | தெரிநிலை வினையெச்சத் தொடர் |
| நன்கு பேசினான் | குறிப்பு வினையெச்சத் தொடர் (வினையடைத் தொடர்) |
| பாடும் குயில் | தெரிநிலைப் பெயரெச்சத் தொடர் |
| இனிய காட்சி | குறிப்புப் பெயரெச்சத் தொடர் (பெயரடைத் தொடர்) |
| பாம்பு பாம்பு, வா வா வா வா | அடுக்குத் தொடர் |

## பயன்பாட்டுத் தொடர்

| | |
|---|---|
| செழியன் நேற்று வந்தான் | தன்வினைத் தொடர் |
| செழியன் நேற்று வரவழைத்தான் | பிறவினைத் தொடர் |
| கவிதா உரை படித்தாள் | செய்வினைத் தொடர் |
| உரை கவிதாவால் படிக்கப்பட்டது | செயப்பாட்டுவினைத் தொடர் |
| குமரன் மழையில் நனைந்தான் | உடன்பாட்டுவினைத் தொடர் |
| குமரன் மழையில் நனையவில்லை | எதிர்மறைவினைத் தொடர் |
| என் அண்ணன் நாளை வருவான் | செய்தித் தொடர் |
| எவ்வளவு உயரமான மரம்! | உணர்ச்சித் தொடர் |
| உள்ளே பேசிக்கொண்டிருப்பவர் யார்? | வினாத் தொடர் |
| பூக்களைப் பறிக்காதீர் | கட்டளைத் தொடர் |
| இது நாற்காலி, அவன் மாணவன் | பெயர்ப் பயனிலைத் தொடர் |

www.Padasalai.Net

**இ) சொற்றொடர் வகைகளை அறிந்து, அவை பேசுவதற்கும் எழுதுவதற்கும் எவ்வாறு பயன்படுகின்றன என்பதைப் பதிவு செய்க.**

✶ நாம் தமிழைப் பிழையின்றிப் பேசவும், எழுதவும் இலக்கணத்தைத் தெரிந்துகொள்ள வேண்டும். கருத்தை உணர்த்தும் மொழி, பல சொற்றொடர்களால், வாக்கியங்களால் ஆன ஒன்று. வாக்கியங்களுக்கு இன்றியமையாமல் வேண்டப்படுவது எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்.
நான் பாடம் படித்தேன்.

✶ தமிழில் 'படித்தேன்' என்றாலே நான் படித்தேன். படித்தான் என்றால் அவன் படித்தான். வந்தன என்றால் அவை வந்தன என்பதும் நன்கு விளங்கும்.

✶ ஆங்கிலத்தில் Came என்று சொன்னால் பொருள் விளங்காது. I came, He came, They came என்றுதான் சொல்ல வேண்டும்.

✶ வாக்கிய அமைப்பு என்பது, எழுவாய், பயனிலை அடிப்படையில் மொழிதோறும் மாறுபடுவது இயற்கை.

✶ சொற்றொடர் அமைப்பு, மொழிதோறும் மாறுபடும்.

| | | |
|---|---|---|
| **வந்தான் இராமன்** | – | வினைமுற்றுத் தொடர் |
| **வந்து போனான்** | – | வினையெச்சத் தொடர் |
| **வந்த இராமன்** | – | பெயரெச்சத்தொடர் |
| **இராமன் அவன்** | – | எழுவாய்த் தொடர் |
| **இராமா வா** | – | விளித்தொடர் |
| **மரத்தை வெட்டினான்** | – | இரண்டாம் வேற்றுமைத்தொடர் |
| **வாளால் வெட்டினான்** | – | மூன்றாம் வேற்றுமைத்தொடர் |
| **வயலுக்கு வேலி** | – | நான்காம் வேற்றுமைத்தொடர் |
| **கல்வியிற் பெரியவன்** | – | ஐந்தாம் வேற்றுமைத்தொடர் |
| **இராமனது நூல்** | – | ஆறாம் வேற்றுமைத்தொடர் |
| **வீட்டின்கண் இருந்தாள்** | – | ஏழாம் வேற்றுமைத்தொடர் |
| **இராமனே கொண்டான்** | – | இடைச்சொல் தொடர் |
| **நனி வல்லவன்** | – | உரிச்சொல் தொடர் |
| **பாம்பு பாம்பு** | – | அடுக்குத்தொடர் |

பேசும் முறையும் எழுதும் வகையும் தெரிந்து பேசுவோம்.

## கற்பவை கற்றபின்

**1. தொடர்களை மாற்றி உருவாக்குக.**

அ) பதவியைவிட்டு நீக்கினான் – இத்தொடரைத் தன்வினைத் தொடராக மாற்றுக.
**விடை :** பதவியை விட்டு நீங்கினான்.

ஆ) மொழியியல் அறிஞர்கள், திராவிட மொழிகளை ஆய்வு செய்தனர் – இத்தொடரைப் பிறவினைத் தொடராக மாற்றுக.
**விடை :** மொழியியல் அறிஞர்கள், திராவிட மொழிகளை ஆய்வு செய்வித்தனர்.

இ) உண்ணப்படும் தமிழ்த்தேனே – இத்தொடரைச் செய்வினைத் தொடராக மாற்றுக.
**விடை :** உண்டேன் தமிழ்த்தேனை.

ஈ) திராவிட மொழிகளை, மூன்று மொழிக்குடும்பங்களாகப் பகுத்துள்ளனர் – இத்தொடரைச் செயப்பாட்டுவினைத் தொடராக மாற்றுக.
**விடை :** திராவிட மொழிகள், மூன்று மொழிக்குடும்பங்களாகப் பகுக்கப்பட்டுள்ளன.

உ) நிலவன், சிறந்த பள்ளியில் படித்தார் – இத்தொடரை பிறவினைத் தொடராக மாற்றுக.
**விடை :** நிலவன், சிறந்த பள்ளியில் படிக்க வைக்கப்பட்டார்.

www.Padasalai.Net

www.Padasalai.Net www.CBSEtips.in


**2. சொற்களைத் தொடர்களாக மாற்றுக.**

அ) மொழிபெயர் – தன்வினை, பிறவினைத் தொடர்களாக.

**விடை :** மொழி பெயர்ந்தது – தன்வினை; மொழி பெயர்த்தது – பிறவினை.

ஆ) பதிவுசெய் – செய்வினை, செயப்பாட்டுவினைத் தொடர்களாக.

**விடை :** ஆவணம் பதிவு செய்தார் – செய்வினை; ஆவணம் பதிவு செய்யப்பட்டது – செயப்பாட்டுவினை.

இ) பயன்படுத்து – பிறவினை, காரணவினைத் தொடர்களாக.

**விடை :** கவிதை எழுதத் தாளைப் பயன்படுத்தினான் – பிறவினை.
கவிதை எழுதத் தாளைப் பயன்படச் செய்தான் – காரணவினை.

ஈ) இயங்கு – செய்வினை, செயப்பாட்டுவினைத் தொடர்களாக.

**விடை :** அவன் இயங்கினான் – செய்வினை; அவன் இயக்கப்பட்டான் – செயப்பாட்டுவினை.

**3. பொருத்தமான செயப்படுபொருள் சொற்களை எழுதுக.**

(தமிழிலக்கிய நூல்களை, செவ்விலக்கியங்களை, நம்மை, வாழ்வியல் அறிவை)

அ) தமிழ், ______ கொண்டுள்ளது.

**விடை : செவ்விலக்கியங்களைக்**

ஆ) நாம், ______ வாங்க வேண்டும்.

**விடை : தமிழிலக்கிய நூல்களை**

இ) புத்தகங்கள், ______ கொடுக்கின்றன.

**விடை : வாழ்வியல் அறிவைக்**

ஈ) நல்ல நூல்கள், ______ நல்வழிப்படுத்துகின்றன.

**விடை : நம்மை**

**4. பொருத்தமான பெயரடைகளை எழுதுக. (நல்ல, பெரிய, இனிய, கொடிய)**

அ) எல்லாருக்கும் ______ வணக்கம்.

**விடை : இனிய**

ஆ) அவன், ______ நண்பனாக இருக்கிறான்.

**விடை : நல்ல**

இ) ______ ஓவியமாக வரைந்து வா.

**விடை : பெரிய**

ஈ) ______ விலங்கிடம் பழகாதே.

**விடை : கொடிய**

**5. பொருத்தமான வினையடைகளைத் தேர்வு செய்க. (அழகாக, பொதுவாக, வேகமாக, மெதுவாக)**

அ) ஊர்தி, ______ சென்றது.

**விடை : மெதுவாகச்**

ஆ) காலம், ______ ஓடுகிறது.

**விடை : வேகமாக**

இ) சங்க இலக்கியம், வாழ்க்கையை ______ காட்டுகிறது.

**விடை : அழகாக**

ஈ) இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டதை அனைவருக்கும் ______ காட்டு.

**விடை : பொதுவாக**

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in


**6. அடைப்புக்குறிக்குள் கேட்டுள்ளவாறு தொடர்களை மாற்றி எழுதுக.**

அ) நம் முன்னோர், இயற்கையோடு இயைந்த வாழ்வு நடத்தினர். (வினாத்தொடராய் மாற்றுக)

**விடை :** நம் முன்னோர், எத்தகைய வாழ்வு நடத்தினர்?

ஆ) இசையின்றி அமையாது பாடல். (உடன்பாட்டுத் தொடராய் மாற்றுக)

**விடை :** இசையுடன் அமைவது பாடல்.

இ) நீ இதைச் செய் எனக் கூறினேன் அல்லவா? (கட்டளைத் தொடராய் மாற்றுக)

**விடை :** நீ, இதைச் செய்!

ஈ) பாடினான். (எழுவாய்த் தொடராய் மாற்றுக)

**விடை :** அவன் பாடினான்.

**7. வேர்ச்சொற்களை வைத்துச் சொற்றொடர்களை உருவாக்குக.**

**அ) தா (அடுக்குத் தொடர், உடன்பாட்டுத் தொடர், பிறவினைத் தொடர்)**

தா தா – அடுக்குத் தொடர்

அவன் பொருளைத் தந்தான் – உடன்பாட்டுத் தொடர்

அவர் பொருளைத் தருவித்தார் – பிறவினைத் தொடர்

**ஆ) கேள் (எழுவாய்த் தொடர், வினைமுற்றுத் தொடர், வினாத் தொடர்)**

மாணவன் கேட்டான் – எழுவாய்த் தொடர்

கேட்டார் ஆசிரியர் – வினைமுற்றுத் தொடர்

யார் கேட்பவர்? – வினாத் தொடர்

**இ) கொடு (செய்தித் தொடர், கட்டளைத் தொடர், தெரிநிலை வினையெச்சத் தொடர்)**

பாரி, நெல்லிக்கனி கொடுத்தான் – செய்தித் தொடர்

ஏழைக்குப் பொருளைக் கொடு! – கட்டளைத் தொடர்

மன்னர், நிறையக் கொடுத்தார் – வினையெச்சத் தொடர்

**ஈ) பார் (செய்வினைத் தொடர், செயப்பாட்டுவினைத் தொடர், பிறவினைத் தொடர்)**

படம் பார்த்தான் – செய்வினைத் தொடர்

படம் பார்க்கப்பட்டது – செயப்பாட்டுவினைத் தொடர்

படம் பார்க்கச் செய்தார் – பிறவினைத் தொடர்

**8. சிந்தனை வினா**

அ) அவை யாவும் இருக்கின்றன.

அவை யாவையும் இருக்கின்றன.

அவை யாவும் எடுங்கள்.

அவை யாவையும் எடுங்கள்.

அவை யாவற்றையும் எடுங்கள்.

மேற்கொண்ட சொற்றொடர்கள் சரியானவையா? விளக்கம் தருக.

மேற்கொண்ட தொடர்களில் அவை யாவும், அவை யாவையும், அவை யாவற்றையும் என்ற மூன்று தொடர்களும், ஏதோ வேறுபாடுகள் உள்ளனபோலத் தோன்றுகின்றன.

யா + வ் + உம் = யாவும், யா + வ் + ஐ + ய் + உம் = யாவையும்

யா + வ் + அற்று + ஐ + ய் + உம் = யாவற்றையும்

இத்தொடர்கள் மூன்றும், பன்மையை உணர்த்துகின்ற பொருள் வேறுபாடுகளற்ற தொடர்களே.

'உம்' என்னும் இடைச்சொல், முழுமையை உணர்த்தும். யாவும் என்பது முற்றும்மை. 'உம்' என்னும் இடைச்சொல் சேரும்போதே, எல்லாம் என்ற பன்மையை உணர்த்தும்.

'யாவையும்' என்ற தொடரில், 'ஐ' என்னும் இரண்டாம் வேற்றுமை உருபும், பயன் விளைத்தல் காணத்தக்கதே.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

யாவும் – யாவையும் என்ற சொற்களில் ஏதோ வேறுபாடு உள்ளது போலத் தோன்றுகிறது.

யாவும் என்ற சொல் தருகிற எல்லாம் என்ற பொருளையே யாவையும், யாவற்றையும் என்ற சொற்கள் தருகின்றன. வேறு எதுவும் விடுபடவில்லை. 'ஐ' என்ற வேற்றுமை உருபும், 'அற்று' என்ற சாரியையும் சேர்வதால், எல்லாம் என்ற பொருள் தருவதை முழுமைப்படுத்தியதைப்போல் ஒரு பிரமை ஏற்படுகிறதே தவிர, வேறொன்றும் இல்லை. மூன்றும் பொருள் பொருத்தமுடன் இணங்குகின்றன.

**ஆ) நீங்கள் ஒரு நாளிதழில் பணிபுரிகிறீர்கள். அங்குப் புதிய வார இதழ் ஒன்று தொடங்கவிருக்கிறீர்கள். அதற்காக அந்நாளிதழில் விளம்பரம் தருவதற்குப் பொருத்தமான சொற்றொடர்களை வடிவமைத்து எழுதுக.**

**அமுதகீதம்**

வாரஇதழ் வெளியீட்டு விழா

அன்புடையீர்,

வணக்கம். சித்திரைத் திங்கள் முதல்நாள் 14.04.2019முதல் 'அமுதகீதம்' என்னும் வாரஇதழ் வெளிவர இருக்கிறது. மக்கள் புத்துணர்ச்சி பெறும்வகையில் அனைத்துத் துறைகள் சார்ந்த செய்திகளைக் கொண்டு, பன்முகப் பொலிவுடன் வெளிவர இருக்கிறது.

இவண்

பொறுப்பாசிரியர்,

டாக்டர் மா. சிவச்சந்திரன்.

**இ) சொற்றொடர் வகைகளை அறிந்து, அவை எவ்வாறு பேசுவதற்கும் எழுதுவதற்கும் பயன்படுகின்றன என்பதைப் பதிவு செய்க.**

சொற்களில் பெயர், வினை மாறுபாட்டை அறிதல் வேண்டும். என்ன செய்தியைச் சொல்லப் போகிறோமோ, அதற்கு ஏற்ற சொற்களைத் தேர்வு செய்ய வேண்டும். கருத்துக்கு ஏற்ப எளிய, தெளிவான, பொருள் மயங்கச் செய்யாத சொற்களைத் தேர்வு செய்ய வேண்டும். வாக்கியங்களை வகைப்படுத்தி எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் அமைய உரைக்க வேண்டும். பொருள் மயக்கம் தராதவகையில் தொடர்களைப் பேசவேண்டும்.

எழுத்து தனித்தோ எழுத்துகள் சேர்ந்தோ ஒரு பொருளைத் தருவது சொல் எனப்படும். சொற்கள் பல தொடர்ந்து நின்று பொருள் தருவது சொற்றொடர் எனப்படும்.

**எ – டு :** அவன் / பாடம் / படித்தான் – தனித்தனிச் சொற்கள்

அவன் பாடம் படித்தான் – சொற்றொடர்

இது தொகைநிலைத்தொடர், தொகாநிலைத்தொடர் என, இரண்டு வகைப்படும்.

**தொகைநிலைத்தொடர்** : வேற்றுமை, வினை, பண்பு, உவமை, உம்மை, அன்மொழி என, ஆறு வகைப்படும்.

**தொகாநிலைத்தொடர்** : எழுவாய் முதலாக ஒன்பது வகைப்படும்.

**சான்று** : கண்ணன் பாடம் படித்தான்.

எழுதும்போது தொடரில் எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் ஆகிய மூன்றையும் பொருள் பொருத்தமுடன் எழுத வேண்டும்.

கண்ணன் – எழுவாய், படித்தான் – பயனிலை, பாடம் – செயப்படுபொருள். பயனிலையை இறுதியில் எழுத வேண்டும்.

பேச்சு வழக்கில் கண்ணன் படித்தான் என்று சொன்னாலே போதுமானது.

படித்தேன், படித்தாய், படித்தாள் எனப் பயனிலையை மட்டுமே சொன்னால் நான் படித்தேன், நீ படித்தாய், அவள் படித்தாள் என்ற பொருள் எளிதில் விளங்கும்.

www.Padasalai.Net

**ஈ) வந்திருப்பவர்கள் அனைவரும் இருக்கையில் அமருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இத்தொடர் ஆங்கிலத்திலிருந்து நேரடியான தமிழ் மொழிபெயர்ப்பாக இருந்தாலும், மொழிமரபை இத்தொடரில் பேணுகிறோமா?**

வந்திருப்பவர்கள் அனைவரும் – எழுவாய்
இருக்கையில் அமருமாறு – செயப்படுபொருள்
கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள் – (செயப்பாட்டுவினை) பயனிலை

எழுவாய்க்கு ஏற்ற வினைமுடிவு (கேட்டுக் கொள்கிறோம்) இங்குக் கொடுக்கப்படவில்லை. பொருள் வேறுபாடின்றித் தெளிவாகத் தொடர் அமைந்துவிட்டது.

## மொழியை ஆள்வோம்

**மொழிபெயர்க்க.**

1. Linguistics – மொழி ஆராய்ச்சி
2. Literature – இலக்கியம்
3. Philologist – மொழியியற் புலமை
4. Polyglot – பன்மொழியாளர்கள்
5. Phonologist – ஒலிச்சின்ன வல்லுநர்
6. Phonetics – ஒலிப்பியல்

**அடைப்புக்குள் உள்ள சொற்களைக் கொண்டு கோடிட்ட இடங்களில் பொருத்தமான வினைமுற்றாக மாற்றி எழுதுக.**

1. இந்திய மொழிகளின் மூலமும் வேருமாகத் தமிழ் ______. (திகழ்)
   **விடை :** இந்திய மொழிகளின் மூலமும் வேருமாகத் தமிழ் திகழ்கிறது.
2. வைதேகி, நாளை நடைபெறும் கவியரங்கில் ______. (கலந்துகொள்)
   **விடை :** வைதேகி, நாளை நடைபெறும் கவியரங்கில் கலந்துகொள்வாள்.
3. உலகில் மூவாயிரம் மொழிகள் ______. (பேசு)
   **விடை :** உலகில் மூவாயிரம் மொழிகள் பேசப்படுகின்றன.
4. குழந்தைகள் அனைவரும் சுற்றுலாச் ______. (செல்)
   **விடை :** குழந்தைகள் அனைவரும் சுற்றுலாச் செல்கின்றனர்.
5. தவறுகளைத் ______. (திருத்து)
   **விடை :** தவறுகளைத் திருத்துவேன்.

**வடிவம் மாற்றுக : பின்வரும் பத்தியைப் படித்து, அச்செய்தியை உங்கள் பள்ளி அறிவிப்புப் பலகையில் இடம்பெறும் அறிவிப்பாக மாற்றுக :**

மருதூர் அரசு மேனிலைப் பள்ளி, இருபத்தைந்து ஆண்டுகளாகச் சிறந்த கல்விப்பணியை வழங்கி வருகிறது. இப்பள்ளி, சிறந்த கவிஞராகத் திகழும் 'இன்சுவை' முதலான பன்முகப் படைப்பாளிகளை உருவாக்கிய பெருமை கொண்டது. ஒருசோற்றுப் பதமாய் மருதூர்ப் பள்ளி மாணவி 'பூங்குழலி' படைத்த "உள்ளங்கை உலகம்" என்ற நூலின் வெளியீட்டு விழா, 2019ஆம் ஆண்டு, சனவரித் திங்கள் 21ஆம் நாள் திங்கட்கிழமை, பிற்பகல் 3.00 மணியளவில் நடைபெற உள்ளது. அவ்விழாவில் (கின்னஸ் சாதனை படைத்த) முன்னாள் மாணவர் 'இன்சுவை', நூலை வெளியிட்டுச் சிறப்புரை ஆற்றுவார். மருதூர்ப் பள்ளி விழா அரங்கத்தில் நிகழும் இந்நூல் வெளியீட்டு விழாவில் கலந்துகொள்ள, அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**அறிவிப்புப் பலகை**

**அரசு மேனிலைப் பள்ளி**

**மருதூர்**

அன்புடையீர்,

வணக்கம். 21.01.2023 திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில், பள்ளி விழா அரங்கத்தில் நம் பள்ளி மாணவி 'பூங்குழலி' எழுதிய 'உள்ளங்கை உலகம்' என்னும் நூல் வெளியீட்டு விழா நடைபெற உள்ளது.

**சிறப்புரை :**

'கின்னஸ்' சாதனை படைத்த முன்னாள் மாணவர் – சிறந்த கவிஞர் 'இன்சுவை' அவர்கள், சிறப்புரை ஆற்றவும், நூலை வெளியிடவும் உள்ளார்.

அனைவரும் வருகவே! தமிழ்அமுதம் பருகவே!

www.Padasalai.Net

**தொடரைப் பழமொழி கொண்டு நிறைவு செய்க:**

1. இளமையில் கல்வி ______.
   **விடை :** இளமையில் கல்வி சிலைமேல் எழுத்து.
2. சித்திரமும் கைப்பழக்கம் ______.
   **விடை :** சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்
3. கல்லாடம் படித்தவரோடு ______.
   **விடை :** கல்லாடம் படித்தவரோடு சொல்லாடாதே.
4. கற்றோர்க்குச் சென்ற ______.
   **விடை :** கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு.
5. நூல்அளவே ஆகுமாம் ______.
   **விடை :** நூல்அளவே ஆகுமாம் நுண்ணறிவு.

## கடிதம் எழுதுக

**உங்களின் நண்பர், பிறந்தநாள் பரிசாக அனுப்பிய எழுத்தாளர் எஸ். இராமகிருஷ்ணனின், "கால்முளைத்த கதைகள்" என்னும் நூல் குறித்த கருத்துகளைக் கடிதமாக எழுதுக.**

அன்பு நண்பா!

நீ எனக்கு அனுப்பிய தரமான பரிசு, பிறர் தராத பரிசு, எஸ். ராமகிருஷ்ணன் அவர்களின் படைப்புகளுள் சிறந்த ஒன்றான 'கால் முளைத்த கதைகள்' என்னும் நூல். இதற்கு முன் இப்படி ஒரு நூலை நான் கண்டதில்லை. அடுத்த நாளே அமர்ந்து, வேறு பணிகளை நிறுத்திவிட்டு, நூல் முழுவதையும் படித்தேன். உன் அன்பால் பல அரிய செய்திகளை அறிந்தேன். அவர் எழுதிய பிற நூல்களையும் தேடி, நூலகம் செல்கிறேன். நானும் இனி நண்பர்களுக்கு இதுபோல் புத்தகங்களையே பரிசாக அளிப்பேன்.

அன்புடன்,

எழிலன்.

(அல்லது)

சென்னை– 1,

25.05.2022.

ஆருயிர் நண்பா!

வணக்கம். நலம். நலமறிய ஆவல். என்னுடைய பிறந்தநாள் பரிசாக நீ அனுப்பிய எழுத்தாளர் எஸ். இராமகிருஷ்ணன் எழுதிய 'கால் முளைத்த கதைகள்' என்ற கதைப்புத்தகம் கிடைத்தது. மிக்க மகிழ்ச்சி அடைந்தேன். அதில் உள்ள கதைகள் அனைத்தையும் படித்தேன். படிப்பதற்குப் புதுமையாகவும், மிக்க ஆர்வமாகவும் இருந்தது.

உலகம் தோன்றியது எப்படி என்ற வினாவிற்கு, இன்றுவரை தெளிவான விளக்கம் கிடைக்கவில்லை. உலகம் எப்படித் தோன்றியது என்ற கேள்விக்கு இந்நூலிலுள்ள கதைகள், வியப்பான விடைகளைத் தருகின்றன. பழங்குடியினர் முப்பதுபேர் சொன்ன கதைகளைக் கொண்டதாக இத்தொகுப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

'வண்ணத்துப்பூச்சி ஏன் பூக்களைச் சுற்றுகிறது' என்ற ஒரு கதை. வயதான பெண் ஒருத்தி தன்னுடைய பூந்தோட்டத்தில் பூத்திருந்த பூக்களை யாரோ பறித்துவிட்டதை எண்ணி, இரவு முழுவதும் வருந்தினாள். மறுநாள் மறைந்து இருந்து பூக்களைப் பறித்தவர்களைப் பிடித்துவிட்டாள்.

பூக்கள்மீது இருந்த ஆசையால் பறித்தோம் என்று ஓர் ஆணும் ஒரு பெண்ணும் கூறுகின்றனர். கிழவி அவ்விருவரையும் வண்ணத்துப் பூச்சிகளாக உருமாறச் செய்துவிடுகிறாள். அன்றிலிருந்து வண்ணத்துப்பூச்சிகள் பூக்களைச் சுற்றிக் கொண்டிருக்கின்றன என்று, கதை முடிகிறது.

இந்நூலில் பூனையை நாய் ஏன் துரத்துகிறது? கொசு ஏன் கடிக்கிறது? போன்ற தலைப்புகளில் கதைகள் உள்ளன. குழந்தைகள் மிகவும் விரும்பிப் படிப்பதற்கு ஏற்ற வகையில் இனிய எளிய சொற்களால், கதைகள் சிறியனவாக அமைந்துள்ளன. எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது.

அன்பு நண்பன்,

எழிலன்.

www.Padasalai.Net

## நயம் பாராட்டுக

விரிகின்ற நெடுவானில், கடற்ப ரப்பில்
விண்ணோங்கு பெருமலையில், பள்ளத் தாக்கில்
பொழிகின்ற புனலருவிப் பொழிலில், காட்டில்
புல்வெளியில், நல்வயலில், விலங்கில், புள்ளில்
தெரிகின்ற பொருளிலெல்லாம் திகழ்ந்து நெஞ்சில்
தெவிட்டாத நுண்பாட்டே, தூய்மை ஊற்றே,
அழகுஎன்னும் பேரொழுங்கே, மெய்யே, மக்கள்
அகத்திலும்நீ குடியிருக்க வேண்டு வேனே!

– ம.இலெ.தங்கப்பா

**திரண்ட கருத்து :** விரிந்த வானம், அகன்ற கடல், ஓங்கி உயர்ந்த மலை, பள்ளத்தாக்கு, அருவி, குளம், புல்வெளி, வயல், விலங்குகள், பறவைகள் போன்ற எல்லாப் பொருள்களிலும் இயற்கையாகிய இனிய சுவை, தூய்மை, அழகு என்னும் பேரொழுக்கம் காணப்படுகிறது. அதுபோல மக்கள் உள்ளத்திலும் அவை குடியிருக்க வேண்டும்.

**மையக்கருத்து :** இயற்கைக் காட்சிகளில் அழகு குடிகொண்டிருப்பதுபோல, மக்கள் அகக்காட்சியிலும் நேர்மையும் ஒழுங்கும் குடியிருக்க வேண்டுமென்கிறார் ஆசிரியர்.

**மோனை :** அடிதோறும் முதல் சீரில் முதல் எழுத்து ஒன்றிவருவது மோனைத்தொடையாகும்.

**வி**ரிகின்ற – **வி**ண்ணோங்கு, **தெ**ரிகின்ற – **தெ**விட்டாத, **அ**ழகு – **அ**கத்திலும்

**எதுகை :** இரண்டாம் எழுத்து ஒன்றிவருவது எதுகைத்தொடையாகும்.

வி**ரி**கின்ற – தெ**ரி**கின்ற

**அணிநயம் :** இப்பாடலில் செய்திகள் இயல்பாகக் கூறப்பட்டிருப்பதால், **இயல்பு நவிற்சி அணி** அமைந்துள்ளது. எளிய, இனிய சொற்களில் இயற்கை அழகு வருணித்து உரைக்கப்பட்டுள்ளது.

## நிகழ்ச்சி நிரல் வடிவமைக்க

**உங்கள் பள்ளி இலக்கிய மன்றத்தின் சார்பில் நடைபெறவிருக்கும் உலகத் தாய்மொழிநாள் (பிப்ரவரி 21) விழாவிற்கான நிகழ்ச்சி நிரல் ஒன்றினை வடிவமைக்க.**

### உலகத் தாய்மொழிநாள் (21.02.2020)

### நிகழ்ச்சி நிரல்

| | |
|---|---|
| **தலைமை** | : திருமதி கு. சீதா அம்மையார், பள்ளிச் செயலர். |
| **முன்னிலை** | : திருமிகு அரங்க. பழனிவேல், மாவட்டக் கல்வி அலுவலர், பொன்னேரி. |
| **வரவேற்புரை** | : திரு. கு. பாலசுந்தரம், தலைமையாசிரியர். |
| **அறிக்கை படித்தல்** | : ச. சண்முகம், மாணவச் செயலர் (12ஆம் வகுப்பு). |
| **தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடுதல்** | : டாக்டர். ச. மோகன். |
| **விழாப் பேருரை** | : முனைவர் க. அறிவொளி, இயக்குநர், தமிழ் வளர்ச்சித்துறை. |
| **வாழ்த்துரை** | : பேராசிரியர் அரங்க. இராமலிங்கம், சென்னைப் பல்கலைக்கழகம். |
| **நன்றியுரை** | : திரு. ப. கணபதி, தமிழாசிரியர். |
| **நாட்டுப்பண்** | : மாணவியர். |

www.Padasalai.Net

## மொழியோடு விளையாடு

**1. அந்தாதிச் சொற்களை உருவாக்குக.**

அத்தி, குருவி, விருது, இனிப்பு, வரிசையாக.

எ – கா

அத்தி
திகைப்பு
குருவி
புகழ்ச்சி
விதி
சிரிப்பு
விருது
திருப்பு
புன்னகை
துளசி
புரட்சி
இனிப்பு
கைப்பேசி
சிவப்பு
சித்து
புதிது
சிறப்பு
புடவை
துன்முகி
வரிசையாக
துலக்கு
வைப்புநிதி
புதுமை
கிழக்கு
குடுமி
மைனா
கருப்பு
திறமை
மிளகு
குடிவாழ்க்கை
புலவி
கிழக்கு
கைப்பை
விளக்கு
குடந்தை
குடுவை
தைப்பொங்கல்
வைதேகி
கிழமை
மைதா
தாய்தந்தை
தைப்பூசம்

**2. அகராதியில் காண்க**

**நயவாமை** – விரும்பாமை.

**கேழ்பு** – உவமை, ஒளி, நிறம்.

**புரிசை** – மதில், அரண், அரணம், இஞ்சி.

**கிளத்தல்** – புலப்படக் கூறுதல்; சிறப்பித்துக் கூறுதல்.

**செம்மல்** – தலைவன், தலைமை, இறைவன், சிவன்.

**கொடுக்கப்பட்ட வேர்ச்சொற்களைப் பயன்படுத்தி, விடுபட்ட கட்டங்களில் காலத்திற்கேற்ற வினைமுற்றுகளை நிறைவு செய்க.**

| வா | | | |
|---|---|---|---|
| | **இறந்தகாலம்** | **நிகழ்காலம்** | **எதிர்காலம்** |
| **நான்** | **வந்தேன்** | வருகிறேன் | வருவேன் |
| **நாங்கள்** | வந்தோம் | வருகிறோம் | **வருவோம்** |
| **நீ** | வந்தாய் | **வருகிறாய்** | வருவாய் |
| **நீங்கள்** | **வந்தீர்கள்** | வருகிறீர்கள் | வருவீர்கள் |
| **அவன்** | வந்தான் | **வருகிறான்** | வருவான் |
| **அவள்** | வந்தாள் | வருகிறாள் | வருவாள் |
| **அவர்** | **வந்தார்** | வருகிறார் | வருவார் |
| **அவர்கள்** | வந்தார்கள் | வருகிறார்கள் | வருவார்கள் |
| **அது** | வந்தது | வருகிறது | **வரும்** |
| **அவை** | வந்தன | **வருகின்றன** | வரும் |

www.Padasalai.Net

www.Padasalai.Net www.CBSEtips.in


3. தா, காண், பெறு, நீந்து, பாடு, கொடு போன்ற வேர்ச்சொற்களைப் பயன்படுத்தி மேற்கண்ட கட்டத்தினைப் போன்று காலத்திற்கேற்ற வினைமுற்றுகளை அமைத்து எழுதுக.

| | இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
|---|---|---|---|
| **தா** | தந்தான் | தருகிறான் | தருவான் |
| **காண்** | கண்டாள் | காண்கிறாள் | காண்பாள் |
| **பெறு** | பெற்றேன் | பெறுகிறேன் | பெறுவேன் |
| **நீந்து** | நீந்தினான் | நீந்துகிறான் | நீந்துவான் |
| **பாடு** | பாடினான் | பாடுகிறான் | பாடுவான் |
| **கொடு** | கொடுத்தார் | கொடுக்கிறார் | கொடுப்பார் |

4. அடைப்புக்குள் உள்ள சொற்களைக் கொண்டு எழுவாய், வினை அடி, வினைக்குப் பொருத்தமான தொடர் அமைக்க. (திடலில், போட்டியில், மழையில், வேகமாக, மண்ணை)

எ – கா : நான் திடலில் ஓடினேன். (தன்வினை)
நான் திடலில் மிதிவண்டியை ஓட்டினேன். (பிறவினை)
நான் நண்பர்களைத் திடலில் ஓடச் செய்தேன். (காரணவினை).

போட்டியில்
நான் போட்டியில் ஆடினேன்.
நான் போட்டியில் பொம்மையை ஆட்டினேன்.
நான் போட்டியில் மகளை ஆடச்செய்தேன்.


மழையில்
நான் மழையில் நனைந்தேன்.
நான் மழையில் சட்டையை நனைத்தேன்.
நான் மழையில் மகனை நனையச் செய்தேன்.

வேகமாக
நான் வேகமாக எழுதினேன்.
நான் வேகமாக எழுதுவித்தேன்.
நான் வேகமாக நவிலனை எழுதச் செய்தேன்.

மண்ணை
நான் மண்ணை அள்ளினேன்.
நான் மண்ணை அள்ளுவித்தேன்.
நான் மண்ணை முகிலனை அள்ளச் செய்தேன்.

| எழுவாய் / பெயர் | வினை அடி | தன்வினை | பிறவினை | காரணவினை |
|---|---|---|---|---|
| நான் | ஓடு | ஓடினேன் | ஓட்டினேன் | ஓடச் செய்தேன் |
| காவியா | வரை | வரைந்தாள் | வரைவித்தாள் | வரையச் செய்தாள் |
| கவிதை | நனை | நனைந்தாள் | நனைத்தாள் | நனையச் செய்தாள் |
| இலை | அசை | அசைந்தது | அசைத்தது | அசையச் செய்தது |
| மழை | சேர் | சேர்ந்தது | சேர்த்தது | சேர்க்கச் செய்தது |

காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



கூண்டிற்குள் அகப்பட்ட பறவைபோலக்
குடுவைக்குள் சிக்கிய சிறுமீனோ?
கூட்டத்தை விட்டுத் தனியே செல்லத்
தாவித்தான் பார்ப்போமே யென்ற
தனிமுயற்சியோ இக்காட்சி?

### கலைச்சொல் அறிவோம்

**உருபன்** – Morpheme
**ஒலியன்** – Phoneme
**ஒப்பிலக்கணம்** – Comparative Grammar
**பேரகராதி** – Lexicon

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

# இயல் – 2
# கவிதைப்பேழை
# புறநானூறு

### சிறுவினா

1. **நிலைத்த புகழைப் பெறுவதற்குக் குடபுலவியனார் கூறும் வழிகள் யாவை?**
   * உணவைத் தந்தவர் உயிர் தந்தவரே. 'உணவு எனப்படுவது நிலத்தொடு நீரே' என்பதால், உயிர் இனங்கள் வாழ மிக அவசியமான உணவை உற்பத்தி செய்ய, நிலமும் நீரும் வேண்டும்.
   * மழைநீரைக் கொண்டு நிலத்தைச் செம்மைபடுத்தித் தானிய வித்துகளை இட்டு, வேளாண்மையைச் செய்தனர். நீரினால் நிலத்தைச் செம்மைப்படுத்தியதால், வேளாண்மை சிறப்புப் பெறுகிறது.
   * உயிர் வாழ்க்கைக்கு உணவும், உணவிற்கு நிலமும், நிலத்திற்கு நீரும் அவசியம். ஆதலால் நீர்நிலை ஆதாரமாகிய ஏரி, குளம், குட்டைகளைக் கட்டிக் காப்பவர், குறையாத இன்பத்தோடு நிலைத்த புகழைப் பெறுவர். இதுவே குடபுலவியனார், நிலைத்த புகழைப் பெறுவதற்குக் கூறும் வழிகளாகும்.

### கூடுதல் வினா

2. **புறநானூறு பற்றிக் குறிப்புத் தருக.**
   * புறம் + நான்கு + நூறு = புறநானூறு. இஃது எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றாகும்.
   * 'புறம்' எனவும், 'புறப்பாட்டு' எனவும் வழங்கப்பெறும்.
   * புறத்திணைக்குரிய 400 பாடல்களைக் கொண்டுள்ளது.
   * சங்ககால மக்களின் வாழ்க்கை வரலாறு, பண்டைய வேந்தர்களின் வீரம், வெற்றி, கொடை குறித்தும், அரசர்களின் வரலாறுகள் குறித்தும், புலவர்கள், சான்றோர்கள் குறித்தும் கூறுகிறது.

**திணை – துறை விளக்கம்**

1. **பொதுவியல் திணை**
   * வெட்சிமுதல் பாடாண் திணைமுடிய உள்ள புறத்திணைகளுக்கு எல்லாம் பொதுவான செய்தி களையும், அவற்றில் கூறப்படாத செய்திகளையும் கூறுவதால், பொதுவியல் திணை எனப்பட்டது.
2. **பொருண்மொழிக் காஞ்சித்துறை.**
   * சான்றோர் தெளிவாக ஆராய்ந்து தெளிந்த பொருள்களைப் பிறர்க்குப் பயன்படுமாறு இதுவென அதன் இயல்பை எடுத்துரைத்து உணர்த்துவது, பொருண்மொழிக் காஞ்சித்துறையாகும்.

### இலக்கணக்குறிப்பு

**மூதூர், நல்லிசை, புன்னலம்** – பண்புத்தொகைகள்

**நிறுத்தல்** – தொழிற்பெயர்

**அமையா** – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

**நீரும்** நில**மும்,** உடம்**பும்** உயி**ரும்** – எண்ணும்மைகள்

**அடுபோர்** – வினைத்தொகை

**கொடுத்தோர்** – வினையாலணையும் பெயர்

### பகுபத உறுப்பிலக்கணம்

1. **நிறுத்தல் – நிறு + த் + தல்**
   **நிறு** – பகுதி, **த்** – சந்தி, **தல்** – தொழிற்பெயர் விகுதி.
2. **கொடுத்தோர் – கொடு + த் + த் + ஓர்**
   **கொடு** – பகுதி, **த்** – சந்தி, **த்** – இறந்தகால இடைநிலை,
   **ஓர்** – பலவின்பால் வினைமுற்று விகுதி.

### பலவுள் தெரிக

1. **மல்லல்** மூதூர் வயவேந்தே – கோடிட்ட சொல்லின் பொருள் என்ன?
   அ) மறுமை ஆ) பூவரசு மரம் இ) வளம் ஈ) பெரிய
   **விடை : இ) வளம்**



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

# இயல் – 3

## கற்கண்டு

## வல்லினம் மிகும் இடங்கள்

1. அ, இ என்னும் சுட்டெழுத்துகளுக்குப் பின்னும், அந்த, இந்த என்னும் சுட்டுத் திரிபுகளின் பின்னும், எ என்னும் வினாவெழுத்தின் பின்னும், எந்த என்னும் வினாச்சொல்லின் பின்னும் வல்லினம் மிகும்.
   **எ–டு:** அச்சட்டை, இந்தக் காலம், எத்திசை?, எந்தப் பணம்?
2. 'ஐ' என்னும் இரண்டாம் வேற்றுமை உருபு வெளிப்படும் தொடர்களில் வல்லினம் மிகும்.
   **எ–டு:** கதவைத்திற, தகவல்களைத்திரட்டு, காட்சியைப்பார்.
3. 'கு' என்னும் நான்காம் வேற்றுமை உருபு வெளிப்படும் தொடர்களில் வல்லினம் மிகும்.
   **எ–டு:** முதியவருக்குக் கொடு, மெட்டுக்குப் பாட்டு, ஊருக்குச் செல்.
4. என, ஆக போன்ற சொல்லுருபுகளின்பின் வல்லினம் மிகும்.
   **எ–டு:** எனக் கேட்டார், வருவதாகக் கூறு.
5. அதற்கு, இதற்கு, எதற்கு என்னும் சொற்களின்பின் வல்லினம் மிகும்.
   **எ–டு:** அதற்குச் சொன்னேன், இதற்குக் கொடு, எதற்குக் கேட்கிறாய்?
6. இனி, தனி ஆகிய சொற்களின்பின் வல்லினம் மிகும்.
   **எ–டு:** இனிக் காண்போம், தனிச் சிறப்பு.
7. மிக என்னும் சொல்லின்பின் வல்லினம் மிகும்.
   **எ–டு:** மிகப் பெரியவர்.
8. எட்டு, பத்து என்னும் எண்ணுப் பெயர்களின்பின் வல்லினம் மிகும்.
   **எ–டு:** எட்டுத் தொகை, பத்துப் பாட்டு.
9. ஓரெழுத்து ஒருமொழிக்குப்பின் வல்லினம் மிகும்.
   **எ–டு:** தீப்பிடித்தது, பூப்பந்தல்.
10. ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தின்பின் வல்லினம் மிகும்.
    **எ–டு:** கூவாக் குயில், ஓடாக் குதிரை.
11. நிலைமொழியாக வன்தொடர்க் குற்றியலுகரங்கள் இருந்து, வல்லின முதல்மொழியோடு புணர்கையில் வல்லினம் மிகும்.
    **எ–டு:** கேட்டுக் கொண்டான், விற்றுச் சென்றான்.
12. (அகர, இகர ஈற்று) வினையெச்சங்களுடன் புணர்கையில் வல்லினம் மிகும்.
    **எ–டு:** ஆடச் சொன்னார், ஓடிப் போனார்.
13. ஆறாம் வேற்றுமைத் தொகையில் வல்லினம் மிகும்.
    **எ–டு:** புலித்தோல்.
14. திசைப்பெயர்களின்பின் வலிமிகும்.
    **எ–டு:** கிழக்குப் பகுதி, வடக்குப் பக்கம்.
15. இருபெயரொட்டுப் பண்புத்தொகையில் வல்லினம் மிகும்.
    **எ–டு:** மல்லிகைப்பூ, சித்திரைத் திங்கள்.
16. உவமைத் தொகையில் வல்லினம் மிகும்.
    **எ–டு:** தாமரைப் பாதம்.
17. சால, தவ என்னும் உரிச்சொற்களின்பின் வல்லினம் மிகும்.
    **எ–டு:** சாலப் பேசினார், தவச் சிறிது.
18. தனிக் குற்றெழுத்தை அடுத்துவரும் ஆகார எழுத்தின்பின் வல்லினம் மிகும்.
    **எ–டு:** நிலாச் சோறு, கனாக் கண்டான்.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

## கற்பவை கற்றபின்

**1. வல்லினம் மிகலாமா?**

வல்லினம் மிகும்.

அ) பெட்டி – செய்தி – பெட்டிச்செய்தி
ஆ) விழா – குழு – விழாக்குழு
இ) கிளி – பேச்சு – கிளிப்பேச்சு
ஈ) தமிழ் – தேன் – தமிழ்த்தேன்
உ) தை – பூசம் – தைப்பூசம்
ஊ) கூட – கொடு – கூடக்கொடு
எ) கத்தியைவிட – கூர்மை – கத்தியைவிடக்கூர்மை
ஏ) கார் – பருவம் – கார்ப்பருவம்

**2. தொடர் தரும் பொருளைக் கூறுக.**

அ) **சின்னக்கொடி** – சின்னத்தை உடைய கொடி
**சின்னகொடி** – சிறிய கொடி
ஆ) **தோப்புக்கள்** – தோப்பில் இறக்கப்பட்ட கள்
**தோப்புகள்** – மா, பலா, வாழைத் தோப்புகள்.
இ) **கடைப்பிடி** – பின்பற்று
**கடைபிடி** – ஒரு கடையைப் பிடி
ஈ) **நடுக்கல்** – நடுவில் உள்ள கல்
**நடுகல்** – நடப்பட்ட கல்
உ) **கைம்மாறு** – அன்பளிப்பு, பிரதிபலன்.
**கைமாறு** – கையிலிருந்து மற்றொருவர்க்கு மாற்று.
ஊ) **பொய்ச்சொல்** – பொய்யாகிய சொல்
**பொய்சொல்** – பொய்யினைச் சொல்

**3. சிந்தனை வினா**

**நாளிதழ்கள் சிலவற்றில் வல்லினம் மிகவேண்டிய இடத்தில் மிகாமல் எழுதிவருவதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். அவ்வாறு எழுதுவது மொழிக்கு வளம் சேர்க்குமா? வல்லினம் மிகவேண்டியதன் முக்கியத்துவத்தை எழுதுக.**

1. **அதற்க்கு – தவறு**

அதற்கு = அது + அன் + கு
அது (சுட்டுப்பெயர்) + அன் (சாரியை) + கு (வேற்றுமை உருபு).
அதற்கு – அதன் + கு = என்பதே சரி
**எ–கா :** அந்தப் பொருள் வேண்டாம்; அதற்குப் பதிலாக இதை வைத்துக்கொள்.

2. **கடைபிடித்தல், கடைப்பிடித்தல்.**

கடைபிடித்தல் – கடையைப் பிடித்தல், கடைப்பிடித்தல் – பின்பற்றுதல்.
**எ–கா :** சேகர், புதிதாக வணிகம் தொடங்கக் கடைபிடித்தார்.
நாங்கள் என்றும் தூய்மையைக் கடைப்பிடிப்போம்.

மொழியின் ஆக்கத்திற்குப் புணர்ச்சி இன்றியமையாதது. புணர்ச்சிவிதியில் வல்லெழுத்து மிகவேண்டிய இடத்தில் மிகாமல் இருந்தால், பொருள் உணர்வதில் இடர்ப்பாடு ஏற்படும்.

**தந்த பலகை** – ஒருவரால் தரப்பட்ட பலகை.
**தந்தப்பலகை** – தந்தத்தால் ஆகிய பலகை.

www.Padasalai.Net

# வாழ்வியல்

# திருக்குறள்

## குறுவினாக்கள்

**1. நிலம்போல யாரிடம் பொறுமை காக்கவேண்டும்?**

★ நம்மை இகழ்பவரிடம் நாம், நிலம்போலப் பொறுமை காக்கவேண்டும்.

**2. தீயவை தீய பயத்தலால் தீயவை**
**தீயினும் அஞ்சப் படும். – இக்குறட்பாவின் கருத்தை விளக்குக.**

★ தீயசெயல், தீய பயனையே தருதலால், தீயசெயலைத் தீயைவிடவும் கொடியதாகக் கருதிச் செய்வதற்கு அஞ்ச வேண்டும்.

**3. ஒற்றொற்றித் தந்த பொருளையும் மற்றுமோர்**
**ஒற்றினால் ஒற்றிக் கொளல். – இக்குறட்பாவில் அமைந்துள்ள நயங்களை எழுதுக.**

★ ஓர் ஒற்றனால் அறிந்தவற்றை மற்றொரு ஒற்றனால் அறிந்துவரச் செய்து, உறுதி செய்தல் நல்லது.

★ இக்குறளில் – 'ஒற்று' என்னும் சொல் – ஒற்றொற்றி – 'ஒற்றினால் ஒற்றி' என இணைந்து இனிய ஓசையுடன் அரிய பொருளையும் தருவது நயமாகும். 'ஒற்று' என்பது ஒற்றனையும் அவர் ஒற்றிக் கொணர்ந்த செய்தியையும் உணர்த்துவது நயமானதாகும்.

**4. கனவிலும் இனிக்காதது எவர் நட்பு?**

★ கனவிலும் இனிக்காதது, சொல் வேறாகவும் செயல் வேறாகவும் இருப்பவர் நட்பாகும்.

## கூடுதல் வினாக்கள்

**5. திருவள்ளுவருக்கு வழங்கும் சிறப்புப் பெயர்கள் யாவை?**

➤ நாயனார், தேவர், முதற்பாவலர், தெய்வப் புலவர், நான்முகனார், மாதானுபங்கி, செந்நாப்போதார், பெருநாவலர் ஆகியவை, திருவள்ளுவருக்கு வழங்கும் சிறப்புப் பெயர்கள் ஆகும்.

**6. திருக்குறளுக்கு வழங்கும் வேறு பெயர்கள் யாவை?**

➤ முப்பால், பொதுமறை, பொய்யாமொழி, வாயுறைவாழ்த்து, தெய்வநூல், தமிழ்மறை, முதுமொழி, பொருளுறை ஆகியன, திருக்குறளுக்கு வழங்கும் வேறு பெயர்கள் ஆகும்.

**7. நம்முடைய பொறுமையால் யாரை வெல்ல வேண்டும்?**

➤ செருக்கினால் துன்பம் செய்தவரை, நம்முடைய பொறுமையால் வெல்ல வேண்டும்.

**8. தீராத துன்பம் தரும் செயல்களைக் கூறுக.**

➤ ஆராயாமல் ஒருவரைத் தேர்வு செய்வதும், அவ்வாறு தேர்வு செய்தபின் அவரைப்பற்றி ஐயப்படுதலும் தீராத துன்பம் தரும் செயல்களாகும்.

**9. யாருடைய நட்பு கனவிலும் இனிமை தராது?**

➤ செயல்வேறு, சொல்வேறு என்று உள்ளவர் நட்பு, கனவிலும் இனிமை தராது.

**10. பேதையின் செயல்கள் யாவை?**

➤ தகாத செயலுக்கு வெட்கப்படாமை, தக்கவற்றை நாடாமை, பிறரிடம் அன்பு இல்லாமை, யாதொன்றையும் பாதுகாக்காமை முதலியவை, பேதையின் செயல்களாகும்.

**11. வள்ளுவர் எதனைத் 'தலை' எனக் கூறுகிறார்?**

➤ தன்னைத் தோண்டுபவரையும் தாங்கும் நிலத்தைப்போலத் தன்னை இகழ்ந்தவரை பொறுத்துக் கொள்ளுதல், தலை (சிறந்தது) என்கிறார் வள்ளுவர்.

**12. எச்செயலை 'நன்று' என்று வள்ளுவர் கூறுகிறார்?**

➤ செய்யக் கூடாத துன்பத்தைத் தனக்குப் பிறர் செய்தாலும், அதனால் மனம் நொந்து, பிறருக்கு அறம் அல்லாத செயல்களைச் செய்யாதிருத்தலை, 'நன்று' என்று வள்ளுவர் கூறுகிறார்.

**13. அறம் யாருக்குக் கேடு செய்யும்? ஏன்?**

➤ மறந்தும் பிறருக்குக் கெடுதல் செய்ய நினைக்கக்கூடாது. அவ்வாறு நினைத்தால், நினைத்தவனுக்கு அறம் கேடு செய்யும்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net

**14. செல்வத்துள் தலையாயது எது?**

- செல்வங்களுள் எல்லாம் தலைசிறந்த செல்வம், செவியால் கேட்டறியும் கேள்விச் செல்வமாகும்.

**15. நல்லவை கேட்டலின் சிறப்பு யாது?**

- அளவில் குறைந்ததானாலும், நல்லனவற்றைக் கேட்டல் வேண்டும். அவ்வாறு கேட்டவை, கேட்ட அளவுக்குச் சிறப்பை தரும்.

**16. எவர் பணிவான மொழி பேசார்?**

- நுட்பமான கேள்வி அறிவைப் பெறாதவர், பணிவான மொழி பேசார்.

**17. அவியினும் வாழினும் என் என வள்ளுவர் எவரைக் கூறுகிறார்?**

- செவியால் கேட்டுணரும் கேள்விச் செல்வத்தின் சுவையை உணராது, நாவின் சுவைக்கு முக்கியத்துவம் தரும் விலங்குகளைப் போன்றோர், இருந்தாலும் இறந்தாலும் என்ன என்கிறார்.

**18. ஒருவரை எவ்வாறு முடிவு செய்தல் வேண்டும்?**

- ஒருவரின் குணத்தையும் குற்றத்தையும் ஆராய்ந்து, அவற்றுள் மிகுதியான பண்பைக் கொண்டு, அவரை முடிவு செய்தல் வேண்டும்.

**19. "குணம் நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்**
**மிகைநாடி மிக்க கொளல்" – இச்செய்யுளில் அமைந்த அணியைச் சுட்டி விளக்குக.**

- செய்யுளில் ஒரே சொல் அதே பொருளில் பலமுறை வருவது, சொற்பொருள் பின்வரு நிலையணியாகும். இச்செய்யுளில் 'நாடி' என்னும் சொல் 'ஆராய்ந்து' என்னும் பொருளில் பலமுறை வந்துள்ளதால், 'சொற்பொருள் பின்வரு நிலையணி' அமைந்துள்ளது.

**20. "பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்**
**கருமமே கட்டளைக் கல்" – இச்செய்யுளில் அமைந்த அணியை விளக்குக.**

- செய்யுளில் கூற எடுத்துக்கொண்ட பொருள்களில் ஒன்றை உருவகம் செய்து, மற்றதை உருவகம் செய்யாமல் விடுவது, ஏகதேச உருவக அணியாகும்.
- கருமத்தைக் கட்டளைக் கல்லாக உருவகம் செய்தவர், பெருமை, சிறுமைகளைப் பொன்னாக உருவகம் செய்யவில்லை. எனவே, இச்செய்யுளில் 'ஏகதேச உருவக அணி' அமைந்துள்ளது.

## கூடுதல் சிறுவினா

**1. திருக்குறள் – நூல் குறிப்பு வரைக.**

- உலகப் பண்பாட்டிற்குத் தமிழினத்தின் பங்களிப்பாக அமைந்த நூல், திருக்குறள்.
- இனம், சாதி, நாடு குறித்த எவ்வித அடையாளத்தையும் முன்னிலைப்படுத்தாதது உலகப்பொதுமறை.
- இந்நூல், பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று.
- இந்நூலைப் போற்றும் பாடல்களின் தொகுப்பே திருவள்ளுவமாலை.
- இஃது, உலகின் பல மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.
- இந்திய மொழிகளிலும் தன் ஆற்றல் மிக்க அறக்கருத்துகளால் மேன்மை பெற்று விளங்குகிறது.
- தமிழில் எழுதப்பட்ட உலகப் பனுவல் எனப் போற்றப்படுகிறது.
- பொது அறம் பேணும் திருக்குறளை இயற்றியவர் திருவள்ளுவர் ஆவார்.

## கூடுதல் பலவுள் தெரிக

1. உலகப் பண்பாட்டிற்குத் தமிழினத்தின் பங்களிப்பாக அமைந்த நூல் ______.
   அ) திருக்குறள் ஆ) கம்பராமாயணம் இ) புறநானூறு ஈ) மணிமேகலை
   **விடை : அ) திருக்குறள்**
2. திருக்குறளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர் ______.
   அ) கால்டுவெல் ஆ) பெஸ்கி இ) ஜி. யு. போப் ஈ) எலியட்
   **விடை : இ) ஜி. யு. போப்**
3. திருக்குறளைப் போற்றும் பாடல்களின் தொகுப்பே ______.
   அ) திருப்புகழ் ஆ) திருக்குற்றாலக்குறவஞ்சி
   இ) தேவாரம் ஈ) திருவள்ளுவமாலை
   **விடை : ஈ) திருவள்ளுவமாலை**

www.Padasalai.Net

## இயல் – 4

### உரைநடை உலகம்

# இயந்திரங்களும் இணையவழிப் பயன்பாடும்

### குறுவினா

**1. இணையவழியில் இயங்கும் மின்னணு இயந்திரங்கள் எவையேனும் ஐந்தினைக் குறிப்பிடுக.**

- ✶ தானியக்கப் பண இயந்திரம்
- ✶ அட்டை பயன்படுத்தும் இயந்திரம்
- ✶ திறனட்டைக் கருவி
- ✶ ஆளறி சோதனைக் கருவி
- ✶ இணைய வழிப் பதிவு முதலானவை, இணைய வழியில் இயங்கும் மின்னணு இயந்திரங்கள்.

### கூடுதல் வினாக்கள்

**2. வாழ்வில் ஏற்றம் பெற எவற்றைப் பயன்படுத்த வேண்டும்? ஏன்?**

- ➤ எதிர்கால நலனைக் கருத்தில் கொண்டு, வாழ்வில் ஏற்றம் பெற, இயந்திரங்களையும் இணையத்தையும் முறையாகப் பயன்படுத்த வேண்டும்.
- ➤ இயந்திரங்கள் இல்லாத மனித வாழ்க்கையைக் கற்பனை செய்யமுடியாத அளவிற்கு இன்று தொழில்நுட்பம் நம்மைச் சூழ்ந்துள்ளது.

**3. இணைய இணைப்பு இல்லா மின்னணு இயந்திரங்கள் எவை?**

- ➤ பேருந்துப் பயணத்தில் பயணச்சீட்டு வழங்குதல், உணவு விடுதிகளில் உணவுக் கட்டணச்சீட்டு வழங்குதல், செயல்களைப் புரியும் மின்னணு இயந்திரங்கள் இணைய இணைப்பில்லாமல் செயல் படுபவை.

**4. மனிதனின் நேரத்தை மிச்சப்படுத்துபவை எவை?**

- ➤ அறிவியல் முன்னேற்றம், மனிதனின் பயண நேரத்தைக் குறைத்துள்ளது.
- ➤ அறிவியல் கண்டுபிடிப்புகள், மனிதனின் நேரத்தைப் பல வழிகளில் மிச்சப்படுத்துகின்றன.

**5. 'ஒளிப்படி' இயந்திரம், எதற்கு எங்கெங்குப் பயன்படுத்தப்படுகிறது?**

- ➤ 'ஜெராக்ஸ்' எனப் பொதுவாக அனைவராலும் அழைக்கப்படும் 'ஒளிப்படி' இயந்திரம், கல்வி, வணிகம், அரசு மற்றும் தனியார் அலுவலகங்களின் பல துறைகளிலும் நகல் எடுக்கப் பயன் படுகிறது.

**6. தொலைநகல் இயந்திரம் எதற்குப் பயன்படுகிறது?**

- ➤ தொலைநகல் இயந்திரம், கோப்புகளையும் ஒளிப்படங்களையும் உடனடியாக ஒரிடத்திலிருந்து இன்னோர் இடத்திற்கு அனுப்பப் பயன்படுகிறது.

**7. தானியக்கப் பண இயந்திரம் முதன்முதலில் எங்கு எப்போது யாரால் நிறுவப்பட்டது?**

- ➤ 1967ஆம் ஆண்டு ஜூன் 27இல் பார்க்லேஸ் வங்கிக்காக, இங்கிலாந்தைச் சேர்ந்த பொறியாளர் ஜான் ஷெப்பர்டு பாரன் குழுவினரால், தானியக்கப் பண இயந்திரம் முதன்முதலில் நிறுவப்பட்டது.

**8. தானியக்கப் பண இயந்திரம் உருவான காரணம் குறித்து ஜான் ஷெப்பர்டு கூறுவது யாது?**

- ➤ உலகின் எப்பகுதியில் இருந்தாலும், தம் வங்கிக் கணக்கிலுள்ள பணத்தை எடுத்துப் பயன்படுத்த ஒரு வழிகுறித்துச் சிந்தித்தார். அப்போது, சாக்லேட்டுகளை வெளித்தள்ளும் இயந்திரத்திலிருந்து ஜான் ஷெப்பர்டு பாரனுக்கு யோசனை கிடைத்ததாம்.

**9. 'அட்டை' பயன்பாட்டுக்கு வந்த முறை பற்றி அறிவன யாவை?**

- ➤ 'ஆட்ரியன் ஆஷ்ஃபீல்டு', 1962இல் இங்கிலாந்தில் கடவுச் சொல்லுடன் கூடிய அட்டைக்குக் காப்புரிமை பெற்றிருந்தார். ஆரம்பத்தில் பெட்ரோல் தருவதற்குப் பயன்படுத்தத் தரப்பட்டது.
- ➤ பின்னர் அனைத்துப் பயன்பாட்டிற்குமான செயல்பாடுகளுக்குக் காப்புரிமை மாற்றப்பட்டது.

**10. ஆளறி சோதனைக் கருவி எவ்வாறு, எதற்குப் பயன்படுகிறது?**

- ➤ மனிதனின் கைரேகை, முகம், விழித்திரை ஆகியவற்றில் ஒன்றையோ, அனைத்தையுமோ பதிவு செய்து, அதன்மூலம் மறுபடியும் ஆளை அறியப் பயன்படுவது, ஆளறி சோதனைக் கருவியாகும்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

**11. ஆதார் அடையாள அட்டை என்பது யாது?**

➤ நடுவண் அரசு தனிநபர் அடையாளத்தைப் பதிவு செய்யும் முறைக்கு ஆதார் பயன்படுத்தப்படுகிறது. ஆதார் அடையாள அட்டை பெற நம் ஒளிப்படம், விழித்திரை, இருகை பத்துவிரல் ரேகைகள் பதிவு செய்துகொள்ள வேண்டும். இது, ஆளறி சோதனைக் கருவி போன்றே பயன்படுத்தப்படுகிறது.

**12. இந்தியத் தொடர்வண்டி உணவு வழங்கல் மற்றும் சுற்றுலாக்கழகம் இணையவழிச் செயல்படுவதை எழுதுக.**

✶ மிகப்பெரிய நிறுவனமான இந்தியத் தொடர்வண்டி, உணவு வழங்கல் மற்றும் சுற்றுலாக்கழகம் ஆகியவற்றில் ஒருவர், இருந்த இடத்தில் இருந்தே பயணச்சீட்டு, தேவையான பொருள்களைப் பெறுவதை இணையவழிச் செயல்பாடு எளிதாக்கியுள்ளது.

## சிறுவினா

**1. பள்ளி மாணவர்களுக்கான தமிழக அரசின் இணையவழிச் சேவைகளை எழுதுக.**

✶ கல்வி உதவித்தொகை பெற இணையவழி விண்ணப்பித்தல்,
✶ பள்ளிக் கட்டணம், தேர்வுக் கட்டணம் செலுத்துதல்,
✶ தேர்வு அறை அடையாளச்சீட்டுத் தரவிறக்கம் செய்தல்,
✶ தொழிற்கல்வி நுழைவுத் தேர்விற்கு விண்ணப்பித்தல்,
✶ தேசியத் திறனாய்வுத் தேர்வு, கல்வி உதவித்தொகைத் தேர்வு, ஊரகத் திறனாய்வுத் தேர்வு ஆகிய அனைத்தும், பள்ளி மாணவர்களுக்கான தமிழக அரசின் இணையவழிச் சேவைகளாகும்.

## கூடுதல் வினாக்கள்

**2. அனைத்துத் துறைகளும் புகுந்துகொண்ட உன்னத உலகம் எது? எவ்வாறு?**

➤ அனைத்துத் துறைகளும் இணையம் என்னும் உன்னத உலகில் புகுந்து கொண்டுள்ளன.
➤ மின்னஞ்சல்மூலம் தொடர்பு கொண்டபோது, உலகம் சுருங்கிவிட்டதாக முதன்முதலில் மகிழ்ந்தோம்.
➤ குறுஞ்செய்தியின் வருகைக்குப் பின், கடிதப் போக்குவரத்து குறைந்தது; தந்தி விடைபெற்றது.
➤ சமூக வலைத்தளங்கள்மூலம் காணொலி இணைப்பில் பேசுகையில், உலகம் உள்ளங்கைக்குள் அடங்கிவிடுகிறது. வங்கிகள் தரும் அட்டையில் வாழ்க்கை உருள்கிறது.
➤ ஆண்டிப்பட்டியில் நடக்கும் திருமணத்தை, அதேவேளையில் உலகின் எப்பகுதியிலிருந்தும் காணும் சூழல் உருவாகியுள்ளது.

**3. இயந்திரங்களின் பின்னால் கண்ணுக்குத் தெரியாத இணையவலை இருப்பதை விளக்குக.**

➤ எரிவாயு பதிவு செய்வது, மின் கட்டணம் செலுத்துவது, பயணத்திற்கு முன்பதிவு செய்வது, அங்காடிக்குச் சென்று, வரிசையில் நின்று, பொருள்களை வாங்குவது, தெருவுக்குத் தெரு பணம் எடுக்க இயந்திரங்கள் என அனைத்துச் செயல்களையும் இயந்திரங்கள் செய்கின்றன.
➤ இந்தச் செயல்களைச் செய்யும் அனைத்து இயந்திரங்களின் பின்னாலும், கண்ணுக்குத் தெரியாத இணையவலை அமைப்பு இருக்கிறது. இது, கணினி யுகத்தின் சாதனை.

**4. 'ஒளிப்படி' இயந்திரத்தை யார், எப்போது கண்டுபிடித்தார்?**

➤ 'ஒளிப்படி' இயந்திரத்தை நியூயார்க் நகரைச் சேர்ந்த காப்புரிமைச் சட்ட வல்லுநரும், பகுதிநேர ஆய்வாளருமான 'செஸ்டர் கார்ல்சன்' கண்டுபிடித்தார்.
➤ தம் தொழிலுக்காகச் சிலவற்றைக் காகிதங்களில் படி எடுக்க வேண்டி இருந்தது. அந்தப் பணிச்சுமை, இக்கண்டுபிடிப்புக்கு அடிப்படையானது. தமது சமையல் அறையையே ஆய்வுக்கூடமாக ஆக்கிக்கொண்டு, மின்னணுப் புகைப்படச் சோதனைகளை மேற்கொண்டார். கந்தகம் தடவிய துத்தநாகத் தகட்டைக் கொண்டு 1938இல், உலகின் முதல் ஒளிப்படியை எடுத்தார்.
➤ 'செஸ்டர் கார்ல்சன்', இந்த இயந்திரத்தை 1959இல் உலகிற்கு அறிமுகப்படுத்தினார். இன்று உலகின் பல நிறுவனங்கள், ஒளிப்படி இயந்திரத்தை உருவாக்கி, 'ஜெராக்ஸ்' என்னும் பெயரில் விற்பனை செய்கின்றன.

**5. தொலைநகல் இயந்திரம் உருவான முறையை எழுதுக.**

➤ இத்தாலி நாட்டு இயற்பியல் அறிஞர் 'ஜியோ வான்னி காசில்லி', 'பாண் டெலிகிராஃப்' என்னும் தொலைநகல் கருவியை உருவாக்கினார். இதன் உதவியால் பாரிஸ் நகரிலிருந்து லியான் நகரத்திற்கு 1865இல் தொலைநகல் சேவை தொடங்கப்பட்டது.
➤ அறிவியல் அறிஞர் பலரின் முயற்சியால் இந்த இயந்திரம் மேம்படுத்தப்பட்டது. அமெரிக்காவின் 'ஹாங்க் மாக்னஸ்கி', 1985இல் கணினிமூலம் தொலைநகல் எடுக்கும் தொழில்நுட்பத்தைக் கண்டறிந்தார். 'காமா ஃபேக்ஸ்' எனப் பெயரிடப்பட்டு, விற்பனைக்கும் பயன்பாட்டுக்கும் வந்தது.

www.Padasalai.Net

**6. அட்டை பயன்படுத்தும் இயந்திரம் குறித்து அறிவன யாவை?**

- பணம் கொண்டு செல்லாமல், கடைகளில் பொருள்களை வாங்கவும், வணிகப் பரிமாற்றங்களுக்கும் அட்டையைப் பயன்படுத்தும் கருவி உதவுகிறது.
- இதனைக் கட்டணம் செலுத்தும் கருவி எனவும், விற்பனைக் கருவி எனவும் அழைக்கின்றனர்.
- இந்தக் கருவியில் வங்கி அட்டையின் காந்தப்பட்டை இருக்கும் பகுதியில் தேய்க்கும்போது, வாடிக்கையாளர் விவரம், இணையத் தொடர்பால் வங்கிக்குச் செல்லும்.
- அட்டையைக் கணினி ஆய்வு செய்து, கடவுச் சொல்லைச் சரிபார்த்துப் பணப் பரிவர்த்தனைக்கு வங்கி ஒப்புதல் அளிக்கும்.

**7. திறன் அட்டைப் பயன்பாடு குறித்து எழுதுக.**

- தமிழகத்தில் மக்கள் பயன்படுத்தும் குடும்ப அட்டைகள், திறன் அட்டைகளாக வழங்கப்பட்டுள்ளன. குடும்ப உறுப்பினர், ஆதார் எண்கள், அலைபேசி எண்கள், முகவரி உள்ளிட்ட விவரங்கள், அதில் இடம்பெறும்.
- நியாயவிலைக் கடைக்குச் சென்று, திறன் அட்டையை அங்கிருக்கும் விற்பனைக் கருவியில் இட்டு, வாங்கும் பொருளின் விலை முதலியன பதிவு செய்யப்பட்டு, அலைபேசி எண்ணுக்குக் குறுஞ் செய்தியாகவும் அனுப்பப்படும்.

**8. இணைய வணிகம் குறித்து எழுதுக.**

- இணைய வணிகத்தை இங்கிலாந்தைச் சேர்ந்த 'மைக்கேல் ஆல்ட்ரிச்', 1979இல் உருவாக்கினார். இது, இணைய உலகின் மற்றொரு பாய்ச்சலாகக் கருதப்படுகிறது.
- 1991இல் இணையம், பொதுமக்கள் பயன்பாட்டிற்கு வந்தது. இன்று கரும்புமுதல் கணினிவரை இணையவழி விற்கப்படாத பொருள் எதுவும் இல்லை. இணையவழி வணிகம், உலகில் தவிர்க்க முடியாத இடத்தைப் பிடித்துள்ளது.

**9. இணையப் பயன்பாடு குறித்து எழுதுக.**

- பேருந்து, விமானம், தங்கும் விடுதிகளில் முன்பதிவு செய்ய, இணையம் உதவுகிறது. பெருநகரங்களில் திரைப்பட இருக்கைப் பதிவு, அரசுக்குச் செலுத்த வேண்டிய வரிகளைச் செலுத்த, அரசு அறிவிக்கும் திட்டங்களை அறிய, படிவங்களைப் பெற, விண்ணப்பிக்க, சான்றிதழ் பெற என, அனைத்திற்கும் இணையவழி பெரிதும் துணைபுரிகிறது.
- அரசின் மின்னணுச் சேவை மையங்களின் உதவியுடன் இவற்றை எளிதில் நிறைவு செய்ய முடிகிறது. பள்ளி, கல்லூரி மாணவர்களின் தேவைகளை நிறைவு செய்துகொள்ளவும் பயன்படுகிறது. கால விரையம் இல்லாமல், விரைவில் எச்செயலையும் செய்ய, இணையவழி பெரிதும் துணையாகிறது.

## நெடுவினா

**1. அன்றாட வாழ்வில் நீங்கள் பயன்படுத்தும் இரண்டு இணையவழிச் சேவைகள் பற்றி விரிவாகத் தொகுத்து எழுதுக.**

அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையில் புதிய புதிய அரிய முன்னேற்றங்கள் நிகழ்ந்தவண்ணம் உள்ளன. கற்பனைக்கு எட்டாத வேகத்தில் முன்னேற்றம் கண்டுள்ளது. இன்று இணைய வழிப் பயன்பாடு, அன்றாட வாழ்வை எளிதாக்கியுள்ளது.

**இணையவழிக் கல்வி :**

பள்ளி வகுப்பறையில் ஏற்படுகின்ற சந்தேகங்களை வீட்டில் அமர்ந்து, இணைய வழியில் பாடங்களைக் கற்க முடியும். புரியாத புதிர்களைக்கூட மிக எளிமையான விளக்கப் படங்களாகக் காணமுடியும்.

புத்தகத்தில் இல்லாத பல்வேறு கூடுதல் செய்திகளைத் தெரிந்துகொள்ளலாம். முன் அறியாத இடங்கள் பற்றிய விளக்கங்கள் செய்திகளாக மட்டுமல்லாமல், விளக்கப் படங்களுடன் நேரிடையாகச் சென்று காண்பதுபோலக் காட்சிகள் வாயிலாகக் காணலாம்.

கற்றது கைம்மண் அளவு கல்லாதது உலகளவு என்பதுபோல் ஒரு பொருள் பற்றிய பல்வேறு தரவுகளைக் கண்டறியலாம். எளிமையாகப் புரிந்துகொள்ள அது உதவுகிறது. உலகமே உங்கள் கையில் இருப்பதுபோல் குறுகிய கால எல்லைக்குள் எவ்வளவு வேண்டுமானாலும் எவ்விதப் பயமும் இல்லாமல் புரிந்துகொள்ள முடியும்.

www.Padasalai.Net

**இணையவழிப் பொழுதுபோக்கு :**

இன்றைய உலகில் பொழுதுபோக்கே வாழ்க்கை என்றாகியுள்ளது. விடியற்காலை எழுவதுமுதல் இரவு உறங்கப் போவதுவரை கைப்பேசியைப் பயன்படுத்துகிறோம். 'சலிப்பு ஏற்படும்போது', பணச்செலவு இல்லாமல் 'You tube' வாயிலாக, உலகையே உள்ளங்கையில் காணலாம்.

புதிய, பழைய திரைப்படங்கள் பார்க்கவும், திரைப்படப் பாடல்கள் கேட்கவும் முடியும். இசைத் தொடர்பான நிகழ்வுகள் அனைத்திலும் தேவையானவற்றை உடனுக்குடன் கேட்கமுடியும்.

விளையாட்டு நிகழ்வுகளைப் பார்ப்பது மட்டுமல்லாமல், நாமே களத்தில் இறங்கி விளையாடுவதுபோல விளையாட முடியும். விரல்நுனியில் இவை அனைத்தும் அடக்கம்.

## பலவுள் தெரிக

1. கீழ்க்காணும் மூன்று தொடர்களுள் –

அ) இருந்த இடத்திலிருந்தே பயணச் சீட்டு எடுப்பதை எளிதாக்கிய மிகப்பெரிய இந்திய நிறுவனம், இந்தியத் தொடர்வண்டி உணவு வழங்கல் மற்றும் சுற்றுலாக் கழகம் ஆகும்.

ஆ) வங்கி அட்டை இல்லை என்றால் அலைபேசி எண், வங்கிக் கணக்கு எண் ஆகியவற்றைக் கொண்டு, பணம் செலுத்துதல் இயலாது.

இ) திறன் அட்டைகள் என்பவை, குடும்ப அட்டைகளுக்கு மாற்றாக வழங்கப்பட்டனவாகும்.

i) அ, ஆ ஆகியன சரி; இ தவறு ii) அ, இ ஆகியன சரி; ஆ தவறு

iii) அ, தவறு; ஆ, இ ஆகியன சரி iv) மூன்றும் சரி

**விடை : ii) அ, இ ஆகியன சரி; ஆ தவறு.**

2. தமிழ்நாடு அரசு, கிராமப்புற மாணவர்களுக்கு நடத்தும் திறனாய்வுத் தேர்வு எது?

அ) தேசியத் திறனாய்வுத் தேர்வு ஆ) ஊரகத் திறனாய்வுத் தேர்வு

இ) தேசியத் திறனாய்வு மற்றும் கல்வி உதவித்தொகைத் தேர்வு

ஈ) மூன்றும் சரி

**விடை : ஈ) மூன்றும் சரி.**

## கூடுதல் வினாக்கள்

3. இணைய வணிகத்தைக் கண்டுபிடித்தவர் ______.

அ) ஹாங்க் மாக்னஸ்கி ஆ) ஜான் ஷெப்பர்டு பாரன்

இ) ஜியோவான்னி காசில்லி ஈ) மைக்கேல் ஆல்ட்ரிச்

**விடை : ஈ) மைக்கேல் ஆல்ட்ரிச்**

4. இணைய இணைப்பு இல்லாத மின்னணு இயந்திரங்கள் ______.

அ) பயணச்சீட்டு வழங்கும் கருவி, உணவுக்கட்டணச்சீட்டு வழங்கும் கருவி

ஆ) பயணச்சீட்டு வழங்கும் கருவி, கடவுச்சொல் அட்டை

இ) உணவுக்கட்டணச்சீட்டு வழங்கும் கருவி, பணம் பெறும் அட்டை

ஈ) திறன் அட்டை, கடவுச்சீட்டு அட்டை

**விடை : அ) பயணச்சீட்டு வழங்கும் கருவி, உணவுக்கட்டணச்சீட்டு வழங்கும் கருவி**

5. **கூற்று 1 :** மின்னஞ்சல்மூலம் தொடர்புகொள்ளத் தொடங்கியதும் கடிதப் போக்குவரத்து குறைந்தது.

**கூற்று 2 :** குறுஞ்செய்தி அனுப்பும் முறை வருகைக்குப்பின் தந்தி விடைபெற்றது.

அ) கூற்று 1 சரி, 2 தவறு ஆ) கூற்று 1 தவறு, 2 சரி

இ) இரண்டு கூற்றுகளும் சரி ஈ) இரண்டு கூற்றுகளும் தவறு

**விடை : இ) இரண்டு கூற்றுகளும் சரி**

6. 'உலர் எழுத்து முறை' என்னும் பொருள்தரும் கிரேக்க மொழிச் சொல் ______.

அ) ஜெராக்ஸ் ஆ) பான் டெலிகிராஃபி

இ) சீரோகிராஃபி ஈ) ஆஷ்ஃபீல்டு

**விடை : இ) சீரோகிராஃபி**

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

# கவிதைப்பேழை

# ஓ, என் சமகாலத் தோழர்களே!

### குறுவினா

1. **கூட்டுப் புழுவை எடுத்துக்காட்டிக் கவிஞர் உணர்த்தும் கருத்துகளை எழுதுக.**
   - ✶ கூட்டினுள் இருக்கும் புழுவானது தனது பொறுமை என்னும் முயற்சியாலேயே பட்டுப்பூச்சியாய் அழகிய வடிவுடன் வெளிவருகிறது.
   - ✶ அதுபோலப் பொறுமை, அடக்கம் என்கிற கட்டுப்பாடுகளைக் கடக்காமல் செயல்படுவோமானால், நிறைவான வாழ்வை எளிதில் பெறலாம்.

### கூடுதல் வினாக்கள்

2. **தூரமும் பாரமும் எவற்றுக்கு இல்லை?**
   - ➤ பறக்கச் சிறகு இருக்கும்வரை கிளிக்குக் கிழக்கு வானம் தூரமில்லை.
   - ➤ முளைக்கத் துடிக்கும் ஆற்றல் உள்ள விதைக்குப் பூமி பாரமில்லை.

3. **நதிகளையும் கழனிகளையும் கவிஞர் எதற்கு வேண்டுகிறார்?**
   - ➤ பரவிப் பாய்ந்து ஓடும் நதிகளைப் பள்ளங்களை நிரப்ப வருமாறும், காய்ந்து கிடக்கும் வயல்வெளி எங்கும் நெற்கதிர்களைச் சுமக்கச் செய்யுமாறும் கவிஞர் வேண்டுகிறார்.

4. **துன்பம் வாராதிருக்க வழி யாது?**
   - ➤ முன்னோர் கூறிய நல்லுரைகளை எல்லாம் வெறுமனே சுமந்து கொண்டிருக்காமல், அக்கருத்துகளை வாழ்க்கையில் நடைமுறைப்படுத்தத் துணிந்தால் துன்பம் வாராது.

5. **திரியும் தீயும் கொண்டு உணர்த்தப்படும் செய்தி யாது?**
   - ➤ அறிவு திரியாகவும், உணர்ச்சி தீயாகவும் சுட்டப்பட்டுள்ளது.
   - ➤ அதாவது, அறிவை மறந்த உணர்ச்சி, திரியை மறந்த தீயாகிவிடும்.
   - ➤ அதுபோலவே, எரியும் தீயை இழந்த திரி, உணர்ச்சியை இழந்த அறிவாகி விடும்.
   - ➤ எனவே, அறிவும் உணர்ச்சியும் இணைந்து செயல்பட வேண்டும் என்பதாகும்.

6. **பழையனவும் புதியனவும் குறித்துக் கவிஞர் கூறுவன யாவை?**
   - ➤ வாழ்வை வளப்படுத்தும் பண்பு, அன்பு என்பவை பழமையானவை; எனினும் ஒதுக்கிவிட முடியாது.
   - ➤ அதுபோல் இளையோர் கூட்டம் ஏந்தி நடக்கும் இனம், மொழி என்பவை என்றும் புதுமை சேர்ப்பவையாகும் எனக் கவிஞர் கூறுகிறார்.

7. **கவிஞர் நிறுத்துமாறும், பொருத்துமாறும் கூறுவன யாவை?**
   - ➤ ஆளும் தமிழ்மொழியை அறிவியல் என்னும் வாகனத்தின்மீது நிறுத்துமாறும், கரிகாலனின் பெருமையைக் கணிப்பொறியில் பொருத்துமாறும் கவிஞர் கூறுகிறார்.

8. **எதை மாற்றவும் எதை ஏற்றவும் வேண்டும்?**
   - ➤ ஏவுகின்ற திசை நோக்கிப் பாயும் அம்புபோல் செயல்பட்டுக் கொண்டிருக்கும் இனத்தை, சிந்தித்துச் செயல்படும் வகையில் மாற்றவேண்டும்; ஏவுகணைகளில் தமிழின் பெருமையை எழுதி, எல்லாக் கோள்களிலும் பரப்பும் வகையில் ஏற்ற வேண்டும்.

### சிறுவினா

1. **'ஒ என் சமகாலத் தோழர்களே' கவிதையில் கவிஞர் விடுக்கும் வேண்டுகோள்கள் யாவை?**
   - ✶ ஓடும் நதிகளைக் கொண்டு, பள்ளம் நிரப்பி, காடு கழனிகள் எங்கும் நெற்கதிர்களைத் தாருங்கள்.
   - ✶ துன்பம் வராமலிருக்க, முன்னோர் சொன்ன முதுமொழிகளை வாழ்க்கையில் நடைமுறைப்படுத்துங்கள்.
   - ✶ அன்பு, அடக்கம், பொறுமை மாறாமல் புதுமையான கோலம் கொள்ளுங்கள்.
   - ✶ அன்பெனும் உணர்ச்சிக்கு அடிமையாகாமல் அறிவார்ந்த செயலால் முன்னேறுங்கள்.
   - ✶ அறிவியல் எனும் புதுமையால் இனம், மொழி கடந்து ஆளும் தமிழை நிலைநிறுத்துங்கள்.
   - ✶ ஏவுகணையின் வேகம்போல் எல்லாக் கோள்களிலும் தமிழை ஏற்றுங்கள் என்பன, 'ஓ, என் சமகாலத் தோழர்களே' என்னும் கவிதையில், கவிஞர் விடுக்கும் வேண்டுகோள்களாகும்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net

## கூடுதல் வினா

2. **வைரமுத்து – ஆசிரியர் குறிப்பு எழுதுக.**

- கவிஞர் வைரமுத்து, தேனி மாவட்டத்து மெட்டூரில் பிறந்தவர். இந்திய அரசின் பத்மபூஷன் விருதினைப் பெற்றவர். கள்ளிக்காட்டு இதிகாசம் புதினத்துக்காக, 2003ஆம் ஆண்டு சாகித்திய அகாதெமி விருது பெற்றவர்.
- இந்தியாவின் சிறந்த பாடலாசிரியருக்கான தேசிய விருதினை ஏழு முறைகளும், மாநில அரசின் விருதினை நான்கு முறைகளும் பெற்றவர். இவருடைய கவிதைகள் இந்தி, தெலுங்கு, மலையாளம், வங்காளம், ஆங்கிலம் உள்ளிட்ட பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

## பலவுள் தெரிக

1. பின்வரும் தொடர்களைப் படித்து, 'நான்' யார் என்று கண்டுபிடிக்க.
அறிவியல் வாகனத்தில் நிறுத்தப்படுவேன்.
எல்லாக் கோள்களிலும் ஏற்றப்படுவேன்.
இளையவர் கூட்டம் என்னை ஏந்தி நடப்பர்.
அ) இணையம் ஆ) தமிழ் இ) கணினி ஈ) ஏவுகணை
**விடை : ஆ) தமிழ்**

## கூடுதல் பலவுள் தெரிக

2. கள்ளிக்காட்டு இதிகாசம் படைத்தவர் ______.
அ) கவிஞர் வாலி ஆ) கவிஞர் வைரமுத்து
இ) கவிஞர் மேத்தா ஈ) கவிக்கோ அப்துல் ரகுமான்
**விடை : ஆ) கவிஞர் வைரமுத்து**
3. கதிர்களைச் சுமந்து தரவேண்டியவை ______.
அ) கிழக்கு வானம் ஆ) முளைக்கும் விதைகள்
இ) பாயும் இளைய நதிகள் ஈ) சாய்ந்து கிடந்த கழனிகள்
**விடை : ஈ) சாய்ந்து கிடந்த கழனிகள்**
4. கட்டுப்பாட்டைக் கடவாததால் பயன் பெற்றது ______.
அ) இளைய நதிகள் ஆ) முளைக்கும் விதை
இ) கூட்டுப்புழு ஈ) முன்னோர் முதுமொழி
**விடை : இ) கூட்டுப்புழு**
5. எதனை வாழ்க்கைப்படுத்தித் துணிந்தால் துன்பம் வராது ______.
அ) முளைக்கும் விதைகளை ஆ) இளைய நதிகளை
இ) முன்னோர் சொன்ன கருத்தை ஈ) கட்டுப்பாட்டை
**விடை : இ) முன்னோர் சொன்ன கருத்தை**
6. இளையவர் கூட்டம் ஏந்தி நடக்கும் புதியவை ______.
அ) பண்பும் அன்பும் ஆ) அறிவும் உணர்ச்சியும்
இ) பொறுமையும் அடக்கமும் ஈ) இனமும் மொழியும்
**விடை : ஈ) இனமும் மொழியும்**
7. கணிப்பொறியுள்ளே பொருத்த வேண்டியது ______.
அ) பண்பும் அன்பும் ஆ) ஆளும் தமிழ்
இ) கரிகாலன் பெருமை ஈ) முன்னோர் சொன்ன மொழி
**விடை : இ) கரிகாலன் பெருமை**

## இலக்கணக் குறிப்பு

**பண்பும்** அன்பும், இன**மும்** மொழி**யும்** – எண்ணும்மைகள்

**சொன்னோர்** – வினையாலணையும் பெயர்

## பகுபத உறுப்பிலக்கணம்

**பொருத்துங்கள் – பொருத்து + உம் + கள்**

**பொருத்து** – பகுதி, **உம்** – முன்னிலைப் பன்மை விகுதி, **கள்** – விகுதிமேல் விகுதி.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

# கற்கண்டு

## வல்லினம் மிகா இடங்கள்

தற்கால உரைநடையில் வல்லினம் மிகா இடங்களாகக் கீழ்க்காண்பவற்றைக் கூறலாம்.

1. அது, இது என்னும் சுட்டுப் பெயர்களின்பின் வல்லினம் மிகாது

   எ–டு: அது செய், இது காண்.

2. வினாப் பெயர்களின்பின் வல்லினம் மிகாது.

   எ–டு: எது கண்டாய்?, எவை தவறுகள்?

3. எழுவாய்த் தொடரில் வல்லினம் மிகாது.

   எ–டு: குதிரை தாண்டியது, கிளி பேசும்.

4. மூன்றாம் வேற்றுமை, ஆறாம் வேற்றுமை விரிகளில் வல்லினம் மிகாது.

   எ–டு: அண்ணனோடு போ, எனது சட்டை.

5. விளித்தொடர்களில் வல்லினம் மிகாது.

   எ–டு: தந்தையே பாருங்கள், மகளே தா.

6. பெயரெச்சத்தில் வல்லினம் மிகாது.

   எ–டு: வந்த சிரிப்பு, பார்த்த பையன்.

7. இரண்டாம் வேற்றுமைத் தொகையில் வல்லினம் மிகாது.

   எ–டு: நாடு கண்டான், கூடு கட்டு.

8. ‘படி’ என்று முடியும் வினையெச்சத்தில் வல்லினம் மிகாது.

   எ–டு: வரும்படி சொன்னார், பெறும்படி கூறினார்.

9. வியங்கோள் வினைமுற்றுத் தொடரில் வல்லினம் மிகாது.

   எ–டு: வாழ்க தமிழ்! வருக தலைவா!

10. வினைத்தொகையில் வல்லினம் மிகாது.

    எ–டு: குடிதண்ணீர், வளர்பிறை, திருவளர்செல்வன்.

11. எட்டு, பத்து தவிரப் பிற எண்ணுப் பெயர்களுடன் புணரும் வல்லினம் மிகாது.

    எ–டு: ஒரு புத்தகம், மூன்று கோடி.

12. உம்மைத் தொகையில் வல்லினம் மிகாது.

    எ–டு: தாய்தந்தை, இரவுபகல்.

13. அன்று, இன்று, என்று, ஆவது, அடா, அடி, போன்ற என்னும் சொற்களின்பின் வல்லினம் மிகாது.

    எ–டு: அன்று சொன்னார், இன்று செய்வான், என்று தருவார், அவராவது தருவதாவது, யாரடா சொல், ஏனடி செல்கிறாய்? கம்பர் போன்ற கவிஞர் யார்?

14. அவ்வளவு, இவ்வளவு, எவ்வளவு, அத்தனை, இத்தனை, எத்தனை, அவ்வாறு, இவ்வாறு, எவ்வாறு, அத்தகைய, இத்தகைய, எத்தகைய, அப்போதைய, இப்போதைய, எப்போதைய, அப்படிப்பட்ட, இப்படிப்பட்ட, எப்படிப்பட்ட, நேற்றைய, இன்றைய, நாளைய ஆகிய சொற்களின் பின் வல்லினம் மிகாது.

    எ–டு: அவ்வளவு பெரியது, அத்தனை சிறியது, அவ்வாறு பேசினான், அத்தகைய பாடங்கள், அப்போதைய பேச்சு, அப்படிப்பட்ட காட்சி, நேற்றைய சண்டை.

15. மூன்று, ஐந்து, ஆறாம் வேற்றுமைவிரித் தொடர்களில் வல்லினம் மிகாது.

    எ–டு: என்னோடு சேர், மரத்திலிருந்து பறி, குரங்கினது குட்டி.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

16. இரண்டாம், மூன்றாம், நான்காம், ஐந்தாம் வேற்றுமைத் தொகைகளில் வல்லினம் மிகாது.
 எ–டு: தமிழ் படி (ஐ), கை தட்டு (ஆல்), வீடு சென்றாள் (கு), வரை பாய்ந்தான். (இருந்து)
17. நிலைமொழி உயர்திணையாய் அமையும் பெயர்த்தொகையில் வல்லினம் மிகாது.
 எ–டு: தலைவி கூற்று, தொண்டர் படை.
18. சால, தவ, தட, குழ என்னும் உரிச்சொற்களைத் தவிர, ஏனைய உரிச்சொற்களின்பின் வல்லினம் மிகாது.
 எ–டு: உறுபொருள், நனிதின்றான், கடிகாவல்.
19. அடுக்குத்தொடர், இரட்டைக்கிளவி ஆகியவற்றில் வல்லினம் மிகாது.
 எ–டு: பார்பார், சலசல,
20. ‘கள்’ என்னும் அஃறிணைப் பன்மை விகுதி சேரும்போது வல்லினம் மிகாது.
 எ–டு: கருத்துகள், பொருள்கள், வாழ்த்துகள்
21. ஐகார வரிசை உயிர்மெய் ஓரெழுத்துச் சொற்களாய்வர, அவற்றோடு கள் விகுதி சேரும்போது வல்லினம் மிகாது.
 எ–டு: பைகள், கைகள்

## சிறுவினா

**1. வல்லினம் இட்டும் நீக்கியும் எழுதுவதன் இன்றியமையாமையை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.**

★ மொழியின் ஆக்கத்திற்குப் புணர்ச்சி இன்றியமையாதது. புணர்ச்சிவிதியில் வல்லெழுத்து மிகவேண்டிய இடத்தில் மிகாமல் இருந்தாலோ, மிகவேண்டாத இடத்தில் மிகுந்தாலோ, தொடரின் பொருளில் பொருத்தமும், உரிய அழுத்தமும், ஓசைநயமும், தெளிவும் இருக்காது. அதனால், பொருள் உணர்வதில் இடர்ப்பாடும், பொருள் வேறுபாடும் ஏற்பட்டுவிடும்.

எ – கா : மருந்துக்கடை – மருந்துகள் விற்கப்படும் கடை.
மருந்துகடை – மருந்தைப் பொடியாகக் கடை.
பசிப்பிணி நாட்டைக் கெடுக்கின்றது – ஒருமை
பசிபிணி நாட்டைக் கெடுக்கின்றன – பன்மை

பசிப்பிணி – பசியாகிய பிணி – பண்புத்தொகையில் ஒற்றுமிகுந்து ஒருமைவினை கொண்டது.
பசிபிணி – பசியும் பிணியும் என்று உம்மைத்தொகைப் பொருளைத் தந்து, பன்மைவிகுதி கொண்டன.
திருவளர் செல்வன் – திருமண அழைப்பிதழில் காண்கிறோம்.
பாமரர்கள் கூட ‘ஊறுகாய்’ என்று கூறுவதைக் காண்கிறோம்; கேட்கிறோம். ‘திருவளர் செல்வன்’ என்பதே சரியானதாகும்.
ஊறுகாய் – ஊறிய காய், ஊறுகின்ற காய், ஊறும் காய். இது வினைத்தொகை; வல்லினம் மிகாமல் ஊறுகாய் என்று கூறுவதைக் காணலாம்.

## கற்பவை கற்றபின்

**1. வல்லினம் வருமா?**

வல்லினமெய் மிகுந்து வராது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ) தோழி | – கூற்று | – தோழி கூற்று | ஆ) பெரிய | – தம்பி | – பெரிய தம்பி |
| இ) சிறிய | – பறவை | – சிறிய பறவை | ஈ) பழகு | – தமிழ் | – பழகு தமிழ் |
| உ) இது | – கேள் | – இது கேள் | ஊ) எலி | – கடிக்கும் | – எலி கடிக்கும் |
| எ) ஓடிய | – குதிரை | – ஓடிய குதிரை | ஏ) தரும்படி | – சொன்னார் | – தரும்படி சொன்னார் |
| ஐ) வாழ்க | – தலைவர் | – வாழ்க தலைவர் | ஒ) கார் | – காலம் | – கார்காலம் |

www.Padasalai.Net

**2. வல்லினம் இடலாமா?**

வல்லினமெய் இடுதல் கூடாது.

**அ) வாழ்த்து** – கள் – வாழ்த்துகள் **ஆ) எழுத்து** – கள் – எழுத்துகள்

**இ) திருநிறை** – செல்வன் – திருநிறை செல்வன் **ஈ) திருவளர்** – செல்வி – திருவளர் செல்வி

**3. எது சரி? எது தவறு? காரணம் கூறுக.**

அ) 'அண்ணாமலை பல்கலைக்கழகம்' – சரி.

அண்ணாமலைப் பல்கலைக்கழகம் – தவறு நிலைமொழி உயர்திணையில் அமையும் பெயர்த் தொகையில் வல்லினம் மிகாது.

ஆ) அத்தனைச் சிறிய – தவறு ('அத்தனை' என்னும் சொல்லின்பின் வல்லினம் மிகாது.)

இ) ஆத்திச்சூடி – தவறு (இரண்டாம் வேற்றுமைத்தொகையில் மிகாது.)

ஈ) எடுத்துக்காட்டுகள் – சரி (வன்தொடர் குற்றியலுகரத்தில் மிகும்.)

உ) கீழ்பக்கம் – தவறு (திசைப்பெயர்களில் வல்லினம் மிகும்.)

ஊ) சான்றோர் பேரவை – சரி (நிலைமொழி உயர்திணையாய் அமையும் பெயர்த் தொகையில் மிகாது.

எ) சென்னைப் பல்கலைக்கழகம் – சரி (இடப்பெயர்முன் வல்லினம் மிகும்)

ஏ) தயிர்ச்சோறு – சரி (இருபெயரொட்டுப் பண்புத்தொகையில் மிகும்.)

**4. கீழ்க்காணும் தொடர்களில் வல்லினம் மிகும், மிகா இடங்களைக் கண்டறிந்து, அவற்றுக்கான இலக்கணங்களை அறிக.**

அ) வங்கி கடன் – ஆறாம் வேற்றுமைத்தொகையில் மிகாது.

ஆ) பழங்களை பறிக்காதீர்கள் – இரண்டாம் வேற்றுமை விரியில் மிகும் (பழங்களைப் பறிக்காதீர்கள்)

இ) திட்ட குழு – மகர ஈற்றுப் பெயருடன் வல்லினம் மிகும் (திட்டக்குழு)

ஈ) அரசு ஆணை பிறப்பித்தது – இரண்டாம் வேற்றுமைத்தொகையில் மிகாது.

உ) மருந்து கடை – இரண்டாம் வேற்றுமைத் தொகையாகக் கொண்டால் மிகாது.

ஊ) வேலையில்லா பட்டதாரி – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தில் மிகும். (வேலையில்லாப் பட்டதாரி)

எ) சிறப்பு பரிசு – இருபெயரொட்டுப் பண்புத்தொகையில் மிகும் (சிறப்புப் பரிசு).

www.Padasalai.Net

# இயல் – 5

## உரைநடை உலகம்

## கல்வியில் சிறந்த பெண்கள்

### குறுவினா

1. **சாரதா சட்டம் எதற்காக இயற்றப்பட்டது?**
   ★ சாரதா சட்டம், குழந்தைத் திருமணத்தைத் தடுப்பதற்காக இயற்றப்பட்டது.

### கூடுதல் வினாக்கள்

2. **பெண் கல்வி கற்பதால் ஏற்படும் பயன்கள் யாவை?**
   ➤ பெண், கல்வி கற்பதால் சொந்தக்காலில் நிற்கமுடியும்; சுயமாகச் சிந்திக்கவும் செயல்படவும் முடியும்.
3. **சங்ககாலத்தில் உருவான நூல்கள் யாவை?**
   ➤ சங்ககாலத்தில் உருவான நூல்கள் பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் ஆகும்.
4. **பக்தி இலக்கியம் வளர்ந்த காலத்தில் இறைவனுக்குப் பாமாலை சூட்டியவர்கள் யாவர்?**
   ➤ பக்தி இலக்கியம் வளர்ந்த காலத்தில், காரைக்கால் அம்மையார், ஆண்டாள் ஆகியோர், இறைவனுக்குப் பாமாலை சூட்டியவர்கள் ஆவர்.
5. **தமிழகத்தின் முதல் பெண்மருத்துவர் யார்?**
   ➤ தமிழகத்தின் முதல் பெண்மருத்துவர், முத்துலெட்சுமி அம்மையார்.
6. **பெண்கள் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டவர்கள் யாவர்?**
   ➤ மருத்துவர் முத்துலெட்சுமி, மூவலூர் இராமாமிர்தம், தந்தை பெரியார், மகாகவி பாரதியார், புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் ஆகியோர், பெண்கள் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டவர்கள் ஆவர்.
7. **முதன்முதலில் பெண்களுக்கான பள்ளியைத் தொடங்கியவர்கள் யாவர்?**
   ➤ முதன்முதலில் பெண்களுக்கான பள்ளியைத் தொடங்கியவர்கள், மராட்டிய மாநிலத்தின் ஜோதிராவ் பூலே, சாவித்திரிபாய் பூலே இணையராவர்.
8. **வேலூரில் இலவச மருத்துவம் அளித்தவர் யார்?**
   ➤ வேலூரில் இலவச மருத்துவம் அளித்தவர், ஐடாஸ் சோபியா ஸ்கட்டர் ஆவார்.
9. **2014இல் அமைதிக்கான 'நோபல் பரிசு' பெற்றவர் யார்?**
   ➤ 2014இல் 'கைலாஷ் சத்யார்த்தி' என்பவர், அமைதிக்கான நோபல் பரிசு பெற்றார்.
10. **சிறுமி மலாலா, எதற்காக நோபல்பரிசு பெற்றார்?**
    ➤ சிறுமி மலாலா, பெண்கல்வியின் அவசியத்தை வலியுறுத்திப் போராடியதால் நோபல் பரிசு பெற்றார்.
11. **பண்டித ரமாபாய் பற்றி எழுதுக.**
    ➤ பண்டித ரமாபாய், சமூகத் தன்னார்வலர்.
    ➤ தடைகளை மீறிக் கல்வி கற்றுப் பண்டிதராகியவர்.
    ➤ பெண்களின் உயர்வுக்குத் துணை நின்றவர்.
12. **சாவித்திரிபாய் பூலே பற்றி எழுதுக.**
    ➤ சாவித்திரிபாய் பூலே, 1848இல் பெண்களுக்கெனத் தொடங்கப்பட்ட பள்ளியில், ஆசிரியராகப் பணியாற்றியவர். இவரே நாட்டின் முதல் பெண்ஆசிரியர் ஆவார்.
13. **வில்லுப்பாட்டுக் குழுவினர், எதைப் பற்றிப் பாடினர்?**
    ➤ வில்லுப்பாட்டுக் குழுவினர், பெண்கல்வியின் அவசியம் பற்றியும், கல்வியில் சிறந்த பெண்களைப் பற்றியும் பாடினர்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

## சிறுவினா

**1. சங்ககாலப் பெண்பாற் புலவர்களின் பெயர்களை எழுதுக.**

✶ **சங்ககாலப் பெண்பாற் புலவர்கள் :** ஔவையார், ஒக்கூர் மாசாத்தியார், ஆதிமந்தியார், காக்கைப் பாடினியார், வெள்ளிவீதியார், வெண்ணிக் குயத்தியார், நக்கண்ணையார், மாறோக்கத்து நப்பசலையார், பொன்முடியார், பெருங்கோப்பெண்டு ஆகியோராவர்.

**2. 'இன்றைய பெண்கல்வி' என்னும் தலைப்பில் வில்லுப்பாட்டு வடிவில் பாடல் எழுதுக.**

### இன்றைய பெண் கல்வி

**குழுத்தலைவர் :** தந்தனத்தோம் என்று சொல்லியே, வில்லினில் பாட வந்தருள்வாய் கலைமகளே!

**குழுவினர் :** ஆமாம்; வில்லினில் பாட...

**குழுத்தலைவர் :** இன்றைய பெண்கள், புதுமைப் பெண்களாக புரட்சிப் பெண்களாக, விண்வெளியின் வீராங்கனைகளாக நாளும் வளர்ந்து வலம் வருகிறார்கள்.

**குழுவினர் :** ஆமாம் நாளும் வளர்ந்து வலம் வருகிறார்கள்.

**குழுத்தலைவர் :** பெண்கள், ஆண்களைவிட நல்லாப் படிக்கிறாங்க! பட்டம் பதவி எல்லாம் பெறுகிறாங்க!

**குழுவினர் :** இன்னும் கொஞ்சம் விளக்கமாச் சொல்லுங்க அண்ணே!

**குழுத்தலைவர் :** அறிவியல் துறையில் அறிஞர்களாக, ஆட்சித் துறையில் தலைவர்களாக, தொழில் துறையில் வல்லுநர்களாக, சட்டத்துறையில் மேதைகளாக, மண்ணகத்திலிருந்து விண்ணகம்வரை சகல துறைகளிலும் சாதனை புரிந்து வருகிறார்கள்.

**குழுவினர் :** ஆமாம்; சாதனை புரிந்து வருகிறார்கள்!

**3. மருத்துவர் முத்துலெட்சுமியின் சாதனைகளைக் குறிப்பிடுக.**

✶ முத்துலெட்சுமி அம்மையார், தமிழகத்தில் டாக்டருக்குப் படித்த முதல் பெண்மணி ஆவார். சென்னை மாநகராட்சியின் முதல் பெண் துணை மேயர்; சட்ட மேலவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் பெண்மணி.

✶ இந்தியப் பெண்கள் சங்கத்தின் முதல் தலைவர்.

✶ தேவதாசி ஒழிப்புச் சட்டம், பெண்களுக்குச் சொத்துரிமை வழங்கும் சட்டம், குழந்தைத் திருமணத் தடைச்சட்டம் ஆகியவை நிறைவேறக் காரணமாக இருந்தவர்.

✶ இவர், 1930இல் அடையாற்றில் ஔவை இல்லம் தொடங்கினார். 1952இல் புற்றுநோய் மருத்துவ மனையை நிறுவினார். இவர்தம் சாதனைகளுக்காகப் பத்மவிபூஷண் விருது பெற்றவர்.

**4. நீலாம்பிகை அம்மையாரது தமிழ்ப்பணியின் சிறப்பை விளக்குக.**

✶ நீலாம்பிகை அம்மையார், 1903ஆம் ஆண்டு நாகப்பட்டினத்தில் மறைமலை அடிகளாருக்கும், சவுந்தரவல்லி அம்மையாருக்கும் மகளாகப் பிறந்தவர். தந்தையைப் போலவே தனித்தமிழ்ப் பற்றுடையவர். பல்லாவரம், 'வித்யோதயா மகளிர் கல்லூரி'யிலும், இராயபுரம் 'நார்த்விக்' மகளிர் கல்லூரியிலும் தமிழாசிரியராகப் பணிபுரிந்துள்ளார்.

✶ தனித்தமிழ் பற்றிய கட்டுரைகள் எழுதியதோடு, சொற்பொழிவுகளும் நிகழ்த்தினார். தனித்தமிழ்க் கட்டுரை, வடசொல்–தமிழ் அகரவரிசை, முப்பெண்மணிகள் வரலாறு, பட்டினத்தார் பாடிய மூவர் ஆகிய நூல்களை எழுதியுள்ளார். 1942இல் சைவ மாதர் கழகம் தொடங்கித் தொண்டுகள் செய்து வந்தார். தமிழ்மொழி வளர்ச்சிக்கும், பெண்கள் முன்னேற்றத்துக்கும் அயராது பாடுபட்டவர்.

## கூடுதல் வினாக்கள்

**5. ஈ. த. இராஜேஸ்வரி அம்மையாரின் தொண்டினை விளக்குக.**

➤ ஈ. த. இராஜேஸ்வரி அம்மையார், தமிழ் இலக்கியம், அறிவியல் ஆகிய துறைகளில் சிறந்து விளங்கினார். தமிழ் இலக்கிய நூல்களில் காணப்பட்ட அறிவியல் உண்மைகளைத் தெளிவாக எடுத்துக் காட்டியவர்.

➤ திருமந்திரம், தொல்காப்பியம், கைவல்யம் போன்ற நூல்களில் உள்ள அறிவியல் உண்மைகளைப் பற்றிச் சொற்பொழிவு ஆற்றுவதில் வல்லவர். இராணிமேரிக் கல்லூரியில் அறிவியல் பேராசிரியராகப் பணியாற்றியுள்ளார். 'சூரியன்', 'பரமாணுப் புராணம்' என்னும் அறிவியல் நூல்களை எழுதியுள்ளார்.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

6. மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் பற்றிக் குறிப்பு வரைக.

- மூவலூர் இராமாமிர்தம் அவர்கள், சமூக சீர்திருத்தவாதி. எழுத்தாளர்; திராவிட இயக்க அரசியல் செயல்பாட்டாளர்; தேவதாசி ஒழிப்புச் சட்டம் நிறைவேறத் துணைநின்றவர். எட்டாம் வகுப்புவரை படித்த இளம் பெண்களுக்கான திருமண உதவித் தொகையை இவர் பெயரில் தமிழக அரசு வழங்கிவருகிறது.

## நெடுவினா

1. நீங்கள் அறிந்த சாதனைப் பெண்கள் குறித்த செய்திகளை விவரிக்க.

பாடநூல்வழி அறிந்த சாதனைப் பெண்கள் :

‘**சாவித்திரிபாய் பூலே**’ என்பவர், இந்தியாவில் முதல் பெண்ஆசிரியராகப் பணிபுரிந்தார்; சிறந்த கவிஞராகவும், சமூக சீர்திருத்தவாதியாகவும் திகழ்ந்தார். பெண்கல்விக்காகப் போராடினார்.

சமூக சீர்திருத்தவாதியாக விளங்கிய ‘**பண்டித ரமாபாய்**’, பெண்உரிமைக்காகப் போராடினார். தடைகளை மீறிக் கல்வி கற்றுப் பண்டிதராகிப் பெண்கள் உயர்வுக்குத் துணை நின்றார்.

‘**ஐடாஸ் சோபியா ஸ்கட்டர்**’, அமெரிக்க நாட்டவர்; மருத்துவம் கற்று இந்தியாவில் மருத்துவம் செய்தார்; 1900ஆம் ஆண்டு வேலூரில் மருத்துவமனையையும், மருத்துவக் கல்லூரியையும் நிறுவினார்.

‘**மூவலூர் இராமாமிர்தம்**’ அம்மையார், சிறந்த சமூக சீர்திருத்தவாதி; சிறந்த எழுத்தாளர். திராவிட இயக்கக் கொள்கைகளைப் பரப்பியவர். தேவதாசி முறை ஒழிப்புச் சட்டம் கொண்டுவரப் போராடினார். எட்டாம் வகுப்புவரை படித்த இளம்பெண்களுக்குத் தமிழக அரசு, திருமண உதவித் தொகையை இவர் பெயரில் வழங்கிவருகிறது.

‘**முத்துலெட்சுமி**’, மருத்துவப் படிப்பை முடித்த முதல் தமிழ்நாட்டுப் பெண்மணி. இந்தியப் பெண்கள் சங்கத்தின் முதல் தலைவர். சென்னை மாநகராட்சியின் முதல் துணைமேயர்; சட்ட மேலவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் பெண்மணி. தேவதாசி முறை ஒழிப்புச் சட்டம், இருதாரத் தடைச்சட்டம், பெண்களுக்குச் சொத்துரிமைச் சட்டம், குழந்தைத் திருமணச் சட்டம் எனப் பல சட்டங்களைக் கொண்டுவந்து, பெண்களின் கல்விக்காக உழைத்தவர்.

‘**நீலாம்பிகை அம்மையார்**’, மறைமலையடிகளாரின் மகள்; தனித்தமிழில் பேசவும் எழுதவும் ஆர்வத்தை வளர்த்தவர். சிறந்த பல தமிழ் நூல்களை எழுதியவர். இன்றைய நிலையில் ஆண்களுக்கு நிகராகவும், மேலாகவும் அனைத்துத் துறைகளிலும் சாதனை படைத்துவரும் பெண்கள், நம் நாட்டில் வாழ்ந்து வருகின்றனர்.

## கற்பவை கற்றபின்

1. இன்றைய சாதனைப் பெண்கள் என்னும் தலைப்பில் தொகுப்பேடு உருவாக்குக.

இன்றைய பெண்கள் புதுமைப் பெண்களாக, புரட்சிப் பெண்களாக, அறிவூட்டும் ஆசிரியர்களாக, இல்லத் தலைவிகளாக, தகவல் தொடர்பு வல்லுநர்களாக, விண்வெளி ஆராய்ச்சியாளர்களாக அனைத்துத் துறைகளிலும் சிறப்பான சாதனைகளைச் செய்து கடமையாற்றி வருகிறார்கள்.

ஸ்மிதா டண்டி என்பவர், சமூக ஊடகங்கள் வாயிலாகப் பணம் சேர்த்து, மருத்துவ உதவி செய்து வருகிறார். விரன் நிறுவனரான டாக்டர். நந்திஷா அவர்கள், சர்க்கரை நோயற்ற இந்தியாவை உருவாக்கும் நோக்கத்துடன் உதவி வருகிறார்.

டெக்ஸ்டைல் வடிவமைப்பாளரான கல்யாணி ப்ரமோத் பாலகிருஷ்ணண், பாரம்பரியக் கைத்தொழில்களை ஊக்குவித்து, ஏழை நெசவாளர்களுக்கு உதவி வருகிறார். யோகா ஆர்வலரான வி. நன்னம்மாள், யோகா பயிற்சி அளித்து வருகிறார்.

ரிக்ஷா தொழிலாளியின் மகளான ஸ்வப்னா பர்மன், ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் நான்கு தங்கப் பதக்கங்கள் பெற்றுள்ளார். துப்பாக்கிச் சுடுதல் போட்டியில் ரஹிசர்னோபத், தங்கப் பதக்கம் வென்றுள்ளார். திருச்சி மாவட்ட கள்ளக்காம்பட்டியைச் சார்ந்த சௌமியா, ஐ.ஏ.எஸ். தேர்வில் வெற்றி பெற்றுள்ளார்.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net

**2. கல்வி குறித்த சிறப்புத் தொடர்கள், பொன்மொழிகளைத் திரட்டிக் கட்டுரை எழுதுக.**

* இன்றைய உலகில் இன்றியமையாத ஒன்று கல்வியே ஆகும்.
* கல்வி என்பது வாழ்வாங்கு வாழ்வதற்காக உதவும் கருவியாகும்.
* இளமையில் படிப்பது பசுமரத்தாணிபோலப் பதிந்துவிடும்.
* கல்வியை வருந்திக் கற்பவர், வளையும் மூங்கிலாய்ப் பெருமையடைவர்; வருந்திக் கல்லாதவர், மிதிபடும் மூங்கிலாய்ச் சிறுமையடைவர்.
* கற்கும்போது கசப்பாகவும், கற்றபின் இனிப்பாகவும் இருப்பது கல்வியே.
* கல்வி கற்காமல் வாழ்வது மிகக் கடினம். இதனையே வள்ளுவர்,

  "யாதானும் நாடாமால் ஊராமால் என்ஒருவன்

  சாந்துணையும் கல்லாத வாறு"
* என்று குறிப்பிடுகின்றார்.
* 'கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு' என்ற ஆன்றோரின் வாக்கை மனத்தில் கொண்டு கற்கவேண்டும்.
* கல்வி கேள்விகளில் சிறந்த அறிவுடையவனையே அனைவரும் போற்றுவர்; பெற்ற தாயும் மதிப்பாள்; அன்பு செலுத்துவாள்.

  உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்

  பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே
* எனப் புறநானூறும் பாடுகிறது. ஆதலால், மனித ஆயுள் முழுவதும் பொருளைக் கொடுத்தாவது கற்றல் நல்லது.
* 'கல்வி கரையில கற்பவர் நாள்சில' என நாலடியாரும் கூறுகிறது. கல்விக்காக உயிர் கொடுத்தோர் என்றும் மரணிப்பதில்லை. மனப்பாடம் செய்வதையும் ஒப்பிப்பதையும் கல்வி என்று கருதக்கூடாது.

### தொடர்கள்

1. கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு.
2. கைப்பொருள் தன்னின் மெய்ப்பொருள் கல்வி.
3. கல்வி கரையில; கற்பவர் நாள்சில.
4. கற்றது கைம்மண்ணளவு; கல்லாதது உலகளவு.
5. கல்வி யழகே அழகு.

### பொன்மொழிகள்

கற்ற கல்வியும் பெற்ற செல்வமும் கடைசி மூச்சுவரை பிறருக்குக் கொடுக்கத்தான்.
எடுத்தால் குறைவது செல்வம்; கொடுத்தால் வளர்வது கல்வி.
கல்வி ஓர் அணிகலன். அணிந்தால் அழகினைத் தரும்; அணிவித்தால் சிறப்பினைத் தரும்.

### கூடுதல் பலவுள் தெரிக

**சரியான விடையைத் தேர்வு செய்க.**

1. சங்ககாலப் பெண்பாற் புலவர்களில் தூதுபோனவர் ______.
   அ) ஆதிமந்தியார் ஆ) ஔவையார் இ) பொன்முடியார் ஈ) வெள்ளிவீதியார்
   **விடை : ஆ) ஔவையார்**
2. சமணமதமும் புத்தமதமும் வளர்ந்த காலத்தில், கல்வி கற்ற பெண்ணாக இருந்தவர் ______.
   அ) மாதவி ஆ) கண்ணகி இ) மணிமேகலை ஈ) காயசண்டிகை
   **விடை : இ) மணிமேகலை**
3. பக்தி இலக்கியம் வளர்ந்த காலத்தில் இறைவனுக்குப் பாமாலை சூட்டியவர்கள் ______.
   அ) காரைக்கால் அம்மையார், ஆண்டாள். ஆ) காக்கைப் பாடினியார், காவற்பெண்டு.
   இ) பொன்முடியார், நன்முல்லையார். ஈ) வெள்ளிவீதியார், வெண்ணிக்குயத்தியார்.
   **விடை : அ) காரைக்கால் அம்மையார், ஆண்டாள்.**



www.Padasalai.Net

4. தமிழகத்தில் முதல் பெண் மருத்துவர் ______.
அ) முத்துலெட்சுமி அம்மையார் ஆ) மணியம்மையார்
இ) மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் ஈ) பண்டித ரமாபாய்
**விடை : அ) முத்துலெட்சுமி அம்மையார்**

5. வேலூரில் இலவச மருத்துவம் அளித்த அமெரிக்கர் ______.
அ) ஐடாஸ் சோபியா ஸ்கட்டர் ஆ) ஈ. த. இராஜேஸ்வரியார்
இ) பெதரீசியஸ் ஈ) ரேனியஸ் எல்லீஸ்
**விடை :** அ) ஐடாஸ் சோபியா ஸ்கட்டர்

6. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| 1. மருத்துவமனை நிறுவியவர் | – | அ. | நீலாம்பிகை |
| 2. 12 வயதில் நோபல் பரிசு பெற்ற பெண் | – | ஆ. | சாவித்திரிபாய் பூலே |
| 3. தனித்தமிழ்ப் பற்றுடையவர் | – | இ. | ஐடாஸ் சோபியா ஸ்கட்டர் |
| 4. நாட்டின் முதல் பெண்ஆசிரியர் | – | ஈ. | மலாலா |
| | – | உ. | மூவலூர் இராமாமிர்தம் |

**விடை :**

| | | |
|---|---|---|
| 1. மருத்துவமனை நிறுவியவர் | – | ஐடாஸ் சோபியா ஸ்கட்டர் |
| 2. 12 வயதில் நோபல் பரிசு பெற்ற பெண் | – | மலாலா |
| 3. தனித்தமிழ்ப் பற்றுடையவர் | – | நீலாம்பிகை |
| 4. நாட்டின் முதல் பெண் ஆசிரியர் | – | சாவித்திரிபாய் பூலே |

7. தமிழின் பொற்காலம் எனப்படுவது எது?
அ) சங்ககாலம் ஆ) சேரர் காலம் இ) சோழர் காலம் ஈ) பாண்டியர் காலம்
**விடை : அ) சங்ககாலம்**

8. சங்க காலத்தில் உருவான நூல்கள் ______.
அ) இராமாயணம், மகாபாரதம் ஆ) சிலப்பதிகாரம், மணிமேகலை
இ) பத்துப்பாட்டு, எட்டுத்தொகை ஈ) சிற்றிலக்கியம், பதினெண்கீழ்க்கணக்கு
**விடை : இ) பத்துப்பாட்டு, எட்டுத்தொகை.**

9. சமூக சேவகியாய் இருந்து, பெண்களின் முன்னேற்றத்திற்குப் பாடுபட்டவர் ______.
அ) முத்துலட்சுமி அம்மையார். ஆ) மூவலூர் இராமாமிர்தம் அம்மையார்.
இ) நீலாம்பிகை அம்மையார். ஈ) இராஜேஸ்வரி அம்மையார்.
**விடை : ஆ) மூவலூர் இராமாமிர்தம் அம்மையார்.**

10. பெண்ணடிமை தீரும்வரை மண்ணடிமை தீருமோ என இடிமுழக்கம் செய்தவர் ______.
அ) தந்தை பெரியார் ஆ) பாரதியார்
இ) பாரதிதாசன் ஈ) பேரறிஞர் அண்ணா
**விடை : இ) பாரதிதாசன்**

11. முதன்முதலில் பெண்கல்விக்குப் பரிந்துரை செய்த குழு ______.
அ) கோத்தாரி கல்விக்குழு ஆ) ஹண்டர் கல்விக்குழு
இ) மெக்காலே கல்விக்குழு ஈ) சர் சார்லெஸ்உட் கல்விக்குழு
**விடை : ஆ) ஹண்டர் கல்விக்குழு**

12. இந்தியாவில் குழந்தையைக் காப்போம் என்ற அமைப்பை நிறுவியவர் ______.
அ) ஜான் மேனுவல் சந்தோஷ் ஆ) ஆல்பர்ட் ஆப்ரகாம் மைக்கல்சன்
இ) கைலாஷ் சத்யார்த்தி ஈ) சுப்பிரமணியன் சந்திரசேகர்
**விடை : இ) கைலாஷ் சத்யார்த்தி**

13. பெண்கல்வியின் அவசியத்தை வலியுறுத்திப் போராடி நோபல் பரிசு பெற்றவர் ______.
அ) அலெஸ் பெல்யாட்ஸ்கி ஆ) லூத்மிலா
இ) அலெக்ஸ்ஸேவா ஈ) மலாலா
**விடை : ஈ) மலாலா**

www.Padasalai.Net

# கவிதைப்பேழை

## சிறுபஞ்சமூலம்

### குறுவினாக்கள்

**1. மூவாது மூத்தவர், நூல் வல்லார் – இத்தொடர்கள் உணர்த்தும் பொருள்களைக் குறிப்பிடுக.**

✶ மூவாது மூத்தவர் – வயதால் முதுமையடையாத இளையவர், அனுபவ அறிவால் மூத்தவரோடு வைத்து எண்ணத் தக்கவர்.

✶ நூல் வல்லார் – பல நூல்களைக் கற்ற பெரியோர்.

### கூடுதல் வினாக்கள்

**2. அறஇலக்கியங்கள் என்றால் என்ன?**

➤ மனித வாழ்வைச் செழுமையாக்கும் அறக்கருத்துகளைக் கூறும் நூல்களே, அறஇலக்கியங்கள் எனப்படும்.

**3. அறஇலக்கியங்கள் சிலவற்றைக் கூறுக.**

➤ திருக்குறள், நாலடியார், நான்மணிக்கடிகை, திரிகடுகம், ஏலாதி, சிறுபஞ்சமூலம், ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை நல்வழி முதலானவை, அறஇலக்கியங்கள் ஆகும்.

**4. பூக்காமலே காய்க்கும் மரங்கள் சிலவற்றைக் கூறுக.**

➤ ஆல், அரசு, அத்தி, பலா மரங்கள், பூக்காமலே காய்க்கும் மரங்களாகும்.

**5. சிறுபஞ்சமூலத்தின் ஆசிரியர் யார்?**

➤ சிறுபஞ்சமூலத்தின் ஆசிரியர் காரியாசான்.

**6. காரியாசான், யாருடைய மாணாக்கர்?**

➤ காரியாசான், மதுரைத் தமிழாசிரியர் மாக்காயனாரின் மாணாக்கர்.

**7. காரியாசானின் இயற்பெயர் யாது?**

➤ காரியாசானின் இயற்பெயர் காரி.

**8. சிறுபஞ்சமூலம் என்பதற்குப் பொருள் என்ன?**

➤ சிறுபஞ்சமூலம் என்பதற்கு ஐந்து சிறிய வேர்கள் என்பது பொருள்.

**9. உடல்நோயைப் போக்கும் ஐந்து சிறிய வேர்கள் யாவை?**

➤ கண்டங்கத்திரி, சிறுவழுதுணை, சிறுமல்லி, பெருமல்லி, நெருஞ்சி ஆகியவை, உடல் நோய்ப் போக்கும் ஐந்து சிறிய வேர்கள் ஆகும்.

**10. சிறுபஞ்சமூலத்தின் ஒரு பாடலில், எத்தனை கருத்துகள் இடம் பெற்றுள்ளன?**

➤ சிறுபஞ்சமூலத்தின் ஒரு பாடலில், ஐந்து கருத்துகள் இடம்பெற்றுள்ளன.

### சிறுவினா

**1. விதைக்காமலே முளைக்கும் விதைகள் – இத்தொடரின்வழிச் சிறுபஞ்சமூலம் தெரிவிக்கும் கருத்துகளை விளக்குக.**

✶ பாத்தி அமைத்து விதைக்காமலேயே நாம் தின்று தோட்டத்தில் போட்ட பழத்தின் கொட்டைகளும், பறவைகள் எச்சமிடுவதால் விழுந்த விதைகளும், காற்றில் வெடித்துச் சிதறிய விதைகளும் தாமே முளைத்து வளரும்.

✶ அதைப் போலவே, சான்றோர்களும் பிறர் உணர்த்தாமல் தாமே உணர்ந்து எதையும் செய்து முடிப்பர்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net

## கூடுதல் வினாக்கள்

2. **சிறுபஞ்சமூலம் – நூற்குறிப்புத் தருக.**
   - சிறுபஞ்சமூலம், பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றாகும். இதன் ஆசிரியர் காரியாசான்.
   - சிறுபஞ்சமூலம் என்பதற்கு, ஐந்து சிறிய வேர்கள் என்பது பொருள்.
   - கண்டங்கத்திரி, சிறுவழுதுணை, சிறுமல்லி, பெருமல்லி, நெருஞ்சி ஆகிய வேர்கள், மக்களின் உடல்நோயைப் போக்குவன. அவற்றைப் போல், இந்நூலின் ஒவ்வொரு பாடலிலும் அமைந்துள்ள ஐந்து ஐந்து கருத்துகளும், மக்களின் உளநோயைப் போக்குவன.
   - நன்மை தருவன, தீமை தருவன, நகைப்புக்கு உரியன என்னும் வகையில் வாழ்வியல் உண்மைகளை, இப்பாடல்கள் எடுத்துக்காட்டுகின்றன.
3. **சிறுபஞ்சமூலம் – ஆசிரியர் குறிப்புத் தருக.**
   - சிறுபஞ்சமூலத்தின் ஆசிரியர் காரியாசான்.
   - இவர், மதுரைத் தமிழாசிரியர் மாக்காயனாரின் மாணாக்கர்.
   - இவரது இயற்பெயர் காரி. ஆசான் என்பது தொழிலின் அடிப்படையில் அமைந்த பெயர்.
   - 'மாக்காரியாசான்' என்று, பாயிரச் செய்யுள் இவரைச் சிறப்பித்துள்ளது.

## இலக்கணக்குறிப்பு

**அறிவார், வல்லார்** – வினையாலணையும் பெயர்கள்

**விதையாமை, உரையாமை** – எதிர்மறைத் தொழிற்பெயர்கள்

**தாவா** – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

## பகுபத உறுப்பிலக்கணம்

1. **உரையாமை – உரை + ய் + ஆ + மை**
   **உரை** – பகுதி, **ய்** – சந்தி (உடம்படுமெய்), **ஆ** – எதிர்மறை இடைநிலை,
   **மை** – தொழிற்பெயர் விகுதி.
2. **காய்க்கும் – காய் + க் + க் + உம்**
   **காய்** – பகுதி, **க்** – சந்தி, **க்** – எதிர்கால இடைநிலை, **உம்** – பெயரெச்ச விகுதி.
3. **அறிவார் – அறி + வ் + ஆர்**
   **அறி** – பகுதி, **வ்** – எதிர்கால இடைநிலை, **ஆர்** – பலர்பால் வினைமுற்று விகுதி.

## கற்பவை கற்றபின்

1. **பூக்காமலே காய்க்கும் மரங்கள், விதைக்காமலே முளைக்கும் விதைகள் எவையெனக் கேட்டறிந்து வகுப்பறையில் கூறுக.**

பூக்காமலே காய்க்கும் மரங்கள்: ஆலமரம், அரசமரம், அத்திமரம், பலாமரம்.

**விதைக்காமலே முளைக்கும் விதைகள் :**

1. நாம் உண்ணும் பழங்களிலிருந்து விழுந்த விதைகள்.
2. பறவைகளின் எச்சங்கள் மூலமாக விழுந்த விதைகள்.
3. மரத்திலேயே முற்றிய கனிகள், தரையில் விழுந்தபோது சிதறிய விதைகள்.

2. **மூவாது மூத்தவர், காணாது கண்டவர் – இவைபோல நயம் அமைந்த தொடர்களை எழுதுக.**

கேளாமல் உதவுவார், சொல்லாமலே செய்வார், தேடாமலே கிடைப்பவை, அழையாமலே வருபவர், இறவாமல் இருப்பவர், ஓடாது வென்றவர்.

www.Padasalai.Net

## கூடுதல் பலவுள் தெரிக

1. பாடல்களில் ஐந்தைந்து கருத்துகளைக் கூறும் நூல் ______.
அ) நாலடியார் ஆ) சிறுபஞ்சமூலம் இ) ஏலாதி ஈ) திருக்குறள்
**விடை : ஆ) சிறுபஞ்சமூலம்**

2. சிறுபஞ்சமூலத்தின் ஆசிரியர் ______.
அ) கணிமேதாவியார் ஆ) கணியன் பூங்குன்றனார்
இ) காரியாசான் ஈ) காரிகிழார்
**விடை : இ) காரியாசான்**

3. பத்து வயதில் சொற்பொழிவு நிகழ்த்தும் ஆற்றலைப் பெற்றவர் ______.
அ) பாரதியார் ஆ) வள்ளலார் இ) வெள்ளிவீதியார் ஈ) வான்மீகியார்
**விடை : ஆ) வள்ளலார்**

4. பதினாறு வயதில் தம் தந்தையின் போர்ப்படையில் தளபதியானவர் ______.
அ) அலெக்சாண்டர் ஆ) அக்பர் இ) ஔரங்கசீப் ஈ) அசோகர்
**விடை : அ) அலெக்சாண்டர்**

5. சிறுபஞ்சமூலம் என்பது ______.
அ) ஐந்துவகைப் பழங்கள் ஆ) ஐந்துவகை சிறிய வேர்கள்
இ) ஐந்துவகைக் கிழங்குகள் ஈ) ஐந்துவகை நிலங்கள்
**விடை : ஆ) ஐந்துவகை சிறிய வேர்கள்**

6. ஒவ்வொரு பாடலிலும் மூன்று மூன்று கருத்துகளை உடைய நூல் ______.
அ) நாலடியார் ஆ) திரிகடுகம் இ) சிறுபஞ்சமூலம் ஈ) ஏலாதி
**விடை : ஆ) திரிகடுகம்**

7. திரிகடுகம் என்பது ______.
அ) சுக்கு, மிளகு, திப்பிலி. ஆ) சித்தா, ஆயுர்வேதா, யுனானி.
இ) சுக்கு, மிளகு, கடுகு. ஈ) இஞ்சி, ஏலம், மிளகு.
**விடை : அ) சுக்கு, மிளகு, திப்பிலி.**

8. ஒவ்வொரு பாடலிலும் ஆறு ஆறு கருத்துகளைக் கொண்ட நூல் ______.
அ) நாலடியார் ஆ) சிறுபஞ்சமூலம் இ) திரிகடுகம் ஈ) ஏலாதி
**விடை : ஈ) ஏலாதி**

9. ஆறு மூலிகை கலந்த அபூர்வ மருந்து, ______ எனப்படும்.
அ) திரிகடுகம் ஆ) சிறுபஞ்சமூலம் இ) ஏலாதி ஈ) திரிபலா
**விடை : இ) ஏலாதி**

10. ஏலாதியில் உள்ள ஆறு மூலிகைகள் ______.
அ) ஏலம், இலவங்கம், சிறுமல்லி, பெருமல்லி, நெருஞ்சி.
ஆ) ஏலம், இலவங்கம், சிறுநாவல்பூ, சுக்கு, மிளகு, திப்பிலி.
இ) சுக்கு, மிளகு, திப்பிலி, இஞ்சி, ஏலம், சிறுமல்லி.
ஈ) கண்டங்கத்தரி, சிறுமல்லி, பெருமல்லி, சுக்கு, மிளகு, திப்பிலி.
**விடை : ஆ) ஏலம், இலவங்கம், சிறுநாவல்பூ, சுக்கு, மிளகு, திப்பிலி.**

11. சிறுபஞ்சமூலம், ______ நூல்களுள் ஒன்று.
அ) பதினெண்மேல்கணக்கு ஆ) பதினெண்கீழ்க்கணக்கு
இ) சிற்றிலக்கியம் ஈ) காப்பியம்
**விடை : ஆ) பதினெண்கீழ்க்கணக்கு**

www.Padasalai.Net

# கற்கண்டு

# இடைச்சொல் – உரிச்சொல்

## இடைச்சொற்கள்

### குறுவினாக்கள்

**1. இடைச்சொல் என்றால் என்ன?**

✶ தனித்து இயங்காமல், பெயர்ச் சொற்களையும் வினைச் சொற்களையும் சார்ந்து நின்று பொருளை விளக்கும் சொல், இடைச்சொல் எனப்படும்.

**2. இடைச்சொற்களின் வகைகள் சிலவற்றைக் கூறுக.**

✶ வேற்றுமை உருபுகள், பன்மை விகுதிகள், திணை – பால் காட்டும் விகுதிகள், காலம் காட்டும் இடைநிலைகள், சாரியைகள், சுட்டு எழுத்துகள், வினா எழுத்துகள் முதலானவை, இடைச்சொற்களின் வகைகள் சிலவாகும்.

**3. தற்காலத்தில் மிகுதியாகப் பயன்படும் இடைச்சொற்கள் சிலவற்றைக் கூறுக.**

✶ உம், தான், மட்டும், ஆவது, கூட, ஆகிய, ஆம் முதலானவை, தற்காலத்தில் மிகுதியாகப் பயன்படும் இடைச்சொற்கள் சிலவாகும்.

**4. இடைச்சொற்களின் வகைகள் சிலவற்றை எடுத்துக்காட்டுகள் தந்து விளக்குக.**

✶ வேற்றுமை உருபுகள், காலம் காட்டும் இடைநிலைகள், திணை பால் உணர்த்தும் விகுதிகள், சாரியைகள், சுட்டு, வினா எழுத்துகள், உவம உருபுகள், அசைச்சொற்கள் ஆகியன, இடைச் சொற்களாகும்.

**வேற்றுமை உருபு :** இராமன் மரத்தை வெட்டினான்.
மரத்தை – மரம் + அத்து + ஐ
அத்து – சாரியை, ஐ – இரண்டாம் வேற்றுமை உருபு.

**இடைநிலைகள் :** பாரி, முல்லைக்குத் தேர் கொடுத்தான்.
முல்லை + கு
கு – நான்காம் வேற்றுமை உருபு
கொடுத்தான் – கொடு + த் + த் + ஆன்

✶ த் – சந்தி, ‘த்’ என்னும் இறந்தகால இடைநிலை, ‘கொடு’ என்னும் வினைச்சொல்லோடு சேர்ந்து, கொடுத்தான் என ஆயிற்று. ‘த்’ என்னும் சந்தியும், ‘த்’ என்னும் இறந்தகால இடை நிலையும், ‘ஆன்’ என்னும் விகுதியும் ‘கொடு’ என்னும் பகுதியுடன் சேர்ந்து பொருள் தந்தன.

✶ **சாரியைகள் :** கண்டனன் – காண் + ட் + அன் + அன். ‘ட்’ என்னும் இறந்தகால இடைநிலை, ‘அன்’ என்னும் சாரியை, ‘அன்’ என்னும் விகுதி ஆகியவை ‘காண்’ என்னும் பகுதியைச் சார்ந்து பொருள் உணர்த்தின.

✶ **எண்ணும்மை :** கரிகால் வளவனும் செங்குட்டுவனும் படையெடுத்தனர்.‘உம்’ என்னும் சொல், கரிகால்வளவன் செங்குட்டுவன் என்னும் பெயர்ச்சொற்களோடு சேர்ந்து எண்ணும்மை ஆயிற்று.

| இடைச்சொற்களின் வகைகள் | |
|---|---|
| வேற்றுமை உருபுகள் | ஐ, ஆல், கு, இன், அது, கண். |
| பன்மை விகுதிகள் | கள், மார். |
| திணை, பால் விகுதிகள் | ஏன், ஓம், அம், ஈர் (கள்), ஆன், ஆள், ஆர், கள், அ, து |
| கால இடைநிலைகள் | த், ட், ற், இன் / கிறு, கின்று, ஆநின்று / ப், வ் |
| பெயரெச்ச, வினையெச்ச விகுதிகள் | அ, உ, இ, மல்.... |
| எதிர்மறை இடைநிலைகள் | ஆ, அல், இல்... |
| தொழிற்பெயர் விகுதிகள் | தல், அம், மை. |



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

| | |
|---|---|
| வியங்கோள் விகுதிகள் | க, இய. |
| சாரியைகள் | அத்து, அற்று, அம்... |
| உவம உருபுகள் | போல, விட, காட்டிலும், மாதிரி. |
| இணைப்பிடைச் சொற்கள் | உம், அல்லது, இல்லையென்றால், ஆனால், ஒ, ஆகவே, ஆயினும், எனினும். |
| தத்தம் பொருள் உணர்த்தும் இடைச்சொற்கள் | உம், ஒ, ஏ, தான், மட்டும், ஆவது, கூட, ஆ, ஆம். |
| சொல்லுருபுகள் | மூலம், கொண்டு, இருந்து, பற்றி, வரை. |
| வினா உருபுகள் | ஆ, ஒ. |

## உரிச்சொற்கள்

1. **உரிச்சொல் என்றால் என்ன?**

★ பலவகைப்பட்ட பண்புகளைக் கொண்டதாய்த் தனித்து இயங்காமல், தான் சார்ந்துள்ள பெயர், வினைச் சொற்களின் பொருள்தன்மையை மிகுதிப்படுத்திக் காட்டும் சொல்லே உரிச்சொல் எனப்படும்.

2. **உரிச்சொற்கள் எப்பொருள்களுக்கு உரியனவாக வரும்?**

★ உரிச்சொற்கள், இசை, குறிப்பு, பண்பு என்னும் பொருள்களுக்கு, உரியனவாக வரும்.

3. **உரிச்சொல் குறித்த நன்னூலார் கருத்து யாது?**

★ உரிச்சொற்கள், தனித்த பொருள்கள் உடையன. எனினும், அவை தனித்து வழங்கப்படுவன அல்ல; செய்யுளுக்கே உரியன என்பது, நன்னூலார் கருத்தாகும்.

4. **உரிச்சொல் எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

★ உரிச்சொல் இரண்டு வகைப்படும். அவை : ஒருபொருள் குறித்த பல உரிச்சொற்கள்; பலபொருள்கள் குறித்த ஓர் உரிச்சொல்.

5. **ஒருபொருள் குறித்த பல உரிச்சொற்களுக்கு எடுத்துக்காட்டுத் தருக.**

★ மிகுதி என்னும் பொருளைத் தருகின்ற சால, உறு, தவ, நனி, கூர், கழி என்னும் ஆறு சொற்கள்.

1. சாலச் சிறந்தது.
2. உறுபொருள் கொடுத்தும்
3. தவப்பெரியன்
4. கல்லாதவரும் நனிநல்லர்
5. பரியது கூர்ங்கோட்டது
6. கழிபெரும் காதலான்

6. **பலபொருள் குறித்த ஓர் உரிச்சொல்லுக்கு எடுத்துக்காட்டுத் தருக.**

★ ‘கடி’ என்னும் ஓர் உரிச்சொல், காவல், கூர்மை, மணம், விரைவு, மிகுதி, காரம் முதலான பொருள்களைத் தரும்.

கடிநகர் – காவலையுடைய நகர்
கடிவேல் – கூர்மையான வேல்
கடிமாலை – மணமுள்ள மாலை
கடிவிடுதும் – விரைவாக விடுதும்
கடிஉணவு – மிகுதியான உணவு
கடிமிளகு – காரமான மிளகு

| உரிச்சொற்கள் | |
|---|---|
| கடிமலர் – மணம் மிக்க மலர்<br>கடிநகர் – காவல் மிக்க நகர்<br>கடி விடுதும் – விரைவாக விடுவோம்<br>கடி நுனி – கூர்மையான நுனி | ‘கடி’ என்னும் ஓர் உரிச்சொல், பல பொருள்களுக்கு உரியது. |
| உறு பசி; தவச் சிறிது; நனி நன்று<br>உறு, தவ, நனி என்ற மூன்று உரிச்சொற்களும் மிகுதி என்னும் பொருளில் வருகின்றன. | பல உரிச்சொற்கள், ‘மிகுதி’ என்னும் ஒரேபொருள் குறித்தன. |

www.Padasalai.Net www.CBSEtips.in



## கற்பவை கற்றபின்

**1. பத்திகளில் இடம்பெற்றுள்ள இடைச்சொற்களைக் கண்டறிந்து எழுதுக.**

அ) பெண்ணடிமை போகவேண்டும்; பெண், கல்வி பெறவேண்டும். பெண்கள் படித்தால்தான், தம் சொந்தக் கால்களில் நிற்கலாம். பெண், கல்வி கற்றால்தான் வீடும் நாடும் முன்னேறும். சமுதாயத்தின் சரிபாதியான பெண்களுக்கு, எல்லா உரிமைகளும் உண்டு.

**விடை :** உம், ஆல், தான், இன், ஆன, கு, இல், ஆம், கள்.

ஆ) நம் முன்சந்ததியார்களுக்கு இருந்ததைவிட, அதிகமான வசதிகள் நமக்கு உள்ளன. அவர்களின் காலம், அடவியில் ஆற்றோரத்தில் பர்ணசாலைக்குப் பக்கத்தில் ஆலமரத்தடியில் சிறுவர்கள் அமர்ந்திருக்க, குரு காலைக்கடன்களை முடித்துக்கொண்டு வந்து, பாடங்களைச் சொல்லித்தரும் முறை இருந்த காலம்; ஏடும் எழுத்தாணியும் இருந்த காலம்; இப்போதுள்ளது உலகை நமது வீட்டுக்கு அழைத்துவந்து காட்டக்கூடிய காலம்; பாமர மக்கள் பாராளும் காலம்; மனவளத்தை அதிகப்படுத்தும் வழிகள் முன்பு இருந்ததைவிட அதிகம் உள்ள காலம்.

**விடை :** கள், கு, ஆன், இன், இல், ஐ, உம், விட, கொண்டு.

**2. உம், ஒ, ஏ, தான், மட்டும், ஆவது, கூட, ஆ, ஆம் ஆகிய இடைச் சொற்களைப் பயன்படுத்திச் சொற்றொடர்களை உருவாக்குக.**

**உம்** – வயிற்றுக்**கும்** ஈயப்படும்.

**ஒ** – மன்னவனும் நீ**யோ?** வளநாடும் உன்ன**தோ?**

**ஏ** – ஒன்**றே** குலம் ஒருவ**னே** தேவன்.

**மட்டும்** – தான்**மட்டும்** முன்னேறினால் போதும்

**ஆவது** – தலைக்கு ஒன்**றாவது**கொடுங்கள்.

**கூட** – ஒருவர்**கூட** எனக்கு உதவி செய்யவில்லை.

**ஆம்** – ஊர் கூடிய**தாம்.**

**தான்** – அவள்**தான்** பாடினாள்.

**ஆ** – மன்**னா** உலகத்து...

**3. பொருத்தமான இடைச்சொற்களைப் பயன்படுத்துக.**

அ) மணற்கேணி __ ப்போல விளங்கும் நூல் __ உறுதுணை__இருக்கிறது.

**விடை :** மணற்கேணியைப்போல விளங்கும் நூல்கள், உறுதுணையாக இருக்கின்றன.

ஆ) பெண்கள் __ ப்படிக்க வைக்காத காலத்தில் __ பெண் இனம் __ பெருமை சேர்க்கும்படி __ நம் முத்துலட்சுமி அம்மையார், முதல் பெண் மருத்துவர் __ வந்தார்கள்.

**விடை :** பெண்களைப் படிக்க வைக்காத காலத்திலும் பெண் இனத்திற்குப் பெருமை சேர்க்கும்படியாக நம் முத்துலட்சுமி அம்மையார், முதல் பெண்மருத்துவராக வந்தார்கள்.

இ) மக்கள் __ மனம் __ உலக அறிவுபுக வழிசெய்ய வேண்டும்.

**விடை :** மக்களின் மனத்திலே உலக அறிவு புக வழி செய்ய வேண்டும்.

**4. பொருத்தமாக இணைத்து எழுதுக.**

| | | |
|---|---|---|
| அவன் | தான்<br>உம்<br>ஏ<br>ஆ | மனிதன் |
| இயற்கை | | அழகு |
| உனக்கு | மட்டும்<br>கூட<br>ஆவது | தெரியுமா? |
| | | தெரியும் |

| | | |
|---|---|---|
| வீடு, நாடு | உம்<br>ஒ | நமதே |
| காற்று, வெளிச்சம் | | தேவை |
| அன்பு, அமைதி | | வேண்டும் |
| வான்மதி, பானு | | வாருங்கள் |

www.Padasalai.Net

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

| | | |
|---|---|---|
| அவன்தான் மனிதன் | இயற்கைதான் அழகு | உனக்குமட்டும் தெரியுமா? |
| அவனும் மனிதன் | இயற்கையும் அழகு | உனக்குக்கூடத் தெரியுமா? |
| அவனே மனிதன் | இயற்கையே அழகு | உனக்காவது தெரியுமா? |
| அவனா மனிதன்? | இயற்கையா அழகு? | உனக்கு மட்டும் தெரியும். |

| | |
|---|---|
| உனக்குக்கூடத் தெரியும். | உனக்காவது தெரியுமா? |
| வீடும் நாடும் நமதே. | வீடோ நாடோ நமதே. |
| காற்றும் வெளிச்சமும் தேவை. | காற்றோ வெளிச்சமோ தேவை. |
| அன்பும் அமைதியும் வேண்டும். | அன்போ அமைதியோ வேண்டும். |
| வான்மதியும் பானுவும் வாருங்கள். | வான்மதியோ பானுவோ வாருங்கள். |

5. **பொருத்தமான உரிச்சொற்களை எழுதுக.**

அ) ______ பெரும் பொதுக்கூட்டம் (கடி, மா)

**விடை : மாபெரும் பொதுக்கூட்டம்**

ஆ) ______ விடுதும் (உறு, கடி)

**விடை : கடி விடுதும்**

இ) ______ நுதல் (வாள், தவ)

**விடை : வாள் நுதல்**

ஈ) ______ சிறந்தது (சால, மழ)

**விடை : சாலச் சிறந்தது**

உ) ______ மனை (கடி, தட)

**விடை : கடிமனை**

## சிந்தனை வினா

1. **'தான்' என்னும் இடைச்சொல்லை எப்படியெல்லாம் பயன்படுத்தலாம்?**

இராமன்தான் இலங்கைமீது படையெடுத்தான்.

இராமன்தான் என்பது, இராமனே படையெடுத்தான்.

– தேற்றேகாரப் பொருளில் வந்தது.

– வேறு எவரும் இல்லை என்ற உறுதிப்பொருளையும் தருகிறது.

நான்தான் வென்றேன் – தன்மை ஒருமை

நீதான் பாடினாய் – முன்னிலை ஒருமை

அவன்தான் கேட்டான் – படர்க்கை – ஆண்பால்

அவள்தான் வந்தாள் – படர்க்கை – பெண்பால்

அதுதான் ஓடியது – அஃறிணை – ஒன்றன்பால்

தான் நினைத்ததை முடித்தான் – உயர்திணைப் பெயர்ச்சொல்

தான் அமிழ்தம் என்று உணரற்பாற்று – அஃறிணைப் பெயர்ச்சொல்

இன்றும் பட்டினிதான் – இறந்தது தழுவிய எச்ச உம்மை.

2. **அவர்களுக்குப் பரிசு தருவேன் – இத்தொடரில் 'ஆ' என்னும் இடைச்சொல்லைச் சேர்த்து வினாக்களை அமைக்க.**

அவர்களுக்கா பரிசு தருவேன்?

அவர்களுக்குப் பரிசா தருவேன்?

அவர்களுக்குப் பரிசு தருவேனா?

www.Padasalai.Net

**3. செய்யுளில் உரிச்சொற்கள் எத்தகைய பொருள்களில் இடம் பெறுகின்றன?**

✶ பெயர், வினைச்சொற்களைச் சார்ந்து உரிச்சொற்கள் பொருள் உணர்த்தும். இசை, குறிப்பு, பண்பு என்னும் பொருள்களில் வரும். ஒரு பொருள் குறித்த பல சொற்களாகவும், பலபொருள்கள் குறித்த ஒருசொல்லாகவும் வரும்.

✶ ஒருபொருள் குறித்த பல உரிச்சொற்கள் :

✶ சால, உறு, தவ, நனி, கூர், கழி என்னும் உரிச்சொற்கள் ஆறும், மிகுதி என்னும் ஒரே பொருளை உணர்த்தும்.

1. சால மிகுத்துப் பெயின் – குறள். 475.
2. உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும் – புறம். 181.
3. தவச்சேய் நாட்டாராயினும் – நற்றிணை. 115.
4. கல்லா தவரும் நனி நல்லர் – குறள். 403
5. பரியது கூர்ங்கோட்ட தாயினும் – குறள். 599
6. காணாச் சினத்தன் கழிபெருங் காமத்தான் – குறள். 866

**பலபொருள் குறித்த ஓர் உரிச்சொல் :**

✶ கடிநகர்; கடிமாலை; கடிமார்பன்; கடிவிடுதும்; கடிமுரசு; கடிமிளகு; கடிவினை; கடிஅர மகளிர்.

**4. தற்காலத் தமிழ்ப் பண்பாட்டில் காணப்படுகின்ற உரிச்சொற்களை எழுதுக.**

**தற்காலத் தமிழ்ப் பண்பாட்டில் காணப்படுகின்ற உரிச்சொற்கள் :**

✶ மழ – மழலை, குழ – குழந்தை, உவப்பு – உவகை, பசப்பு – பயப்பு, செழுமை – செழிப்பு, விழுமம் – விழுப்பம் எனச் சொல்லுக்கு முன்னும் பின்னும் வந்து, பொருள்கள் இயைபு உடையனவாகின்றன.

**5. ‘ஆ’ என்னும் இடைச்சொல், எதிர்மறைப் பொருளில் எப்படி வரும் என்பதை விளக்குக.**

**1. செய்யாமல் – செய் + ய் + ஆ + மல்**

ஆ – இடைநிலைச்சொல், எதிர்மறைப் பொருளில் வந்துள்ளது.

**2. செய்யாது – செய் + ய் + ஆ + து**

ஆ – இடைநிலைச் சொல், எதிர்மறைப் பொருளில் வந்துள்ளது.

**6. இடைச்சொற்களைப் பயன்படுத்திக் கீழ்க்காணும் சொற்றொடர்களை மாற்றியமைத்துக் காண்க.**

**அ) வீட்டிற்குச் செல்லத்தான் இவ்வளவு பீடிகையா?**

வீட்டிற்குச் செல்ல இவ்வளவு பீடிகை தேவையா?

**ஆ) இந்தச் சூழ்நிலை, மாறியாக வேண்டும்.**

இந்தச் சூழ்நிலை, மாறினால்தான் நன்மை பயக்கும்.

**இ) வானூர்தியைச் செலுத்துதல், உலகையும் கடலையும் அளத்தல் போன்ற செயல்கள், ஆண், பெண் இருபாலருக்கும் பொதுவானவை.**

வானூர்தியில் செல்லுதலும், உலகையும் கடலையும் அளத்தலும் ஆகிய செயல்கள், ஆண், பெண் இருபாலருக்கும் பொதுவானவை.

**ஈ) சமைப்பது தாழ்வென எண்ணலாமா?**

சமைப்பதை உயர்வாகக் கருத வேண்டும்.

**உ) பூக்காமலே சில மரங்கள் காய்ப்பதுண்டு.**

சில மரங்கள் பூப்பதில்லை; காய்ப்பதுண்டு.

**ஊ) வாளால் வெட்டினான்**

வாளுக்குக் கைப்பிடி போட்டான்.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

# பகுபத உறுப்பிலக்கணம்

## குறுவினா

1. **பதமாவது யாது?**
   - ✶ எழுத்து தனித்தோ, எழுத்துகள் சேர்ந்தோ, பொருள் தரும் வகையில் அமைவது பதம் எனப்படும். பதம், சொல், கிளவி என்பவை, ஒரே பொருளைத் தரும்.

2. **பதம், எத்தனை வகைப்படும்? அவை யாவை?**
   - ✶ பதம் இரண்டு வகைப்படும்.
   - ✶ **அவை :** பகுபதம், பகாப்பதம்.

3. **பகுபதத்தை விளக்குக.**
   - ✶ பொருள் தரும் வகையில் பிரிக்கக் கூடிய சொல், பகுபதம் எனப்படும்.

   **எ – கா :** அறிஞன் – அறி + ஞ் + அன்.
   செய்தான் – செய் + த் + ஆன்

4. **பகாப்பதம் என்பதை விளக்குக.**
   - ✶ பிரிக்க முடியாததும், பிரித்தால் பொருள் தராததுமாக அமையும் சொல், பகாப்பதம் எனப்படும்.

   **எ – கா :** மண், கல், அறி, படி.

5. **பகுபதம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?**
   - ✶ பகுபதம் இரண்டு வகைப்படும். அவை : பெயர்ப்பகுபதம், வினைப்பகுபதம்.

   **எ – கா :** **பெயர்ப்பகுபதம் :** அறிஞன் – அறி + ஞ் + அன்
   **வினைப்பகுபதம் :** செய்தான் – செய் + த் + ஆன்.

6. **பகுபத உறுப்புகள், எத்தனை? அவை யாவை?**
   - ✶ பகுபத உறுப்புகள் ஆறு. அவை : பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகாரம்.

| | |
|---|---|
| பகுதி (முதனிலை) | சொல்லின் முதலில் நிற்கும்; பகாப்பதமாக அமையும்; வினைச்சொல்லில் ஏவலாகவும், பெயர்ச்சொல்லில் அறுவகைப் பெயர்களாகவும் அமையும். |
| விகுதி (இறுதி நிலை) | சொல்லின் இறுதியில் நின்று திணை, பால், எண், இடம் காட்டும். |
| இடைநிலை | பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் நின்று காலம் காட்டும். |
| சந்தி | பகுதியையும் பிற உறுப்புகளையும் இணைக்கும்; பெரும்பாலும் பகுதிக்கும் இடைநிலைக்கும் இடையில் வரும். |
| சாரியை | பகுதி, விகுதி, இடைநிலைகளைச் சார்ந்து வரும்; பெரும்பாலும் இடைநிலைக்கும் விகுதிக்கும் இடையில் வரும். |
| விகாரம் | தனி உறுப்பு அன்று; மேற்கண்ட பகுபத உறுப்புகளில் ஏற்படும் மாற்றம். |

**பகுதி :** ஊரன் – ஊர்; வரைந்தான் – வரை; நடிகன் – நடி;
மடித்தார் – மடி; பார்த்தான் – பார்; மகிழ்ந்தாள் – மகிழ்.

**விகுதிகள் :**

| | | |
|---|---|---|
| படித்தான் | அன் – ஆண்பால் வினைமுற்று விகுதி | அன், ஆன். |
| பாடினாள் | அள் – பெண்பால் வினைமுற்று விகுதி | அள், ஆள். |
| பெற்றனர் | அர் – பலர்பால் வினைமுற்று விகுதி | அர், ஆர். |
| நீந்தியது | து – ஒன்றன்பால் வினைமுற்று விகுதி | து, று. |
| ஓடின | அ – பலவின்பால் வினைமுற்று விகுதி | அ, ஆ. |
| கண்டனென் | என் – தன்மை ஒருமை வினைமுற்று விகுதி | என், ஏன். |
| உண்டனம் | அம் – தன்மைப் பன்மை வினைமுற்று விகுதி | அம், ஆம், எம், ஏம், ஓம். |
| செய்தனை | ஐ – முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி | ஐ, ஆய், இ. |

www.Padasalai.Net

| | | |
|---|---|---|
| கேளிர் | ஈர் – முன்னிலைப் பன்மை வினைமுற்று விகுதி | இர், ஈர். |
| அழகிய | அ – பெயரெச்ச விகுதி | அ, உம். |
| வந்து | உ – வினையெச்ச விகுதி | உ, இ |
| வளர்க | க – வியங்கோள் வினைமுற்று விகுதி | க, இய, இயர். |
| முளைத்தல் | தல் – தொழிற்பெயர் விகுதி | தல், அல், ஐ, கை, சி, பு. |

**இடைநிலைகள் :**

| | | |
|---|---|---|
| படித்தார் | த் – இறந்தகால இடைநிலை | த், ட், ற், இன். |
| உயர்கிறான் | கிறு – நிகழ்கால இடைநிலை | கிறு, கின்று, ஆநின்று. |
| படிப்பான் | ப் – எதிர்கால இடைநிலை | ப், வ், க். |
| பறிக்காதீர் | ஆ – எதிர்மறை இடைநிலை | இல், அல், ஆ. |
| அறிஞன் | ஞ் – பெயர் இடைநிலை | ஞ், ந், வ், ச், த். |

**சந்திகள் :**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **உறுத்தும்** | த் – சந்தி | த், ப், க் | **பொருந்திய** | ய் – உடம்படுமெய் சந்தி | ய், வ் |

**சாரியைகள் :**

| | | |
|---|---|---|
| நடந்தனன் | அன் – சாரியை | அன், ஆன், இன், அல், அற்று, இற்று, அத்து, அம், தம், நம், நும், ஏ, அ, உ, ஐ, கு, ன். |

**எ – கா : வந்தனன் – வா (வ) + த் (ந்) + த் + அன் + அன்**

**வா** – பகுதி, 'வ' ஆனது விகாரம், **த்** – சந்தி, 'ந்' ஆனது விகாரம், **த்** – இறந்தகால இடைநிலை, **அன்** – சாரியை, **அன்** – ஆண்பால் வினைமுற்று விகுதி.

**எழுத்துப்பேறு :**

பகுபத உறுப்புகளுள் அடங்காமல் பகுதி, விகுதிக்கு நடுவில் காலத்தை உணர்த்தாமல் வரும் மெய்யெழுத்து, எழுத்துப்பேறு ஆகும். பெரும்பாலும் 'த்' மட்டுமே வரும். சாரியை இடத்தில் 'த்' வந்தால் அது எழுத்துப்பேறு.

**செய்யாதே – செய் + ய் + ஆ + த் + ஏ**

**செய்** – பகுதி, **ய்** – சந்தி, **ஆ** – எதிர்மறை இடைநிலை, த் – எழுத்துப்பேறு,

**ஏ** – முன்னிலை ஒருமை ஏவல் வினைமுற்று விகுதி.

## மதிப்பீடு பலவுள் தெரிக

1. பொருத்தமான விடையைத் தேர்க.

அ. சிறுபஞ்சமூலம் – 1. காப்பிய இலக்கியம்
ஆ. குடும்ப விளக்கு – 2. சங்க இலக்கியம்
இ. சீவகசிந்தாமணி – 3. அற இலக்கியம்
ஈ. குறுந்தொகை – 4. தற்கால இலக்கியம்

க. அ – 3, ஆ – 4, இ – 1 ஈ – 2    உ. அ – 2, ஆ – 3, இ – 1 ஈ – 4
ங. அ – 3, ஆ – 1, இ – 4 ஈ – 2    ச. அ – 4, ஆ – 2, இ – 1 ஈ – 3

**விடை : க. அ – 3, ஆ – 4, இ – 1, ஈ – 2.**

2. மாறுபட்டுள்ள குழுவினைக் கண்டறிக.

| | | | | |
|---|---|---|---|---|
| அ. கலைக்கூடம்<br>திரையரங்கம்<br>ஆடுகளம்<br>அருங்காட்சியகம் | ஆ. கடி<br>உறு<br>கூர்<br>கழி | இ. வினவினான்<br>செப்பினான்<br>உரைத்தான்<br>பகன்றான் | ஈ. இன்<br>கூட<br>கிறு<br>அம்பு | **விடை :**<br>ஈ. இன், கூட, கிறு, அம்பு. |



www.Padasalai.Net

3. கீழ்க்காண்பவற்றுள் உணர்ச்சித் தொடர் எது?
அ) சிறுபஞ்சமூலத்தில் உள்ள பாடல்கள், பெரும்பாலும் மகடூஉ முன்னிலையில் அமைந்துள்ளன.
ஆ) இந்திய நூலகவியலின் தந்தை என அறியப்படுபவர் யார்?
இ) என்னண்ணே! நீங்கள் சொல்வதை நம்பமுடியவில்லையே!
ஈ) வாழ்க்கையில் அடிப்படைத் தேவைகளுக்கு அடுத்த இடத்தைப் புத்தகசாலைக்குத் தருக.
**விடை : இ) என்னண்ணே! நீங்கள் சொல்வதை நம்ப முடியவில்லையே!**

4. சரியான கூற்றினைத் தெரிவு செய்க.
அ) 'ஆ' என்பது எதிர்மறை இடைநிலை.
ஆ) வீட்டிற்கோர் புத்தகசாலை என்பது அண்ணாவின் மேடைப்பேச்சு.
இ) வில்லுப்பாட்டு ஓர் இலக்கிய வடிவம்.
1. ஆ, இ சரி, அ தவறு 2. அ, இ சரி ஆ தவறு
3. மூன்றும் சரி 4. மூன்றும் தவறு
**விடை : 3. மூன்றும் சரி**

5. பூவாது காய்க்கும்; மலர்க்கை – அடிக்கோடிட்ட சொற்களுக்கு இலக்கணம் யாது?
அ) பெயரெச்சம், உவமைத்தொகை ஆ) எதிர்மறைப் பெயரெச்சம், உருவகம்
இ) வினையெச்சம், உவமை ஈ) எதிர்மறை வினையெச்சம், உவமைத்தொகை
**விடை : ஈ) எதிர்மறை வினையெச்சம், உவமைத்தொகை.**

## கூடுதல் வினாக்கள்

1. தமிழில் மொழிப்பயன்பாட்டை முழுமையாக்குவது ______.
அ) பெயர்ச்சொல் ஆ) வினைச்சொல் இ) இடைச்சொல் ஈ) உரிச்சொல்
**விடை : இ) இடைச்சொல்**

2. பிரிநிலைப் பொருளில் அதிகமாக வரும் இடைச்சொல் ______.
அ) ஏகார இடைச்சொல் ஆ) ஒகார இடைச்சொல்
இ) ஆகார என்னும் இடைச்சொல் ஈ) உம் என்னும் இடைச்சொல்
**விடை : ஆ) ஒகார இடைச்சொல்**

3. தற்காலத்தில் தேற்றப் பொருளில் மட்டுமே வருவது ______.
அ) ஏகார இடைச்சொல் ஆ) ஒகார இடைச்சொல்
இ) தான் என்னும் இடைச்சொல் ஈ) ஆம் என்னும் இடைச்சொல்
**விடை : அ) ஏகார இடைச்சொல்**

4. 'ஆ' என்னும் இடைச்சொல், ______ பொருளில் வரும்.
அ) உயர்வுப் ஆ) ஐயப் இ) வினாப் ஈ) பிரிநிலைப்
**விடை : இ) வினாப்**

5. எத்தனை என்பது, ______க் குறிக்கும்.
அ) அளவையை ஆ) காலத்தை இ) எண்ணிக்கையை ஈ) ஐயத்தை
**விடை : இ) எண்ணிக்கையை**

6. ______ செய்யுளுக்கே உரிய சொற்கள் என்று நன்னூலார் கூறுகிறார்.
அ) பெயர்ச்சொற்கள் ஆ) வினைச்சொற்கள்
இ) இடைச்சொற்கள் ஈ) உரிச்சொற்கள்
**விடை : ஈ) உரிச்சொற்கள்**

7. பகுபத உறுப்புகள், ______ வகைப்படும்.
அ) மூன்று ஆ) நான்கு இ) ஆறு ஈ) ஐந்து
**விடை : இ) ஆறு**

www.Padasalai.Net

# இயல் – 6

## கவிதைப்பேழை

## இராவண காவியம்

### குறுவினா

1. **இடிகுரல், பெருங்கடல் – இலக்கணக்குறிப்புத் தருக.**
   ✶ இடிகுரல் – உவமத்தொகை; பெருங்கடல் – பண்புத்தொகை.
2. **பாலைநிலத்தில் பருந்துகள் பறந்ததன் காரணம் என்ன?**
   ✶ மணம் வீசும் மராமலர்களைச் சூடிய சிறார்கள், எருதின் கொம்புபோன்ற பாலைக்காய்கள் வெடிக்குமாறு கோலினால் அடித்து விளையாடினர். அவ்வோசையைக் கேட்ட பருந்துகள், அச்சத்துடன் பறந்தோடின.

### கூடுதல் வினாக்கள்

3. **குரங்கினம், மிரட்சியுடன் பார்த்த காட்சி யாது?**
   ➤ குறிஞ்சி நிலத்தில் அருவிகள் பறைபோல் ஒலிக்கும்; பைங்கிளி, தமிழிசை பாடும்; மயில், சிறகினை விரித்தாடும். இக்காட்சியினை மரக்கிளையில் அமர்ந்த குரங்கினம், மிரட்சியுடன் பார்க்கும்.
4. **முல்லைநில மக்கள், மேயும் பசுக்களை எவ்வாறு ஒன்று சேர்த்தனர்?**
   ➤ முல்லைநில மக்களான ஆயர், முக்கனியையும் தேனையும் சேகரித்துக்கொண்டு, முக்குழல் இசையால் மேயும் பசுக்கூட்டங்களை ஒன்று சேர்த்தனர்.
5. **முல்லைநிலத்தில் மான்கள் ஏன் அஞ்சி ஓடின?**
   ➤ முல்லைநிலத்தில் கதிர் அடிக்கும்போது எழும் அதிர்வுதரும் ஓசையைக் கேட்டு, மான்கள் அஞ்சி ஓடின.
6. **முக்குழல்கள் என்றால் என்ன?**
   ➤ கொன்றை, ஆம்பல், மூங்கில் ஆகியவற்றால் ஆன குழல்கள், முக்குழல்கள் எனப்படும்.
7. **இராவண காவியம் குறித்து அண்ணா கூறியது என்ன?**
   ➤ "இராவண காவியம், காலத்தின் விளைவு; ஆராய்ச்சியின் அறிகுறி; புரட்சிப்பொறி; உண்மையை உணரவைக்கும் உன்னத நூல்" என்று, அறிஞர் அண்ணா கூறியுள்ளார்.

### சிறுவினா

1. **இராவண காவியத்தில் இடம்பெற்ற இரண்டு உவமைகளை எடுத்துக் காட்டுக.**
   ✶ **'களம் குவித்துக் குன்று எனப் போதுவார்கள்'** –களத்தில் மலைபோலக் குவிப்பார்கள் என்பது உவமை.
   ✶ இவ்வுவமை, முல்லைநிலமக்கள் முதிரை, சாமை, கேழ்வரகு, குதிரைவாலி நெல் ஆகியவற்றை அறுத்துக் கதிரடித்துக் களத்தில் குன்றுபோலக் குவித்து வைப்பர் என்பதற்கு எடுத்தாளப்பட்டுள்ளது.
   ✶ **'மதியம் தன்னைக் கருமுகில் தொடர்ந்து செல்லும் காட்சிபோல்'** என்பது உவமை.
   ✶ இது, தும்பியானது கடல் அலையினைத் தடவி, கடற்கரை மணலிடை உலவி, காற்றில் சிறகினை உலர்த்தி, பெண்களின் முகத்தினை நோக்கித் தொடர்ந்து செல்வது, வானில் முழுநிலவைத் தொடர்ந்து செல்லும் கருமேகத்தின் காட்சிபோல் உள்ளதாம்.
2. **குறிஞ்சிநிலம் மணப்பதற்கான நிகழ்வுகளைக் குறிப்பிடுக.**
   ✶ தீயில் இட்ட சந்தனமரக் குச்சிகள், அகில் கட்டை எரிவதால் எழும் நறுமணமும், உலையில் இட்ட மலை நெல்லரிசி கொதிப்பதால் எழும் சோற்றின் மணமும், காந்தள் மலரின் மணமும் குறிஞ்சி நிலத்தில் பரவிக் கிடந்ததால், எல்லாப் பொருள்களிலும் குறிஞ்சி மணம் கமழ்ந்தது.

### கூடுதல் வினாக்கள்

3. **பாலைநிலத்தில் செந்நாய் தன் குட்டிகளிடம் எவ்வாறு தன் அன்பை வெளிப்படுத்தியது?**
   ➤ கொடிய பாலை நிலத்து வெயிலின் வெப்பத்தைத் தாங்க இயலாத செந்நாய்க் குட்டிகள், வாய் உலர்ந்து குழறின. இளைப்பாற எங்கும் நிழல் இல்லாததைக் கண்ட தாய் நாயானது வருந்தியது.
   ➤ பின்னர்க் கடும் வெயிலில் தான் துன்பத்தை ஏற்றுக்கொண்டு நின்று, தனது நிழலில் குட்டிகளை இளைப்பாறச் செய்து, தன் அன்பை வெளிப்படுத்தியது.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

**4. மருதநிலத்தின் வளத்தினைக் கூறுக.**

- மலையிடையே தோன்றிய ஆறு கரைமோதித் ததும்பும் நீரும், முல்லைநிலக் காட்டாற்று நீரும் மருதநிலத்தில் பாய்ந்தோடின. நெற்பயிரினைக் காக்கும் வகையில் கரும்பு வளர்ந்து நிற்கும்.
- அவ்வாறு பெருகிவந்த நீரினைக் கால்வாய்வழி வயலில் தேக்கி, வளம் பெருக்கியது. காஞ்சி, வஞ்சி மலர்கள், வயல்களில் பூத்துக் குலுங்கும் வளத்தினை, மருத நிலத்தில் காணமுடிந்தது.

**5. மருதநிலத்துச் சிறுவர்களின் செயல்பாடுகளைக் கூறுக.**

- மருதநிலத்தில் தாமரை பூத்திருக்கும் குளத்தில் சிறுவர்கள் நீராடினர்.
- குளத்தில் நீந்தும் யானையின் தந்தங்களை அளந்தும், வடிவழகினைப் பார்த்தும் மகிழ்ந்தனர்.
- வைக்கோற்போர்மேல் ஏறித் தென்னை இளநீர்க் காய்களைப் பறித்தனர்.
- காஞ்சிமர நிழலில் அமர்ந்து, இளநீரை அருந்தினர்.

**6. நெய்தல்நிலத் தும்பியின் செயல் யாது?**

- நெய்தல்நிலத்தில் தும்பியானது, கரையை நோக்கிவரும் மலைபோன்ற அலையைத் தடவியது.
- கடற்கரை மணல்பரப்பில் உலாவியது; காற்றில் தன் சிறகுகளை உலர்த்தியது.
- பின்னர்த் தாமரை மலர்போன்ற பெண்களின் முகத்தை நோக்கிப் பறந்தது.
- இச்செயல், வானில் முழு நிலவைத் தொடரும் கருமேகம்போல் இருந்தது.

**7. நெய்தல்நில மக்கள் செயல் யாது?**

- பசித்துன்பத்தால் வருந்துவோரைக் கண்டு, நல்லொழுக்கம் உடையவர்கள் வருந்துவர். அதுபோலத் தாம் வாழும் இடம் மூழ்குமாறு கடல் அலை புகுந்தாலும், நெய்தல்நில மக்கள், வருந்தாது கடலுள் பாய்ந்து முத்துகளைக் கொண்டுவந்து, மலைபோல் கரையில் குவிப்பார்கள்.

**8. இராவண காவியம் – குறிப்பு வரைக.**

- இராவண காவியம், தமிழகக் காண்டம், இலங்கைக் காண்டம், விந்தக் காண்டம், பழிபுரி காண்டம், போர்க் காண்டம் என்னும் 5 காண்டங்களையும், 57 படலங்களையும், 3100 பாடல்களையும் கொண்டது. இருபதாம் நூற்றாண்டில் தோன்றிய தனித்தமிழ்ப் பெருங்காப்பியம்; இராணவனை முதன்மை நாயகனாகக் கொண்டு பாடப்பட்டது. இராவண காவியம், புலவர் குழந்தை அவர்களால் இயற்றப்பட்டது.

**9. புலவர் குழந்தை பற்றிக் குறிப்பு வரைக.**

- புலவர் குழந்தையவர்கள், ஈரோட்டிற்கு அருகில் உள்ள ஓலவலசு என்னும் சிற்றூரில், முத்துசாமி – சின்னம்மையார் இணையருக்கு மகனாகப் பிறந்தார்.
- திண்ணைப் பள்ளிக்கூடத்தில் பயின்றார். பத்து வயதில் கவிபாடும் திறமை பெற்றார்.
- 1934இல் சென்னைப் பல்கலைக்கழகத்தில் புலவர் பட்டம் பெற்றார்.
- உயர்நிலைப் பள்ளியில் தலைமையாசிரியராகப் பணியாற்றினார்.
- பெரியாரின் வேண்டுகோளுக்கிணங்கத் திருக்குறளுக்கு உரை எழுதினார்.
- யாப்பதிகாரம், தொடையதிகாரம் உள்ளிட்ட முப்பதுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார்.

## நெடுவினா

**1. இராவண காவியத்தில் உங்களை ஈர்த்த இயற்கை எழில் காட்சிகளை விவரிக்க.**

குறிஞ்சிநிலத்தில் அருவிகள் பறைபோல் ஒலி எழுப்பும். பைங்கிளிகள் தமிழிசை பாடும். மயில்கள் தோகை களை விரித்தாடும். இக்காட்சியைக் குரங்கினம், மரக்கிளையில் அமர்ந்து மிரட்சியுடன் பார்க்கும்.

தீயிலிட்ட சந்தனத்தின் மணமும், உலையிலிட்ட மலை நெல்லரிசிச் சோற்றின் மணமும், காந்தள் மலரின் ஆழ்ந்த மணமும் எங்கும் கமழ்ந்து கொண்டிருக்கும்.

முல்லைநிலத்தில் நாகணவாய்ப் பறவைகளும் குயில்களும் வண்டுகளும் பாவிசைப்பதுபோல் பாடும். முக்கனியும் தேனும் சேகரித்த ஆயர்கள், முக்குழல் இசையால் மேயும் பசுக்களை ஒன்று சேர்ப்பர்.

முதிரை, சாமை, கேழ்வரகு, குதிரைவாலி நெல் ஆகியவற்றை அறுத்துக் கதிரடித்துக் குன்றுபோல் குவித்து வைப்பர். கதிரடிக்கும் அதிர்வு கேட்டு, மான்கள் அஞ்சியோடும்.

பாலைநிலத்தில் செந்நாயானது, கடுமையான வெயிலில் தன் துன்பத்தைப் பொருட்படுத்தாது நின்று, தனது நிழலில் குட்டிகளை இளைப்பாறச் செய்யும். பாலைக்காயைச் சிறுவர்கள் கோலினால் அடித்து வெடித்துச் சிதறுமாறு விளையாடுவர். அவ்வோசை கேட்ட பருந்துகள், அச்சத்தோடு பறந்தோடும்.



www.Padasalai.Net

மருதநிலத்தில், மலை நிலத்து நீர்ப்பெருக்கோடு முல்லைநிலக் காட்டாறு சேர்ந்து பாய்ந்தோடும். நெற்பயிர்களுக்குப் பாதுகாப்பாகக் கரும்புகள் வளர்ந்து நிற்கும். வயலில் காஞ்சி, வஞ்சி மலர்கள் பூத்து மணம் பரப்பும்.

தாமரை பூத்த குளத்தில் சிறுவர்கள் நீராடுவர். நீரில் நீந்தும் யானையின் தந்தங்களை அளந்து பார்த்து மகிழ்வர். வைக்கோற் போரில் ஏறித் தென்னை இளநீரைப் பறித்து அருந்துவர்.

பசித்துயரால் துன்புறுவோரைக் கண்டு வருந்துவதுபோலக் கடல் அலை புகுந்துவிட்டாலும், நெய்தல் நில மக்கள், பவளங்களையும் முத்துகளையும் மலைபோல் கடற்கரையில் குவித்து வைப்பர்.

அலையினைத் தடவி, மணலிடை உலவி, காற்றில் சிறகினை உலர்த்திய பின்னர்த் தும்பியானது பெண்களின் முகத்தினை நோக்கிப் பறக்கும். அது, முழுநிலவைக் கருமேகம் தொடர்ந்துசெல்லும் காட்சிபோல் உள்ளது.

## இலக்கணக்குறிப்பு

**இடிகுரல், மரைமுகம்** – உவமைத்தொகை

**இன்னுயிர், பைங்கிளி, பெருங்கடல், முதுவெயில், இன்னிளங்குருளை, கருமுகில்** – பண்புத் தொகைகள்

**பிடிபசி** – வேற்றுமைத்தொகை

பூவை**யும்** குயில்க**ளும்**, முதிரை**யும்** சாமை**யும்** வர**கும்** – எண்ணும்மைகள்

**பொய்மணி, அதிர்குரல், வருமலை** – வினைத்தொகை

**மன்னிய** – பெயரெச்சம்

**வெரீஇ** – சொல்லிசை அளபெடை

**கடிமகழ்** – உரிச்சொற்றொடர்

## பகுபத உறுப்பிலக்கணம்

1. **பருகிய – பருகு + இ(ன்) + ய் + அ**
   **பருகு** – பகுதி, **இன்** – இறந்தகால இடைநிலை, 'ன்' புணர்ந்து கெட்டது விகாரம், **ய்** – உடம்படுமெய், **அ** – பெயரெச்ச விகுதி.
2. **ஆர்ப்ப – ஆர் + ப் + ப் + அ**
   **ஆர்** – பகுதி, **ப்** – சந்தி, **ப்** – எதிர்கால இடைநிலை, **அ** – பெயரெச்ச விகுதி.
3. **பிறந்த – பிற + த் (ந்) + த் + அ**
   **பிற** – பகுதி, **த்** – சந்தி, 'ந்' ஆனது விகாரம், **த்** – இறந்தகால இடைநிலை, **அ** – பெயரெச்ச விகுதி.
4. **களிப்பர் – களி + ப் + ப் + அர்**
   **களி** – பகுதி, **ப்** – சந்தி, **ப்** – எதிர்கால இடைநிலை, **அர்** – படர்க்கைப் பலர்பால் வினைமுற்று விகுதி.

## பலவுள் தெரிக

1. 'பொதுவர்கள் பொலிஉறப் போர் அடித்திடும்' நிலப்பகுதி ______.
   அ) குறிஞ்சி ஆ) நெய்தல் இ) முல்லை ஈ) பாலை
   **விடை : இ) முல்லை**

## கூடுதல் வினாக்கள்

2. பூவையும் குயில்களும் பொலங்கை வண்டரும் பா இசை பாடியது ______.
   அ) பாலை ஆ) குறிஞ்சி இ) முல்லை ஈ) நெய்தல்
   **விடை : இ) முல்லை**
3. கானல் மணலிடை உலவிக் காற்றில் சுரிகுழல் உலர்த்தியது ______.
   அ) மயில் ஆ) குயில் இ) நாகணவாய் ஈ) தும்பி
   **விடை : ஈ) தும்பி**
4. அதிர்குரல் கேட்டு அஞ்சி ஓடியவை ______.
   அ) பருந்துகள் ஆ) மான்கள் இ) செந்நாய்கள் ஈ) தும்பிகள்
   **விடை : ஆ) மான்கள்**

www.Padasalai.Net

5. தாய்மை மீதூறத் தண்ணிழல் தங்க நின்றது ______.
அ) குரங்கு ஆ) மயில் இ) ஆயர் ஈ) செந்நாய்
**விடை : ஈ) செந்நாய்**

6. இருபதாம் நூற்றாண்டில் தோன்றிய தனித்தமிழ்ப் பெருங்காப்பியம் ______.
அ) இராமாயணம் ஆ) இராவண காவியம்
இ) ஏசுகாவியம் ஈ) மணிமேகலை
**விடை : ஆ) இராவண காவியம்**

7. முக்குழல் ______ குழல்களால் ஆனது.
அ) குறிஞ்சி, முல்லை, மருதம் ஆ) வேய், கதலி, எருக்கு
இ) கொன்றை, ஆம்பல், மூங்கில் ஈ) நாணல், தந்தம், கரும்பு
**விடை : இ) கொன்றை, ஆம்பல், மூங்கில்**

8. மரக்கிளையில் அமர்ந்த குரங்கினம், மிரட்சியுடன் பார்த்த காட்சி ______.
அ) குறிஞ்சி நிலத்தில் ஆ) முல்லை நிலத்தில்
இ) மருத நிலத்தில் ஈ) நெய்தல் நிலத்தில்
**விடை : அ) குறிஞ்சி நிலத்தில்**

9. ஆயர்கள், ______ நிலத்தில் வாழ்வர்.
அ) குறிஞ்சி ஆ) முல்லை இ) மருதம் ஈ) நெய்தல்
**விடை : ஆ) முல்லை**

10. பாலைநிலத்து வெயிலின் வெப்பத்தைத் தாங்க இயலாது வருந்தியவை ______.
அ) மான் குட்டிகள் ஆ) யானைக் குட்டிகள்
இ) செந்நாய்க் குட்டிகள் ஈ) பருந்துகள்
**விடை : இ) செந்நாய்க் குட்டிகள்**

11. இராவண காவியத்தை இயற்றியவர் ______.
அ) புலவர் குழந்தை ஆ) அழ. வள்ளியப்பா
இ) பாரதிதாசன் ஈ) கண்ணாதாசன்
**விடை : அ) புலவர் குழந்தை**

12. இராவண காவியம், ______ காண்டங்களைக் கொண்டது.
அ) மூன்று ஆ) நான்கு இ) ஐந்து ஈ) ஆறு
**விடை : இ) ஐந்து**

13. கிளிகள் பாட, மயில்கள் ஆடின ______.
அ) குறிஞ்சியில் ஆ) முல்லையில் இ) மருதத்தில் ஈ) நெய்தலில்
**விடை : அ) குறிஞ்சியில்**

14. சிறுவர்கள், ______ காய்களை வெடிக்கச் செய்த ஓசை கேட்டுப் பருந்துகள் பறந்தோடின.
அ) குறிஞ்சிக் ஆ) முல்லைக் இ) மருதக் ஈ) பாலைக்
**விடை : ஈ) பாலைக்**

15. கதிர் அடிப்பவர் எழுப்பிய ஓசை கேட்டு, ______ அஞ்சி ஓடின.
அ) குறிஞ்சிநில மயில்கள் ஆ) முல்லைநில மான்கள்
இ) மருதநிலக் கன்றுகள் ஈ) பாலைநிலப் பறவைகள்
**விடை : ஆ) முல்லைநில மான்கள்**

16. மருதநிலத்தில் நெற்பயிர்களைச் சுற்றி, ______ விளைந்து காவல் காக்கின்றன.
அ) மூங்கில்கள் ஆ) கரும்புகள்
இ) வெகொன்றை மலர்கள் ஈ) மரா மரங்கள்
**விடை : ஆ) கரும்புகள்**

17. நெய்தல் நிலத்தவர், கடற்கரையிலிருந்து கொண்டுவந்த ______ நிலத்தில் குவிப்பர்.
அ) மீன்களை ஆ) நண்டுகளை
இ) முத்துகளை ஈ) மீன்பிடி வலைகளை
**விடை : இ) முத்துகளை**

www.Padasalai.Net

# கற்கண்டு

# புணர்ச்சி

### கூடுதல் குறுவினாக்கள்

1. **புணர்ச்சி என்பது என்ன?**
   - நிலைமொழியின் ஈற்றெழுத்தும், வருமொழியின் முதலெழுத்தும் ஒன்று சேர்வதற்குப் புணர்ச்சி என்று பெயர்.
2. **புணர்ச்சி, எத்தனை வகைப்படும்? அவை யாவை?**
   - புணர்ச்சியில் நிலைமொழியும் வருமொழியும் அடையும் மாற்றங்களைக் கொண்டு, புணர்ச்சியை இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம். அவை 1. இயல்பு புணர்ச்சி, 2. விகாரப் புணர்ச்சி.
3. **இயல்பு புணர்ச்சி என்பது என்ன?**
   - நிலைமொழியோடு வருமொழி புணரும்போது, எவ்வித மாற்றமும் இல்லாமல் இருந்தால், இயல்பு புணர்ச்சி எனப்படும்.

     **எ – கா :** பனை + மரம் = பனைமரம்.
4. **விகாரப் புணர்ச்சி என்றால் என்ன?**
   - நிலைமொழியும் வருமொழியும் புணரும்போது, ஏதேனும் மாற்றம் நிகழ்ந்தால், அது விகாரப் புணர்ச்சி எனப்படும்.

     **எ – கா :** மா + காய் = மாங்காய்; பல் + பசை = பற்பசை; மரம் + வேர் = மரவேர்.
5. **விகாரப் புணர்ச்சி, எத்தனை வகைப்படும்? சான்று தருக.**
   - விகாரப் புணர்ச்சி தோன்றல், திரிதல், கெடுதல் என, மூன்று வகைப்படும்.

     **எ – கா :** தோன்றல் – நிலா + சோறு = நிலாச்சோறு.
     திரிதல் – மண் + பானை = மட்பானை.
     கெடுதல் – வட்டம் + வடிவம் = வட்டவடிவம்.
6. **உடம்படுமெய் என்றால் என்ன?**
   - நிலைமொழியின் ஈற்றில் உயிர் எழுத்து நின்று, வருமொழி முதலிலும் உயிர் எழுத்து வரும்போது, இரண்டு உயிர்களையும் உடம்படுத்த வரும் மெய்யே, உடம்படுமெய் எனப்படும்.
7. **உடம்படுமெய்களாக வரும் எழுத்துகள் யாவை? சான்று தருக.**
   - ‘ய், வ்’ என்பவை, உடம்படு மெய்களாக வரும் எழுத்துகளாகும். நிலைமொழி ஈற்றில் இ, ஈ, ஐ என்னும் உயிர் எழுத்துகள் நின்று, வருமொழி முதலில் உயிரெழுத்து வந்தால், ‘ய்’ என்னும் மெய்யெழுத்தும், நிலைமொழி ஈற்றில் பிற உயிர் எழுத்துகளாகிய அ, ஆ, உ, ஊ, ஒ, ஓ, ஔ என்னும் உயிர் எழுத்துகள் நின்று, வருமொழி முதலில் உயிரெழுத்து வந்தால், ‘வ்’ என்னும் மெய் எழுத்தும், நிலைமொழி ஈற்றில் ‘ஏ’ என்னும் உயிரெழுத்து நின்று, வருமொழி முதலில் உயிரெழுத்து வந்தால், ய், வ் என்னும் இரண்டு மெய்யெழுத்துகளும் உடம்படு மெய்களாக வரும்.

     **எ – கா :**

| | | |
|---|---|---|
| மணி + அழகு (மணி + ய் + அழகு) | மணியழகு | ‘ய்’ உடம்படு மெய் |
| தீ + ஒளி (தீ + ய் + ஒளி) | தீயொளி | |
| பனை + ஓலை (பனை + ய் + ஓலை) | பனையோலை | |
| நிலா + ஒளி (நிலா + வ் + ஒளி) | நிலாவொளி | ‘வ்’ உடம்படு மெய் |
| பூ + ஆரம் (பூ + வ் + ஆரம்) | பூவாரம் | |
| திரு + ஓடு (திரு + வ் + ஓடு) | திருவோடு | |

| |
|---|
| சே + அடி = சே + ய் + அடி = சேயடி. ‘ய்’ உடம்படுமெய் |
| தே + ஆரம் = தே + வ் + ஆரம் = தேவாரம். ‘வ்’ உடம்படுமெய் |


Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in


**8. குற்றியலுகரப் புணர்ச்சி என்றால் என்ன?**

➤ நிலைமொழியின் ஈற்றில் நிற்கும் எழுத்து, வல்லினமெய்யின்மீது ஊர்ந்த உகரமாய் (கு, சு, டு, து, பு, று) இருந்து, வருமொழியோடு சேர்வது, குற்றியலுகரப் புணர்ச்சி எனப்படும்.

எ – கா : காற்று + ஆடி (காற்ற் + ஆடி) – காற்றாடி

எழுத்து + எல்லாம் (எழுத்த் + எல்லாம்) – எழுத்தெல்லாம்

**9. மெய்ம்மயக்கம் என்றால் என்ன? சான்று தருக.**

➤ புணர்ச்சியில் நிலைமொழி இறுதியில் மெய் எழுத்து நின்று, வருமொழி முதலில் கசதப வந்தால், அந்த எழுத்து மிகுந்து தோன்றுவது வலி மிகுதல் அல்லது மெய் மிகுதலே, மெய்ம்மயக்கம் எனப்படும். சில இடங்களில் மெல்லினமும் (ஞ, ஞ, ந, ம) மிகுதல் உண்டு.

எ – கா : மெய் + ஞானம் – மெய்ஞ்ஞானம்

செய் + நன்றி – செய்ந்நன்றி

**10. மெய்ம்மயக்கம் என்பது யாது?**

➤ வல்லினம், மெல்லினம், இடையினம் என்னும் மூவகை எழுத்துகளுள் சொற்களில், ஓர் எழுத்தை அடுத்து மற்றோர் இன மெய்யெழுத்து வருவது உண்டு. அதனை மெய்ம்மயக்கம் என்பர்.

**11. வல்லினம் மிகுதலை விளக்குக.**

➤ தமிழ்மொழியில் க் ச் ட் த் ப் ற் என்னும் மெய் எழுத்துகளில் ட், ற் நீங்கலாகப் பிற எழுத்துகள் (க் ச் த் ப்) சொல்லுக்கு முதலில் வரும். அவை நிலைமொழியுடன் சேரும்போது இடையே மிகுந்து வரும்.

எ – கா : அ + குடம் – அக்குடம் இ + சிலை – இச்சிலை

அந்த + பெண் – அந்தப்பெண் எந்த + தோட்டம் – எந்தத்தோட்டம்

## சிறுவினா

**1. கைபிடி, கைப்பிடி – சொற்களின் பொருள் வேறுபாடுகளையும், அவற்றின் புணர்ச்சி வகைகளையும் எழுதுக.**

கைபிடி – கையைப் பிடி என்று கட்டளை இடுவது.

கைப்பிடி – ஒன்றின் கைப்பிடியைக் குறிக்கும்.

கையால், பிடிக்கப்பட்ட கைப்பிடிச் சுவர் என்று பொருள்படும்.

கையில் பிடி – கையில் பெற்றுக்கொள்.

கைபிடி – கையைப் பிடி என, இரண்டாம் வேற்றுமைப் புணர்ச்சியாகும்.

கைப்பிடி – கையால் பிடி என, மூன்றாம் வேற்றுமைப் புணர்ச்சியாகும்.

புணர்ச்சியில் மொழியின் இயல்பு

சொற்களில் எழுத்து அமையும் வகையை நான்காகப் பிரிக்கலாம். அவை :

i) கலை (ல் + ஐ) – உயிரீறு

ii) இலை – உயிர்முதல்

iii) குடம் – மெய்யீறு

iv) மரம் (ம்+அ) – மெய்ம்முதல்

புணர்ச்சியில் நிலைமொழி இறுதிஎழுத்து, வருமொழி முதல்எழுத்தோடு சேரும் வகையை நான்காகப் பிரிக்கலாம். அவை :

i) உயிர்முன் உயிர் – மணி (ண் + இ) + அடி = மணியடி

ii) உயிர்முன் மெய் – பனி (ன்+இ)+(க்+ஆ) காற்று = பனிக்காற்று

iii) மெய்ம்முன் உயிர் – ஆல் + இலை = ஆலிலை

iv) மெய்ம்முன் மெய் – மரம் + (க் + இ) கிளை = மரக்கிளை

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

கு, சு, டு, து, பு, று என்னும் எழுத்துகள் தனிக்குறிலோடு அன்றி, பிற எழுத்துகளை முன் எழுத்துகளாகப் பெற்று வரும்போது குறைந்து ஒலிக்கும். எனவே, குற்றியலுகரம். இஃது ஆறுவகைப்படும்.

நாக்கு, வகுப்பு – வன்தொடர்க் குற்றியலுகரம்

நெஞ்சு, இரும்பு – மென்தொடர்க் குற்றியலுகரம்

மார்பு, அமிழ்து – இடைத்தொடர்க் குற்றியலுகரம்

முதுகு, வரலாறு – உயிர்த்தொடர்க் குற்றியலுகரம்

எஃகு, அஃது – ஆய்தத்தொடர்க் குற்றியலுகரம்

காது, பேசு – நெடில்தொடர்க் குற்றியலுகரம்

## மெய்ம்மயக்கம்

1. 'ய'கர ஈற்றுச் சொற்கள்முன் மெல்லினம் மிகும்.

எ – கா : மெய் + மயக்கம் – மெய்ம்மயக்கம்

மெய் + ஞானம் – மெய்ஞ்ஞானம்

செய் + நன்றி – செய்ந்நன்றி

2. வேற்றுநிலை மெய்ம்மயக்கத்தில் ய, ர, ழ முன்னர் மெல்லினம் மிகும்.

எ – கா : வேய் + குழல் – வேய்ங்குழல்

கூர் + சிறை – கூர்ஞ்சிறை

பாழ் + கிணறு – பாழ்ங்கிணறு

3. 'புளி' என்னும் சுவைப்பெயர் முன்னர் வல்லெழுத்து மட்டுமன்றி மெல்லினமும் மிகும்.

எ – கா : புளி + கறி – புளிக்கறி, புளிங்கறி

புளி + சோறு – புளிச்சோறு, புளிஞ்சோறு

4. உயிரெழுத்தை இறுதியில் கொண்ட மரப்பெயர்களுக்கு முன்னர் மெல்லினம் மிகும்.

எ – கா : மா + பழம் – மாம்பழம் விள + காய் – விளங்காய்

5. 'பூ' என்னும் பெயர் முன்னர் வல்லினத்தோடு மெல்லினமும் மிகும்.

எ – கா : பூ + கொடி – பூக்கொடி, பூங்கொடி

பூ + சோலை – பூச்சோலை, பூஞ்சோலை

பூ + தொட்டி – பூத்தொட்டி, பூந்தொட்டி

www.Padasalai.Net

# இயல் – 7

## உரைநடை உலகம்

# இந்திய தேசிய இராணுவத்தில் தமிழர் பங்கு

### குறுவினாக்கள்

1. **இந்திய தேசிய இராணுவத்தில் குறிப்பிடத் தகுந்த தமிழக வீரர்கள் யாவர்?**
   ✶ தூக்கிலிடப்பட்ட பதினெட்டே வயதான இராமு, மரண தண்டனை பெற்ற அப்துல்காதர், கேப்டன் இலட்சுமி, கேப்டன் தாசன், இராஜாமணி, ஜானகி, சிதம்பரம் லோகநாதன் ஆகியோர், இந்திய தேசிய இராணுவத்தில் குறிப்பிடத் தகுந்த தமிழக வீரர்கள் ஆவர்.
2. **தாய்நாட்டுக்காக உழைக்க விரும்பினால் எப்பணியைத் தேர்ந்தெடுப்பீர்கள்? ஏன்?**
   ✶ இந்திய தேசிய இராணுவப் பணியைத் தேர்ந்தெடுப்பேன். தெய்வத்திற்குச் செய்யும் தொண்டினைக் காட்டிலும் தேசத்தொண்டே மேலானதாகும். ஆதலால், இராணுவப் பணியில் சேர்வதைப் பெருமையாகக் கருதுகிறேன்.
3. **“டெல்லி நோக்கிச் செல்லுங்கள்” என்ற முழக்கம் யாரால் எப்போது செய்யப்பட்டது?**
   ✶ “டெல்லி நோக்கிச் செல்லுங்கள்” (டெல்லி சலோ) என்று சிங்கப்பூரில் 1943ஆம் ஆண்டு சூலை மாதம் 9ஆம் நாள் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ், இந்திய தேசிய இராணுவத்தின் பொறுப்பை ஏற்று, மாபெரும் கூட்டத்தில் உரையாற்றியபோது, போர்முழக்கம் செய்தார்.

### கூடுதல் வினாக்கள்

4. **இந்திய தேசிய இராணுவப் படையை உருவாக்கியவர்கள் யார்?**
   ➤ மோகன்சிங் என்பவரின் தலைமையில் இந்திய தேசிய இராணுவம் என்ற படையை, ஜப்பானியர்கள் உருவாக்கினர்.
5. **ஜப்பானியர் ஒற்றர்படை வீரர்களை இந்தியாவிற்கு எவ்வாறு அனுப்பினர்?**
   ➤ ஆங்கில இராணுவத்தைப் பற்றி ஒற்றறிய ஒற்றர்படை வீரர்களை நீர்மூழ்கிக்கப்பல் மூலம் கேரளாவிற்கும் குஜராத்திற்கும் அனுப்பினர். தரைவழியில் பர்மா காடுகள் வழியாகவும் இந்தியாவிற்கும் அனுப்பினர்.
6. **இந்திய தேசிய இராணுவத்திற்குத் தமிழக வீரர்களைச் சேர்த்த பெருமைக்குரியவர் யார்?**
   ➤ இந்திய தேசிய இராணுவத்திற்குத் தமிழக வீரர்களைச் சேர்த்த பெருமைக்கு உரியவர் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் ஆவார்.
7. **நேதாஜி தமிழ் வீரர்களைப் பாராட்டிக் கூறியது யாது?**
   ➤ நேதாஜி, தமிழ் வீரர்களைப் பாராட்டி, “நான் மறுபடியும் பிறந்தால் ஒரு தென்னிந்தியத் தமிழனாகப் பிறக்கவேண்டும்” என்று கூறியிருக்கிறார்.
8. **இராணுவப் படைத்தலைவர் தில்லான் தமிழர்களைப் பற்றிக் கூறியது யாது?**
   ➤ இந்திய தேசிய இராணுவப் படைத் தலைவராக இருந்த தில்லான், “இந்திய தேசிய இராணுவத்தின் இதயமும் ஆன்மாவும் தமிழர்கள் தாம்” என்றார்.
9. **இந்திய தேசிய இராணுவ வீரர்கள் ஜப்பானை எவ்வாறு அடைந்தனர்?**
   ➤ இந்திய தேசிய இராணுவ வீரர்கள், பர்மாவின் காட்டு வழியாகப் பயணம் செய்து, சயாம் மரண ரயில் பாதையைக் கடந்து, படகு வழியாகத் தப்பிச் சென்று, ஜப்பான் தீவை அடைந்தனர்.
10. **இந்திய தேசிய இராணுவத்தில் மகளிர் படையின் சிறப்பு யாது?**
    ➤ இந்திய தேசிய இராணுவத்தில் ஜான்சிராணி பெயரில் மகளிர்படை உருவாக்கப்பட்டது. தமிழ்ப் பெண்கள், பெருமளவில் பங்கேற்றனர். ஜானகி, இராஜாமணி முதலானோர், தலைசிறந்து விளங்கினர்.
11. **நேதாஜி அமைத்த தற்காலிக அரசில் அமைச்சர்களாய் இருந்த தமிழர்கள் யாவர்?**
    ➤ நேதாஜி அமைத்த தற்காலிக அரசில் கேப்டன் லட்சுமி, சிதம்பரம் லோகநாதன் முதலான தமிழர்கள், அமைச்சர்களாக இருந்தனர்.


Kindly send me your study materials to padasalai.net@gmail.com

**12. இந்திய தேசிய இராணுவம் மூவண்ணக் கொடியை எப்போது எங்கு ஏற்றியது?**

➤ இந்திய தேசிய இராணுவம் 1944ஆம் ஆண்டு மார்ச்சு 18 அன்று ஆங்கிலேயரை வென்று, இந்தியாவிற்குள் மணிப்பூர்ப் பகுதியில் 'மொய்ராங்' என்ற இடத்தில் மூவண்ணக் கொடியை ஏற்றியது.

**13. ஆங்கிலப் பிரதமர் சர்ச்சில் தமிழர்களைப் பற்றிக் கூறியது என்ன?**

➤ ஆங்கிலப் பிரதமர் சர்ச்சில், நேதாஜியைக் கண்டு கோபம் கொண்டபோது, "மலேயாவில் உள்ள தமிழர்களின் இரத்தம் நேதாஜியின் மூளையில் கட்டியாக உள்ளது" என்று கூறினார்.

## சிறுவினாக்கள்

**1. குறிப்பு வரைக – டோக்கியோ கேடட்ஸ்.**

✶ இந்திய தேசிய இராணுவத்தில் இருந்து 45 வீரர்கள் நேதாஜி சுபாஷ் சந்திர போஸால் தேர்வு செய்யப்பட்டனர்.

✶ அவர்கள் வான்படைத் தாக்குதலுக்கான சிறப்புப் பயிற்சி பெறுவதற்காக, ஜப்பானில் உள்ள இம்பீரியல் மிலிட்டரி அகாடமிக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். அந்த 45 பேர் கொண்ட பயிற்சிப் பிரிவின் பெயர்தான் 'டோக்கியோ கேடட்ஸ்' ஆகும்.

**2. பனியிலும், மலையிலும் எல்லையைக் காக்கும் இந்திய வீரர்களின் பணியைப் பாராட்டி உங்கள் பள்ளிக் கையெழுத்து இதழுக்கு ஒரு துணுக்குச் செய்தி எழுதுக.**

✶ இந்திய வீரர்கள் கொடும்பனியிலும், கொட்டும் மழையிலும் தம் நலம் காணாமல் மலைகளிலும் காடுகளிலும் எல்லையைக் காக்கக் கையில் துப்பாக்கி ஏந்தியபடியே காவல்காக்கும் காவல் தெய்வங்கள் ஆவார்கள். மக்களுக்காக உயிரைக் கொடுக்கத் துணியும் மாவீரர்கள்.

✶ மகனை, மனைவியை, பெற்றோரைப் பிரிந்து, நாட்டிற்காக நாளும் உழைக்கும் உத்தம வீரர்கள். நாட்டின் எல்லையைக் காக்கும் வீரர்கள் நாடு திரும்ப, அன்பும் அமைதியும் சமாதானமும் எங்கும் நிலவட்டும்.

## நெடுவினா

**1. இந்திய தேசிய இராணுவத்தின் தூண்களாகத் திகழ்ந்தவர்கள் தமிழர்கள் என்பதைக் கட்டுரைவழி நிறுவுக.**

**இந்திய தேசிய இராணுவம் :**

1942ஆம் ஆண்டு இரண்டாம் உலகப்போர் நடைபெற்றது. ஆங்கிலப் படை வீரர்கள் மலேயாவில் ஜப்பானியரிடம் சரணடைந்தனர். அப்படையில் இந்திய வீரர்களும் இருந்தனர். சரணடைந்த இந்திய வீரர்களைக் கொண்டு ஜப்பானியர்கள், இந்திய தேசிய இராணுவம் என்ற படையை உருவாக்கினர்.

**இராணுவத்தில் தமிழர்கள் :**

தமிழகத்திலிருந்து பிழைப்பிற்காக மலேயா, பர்மா, சிங்கப்பூர் சென்ற தமிழர் பலர், இராணுவத்தில் சேர்ந்தனர். ஜப்பானியர்கள் அமைத்த ஒற்றர் படையில் இருந்த தமிழர்களை, நீர்மூழ்கிக் கப்பலிலும், தரைவழியாகப் பர்மாக் காடுகள் வழியாகவும் இந்தியாவிற்கு அனுப்பினர்.

**தூண்களாகத் திகழ்ந்தவர்கள் :**

ஜெர்மனியிலிருந்த நேதாஜி சுபாஷ் சந்திர போஸ், நீர் மூழ்கிக் கப்பலில் பயணம் செய்து, சிங்கப்பூர் வந்து சேர்ந்தார். 1943ஆம் ஆண்டு சூலை 19ஆம் நாள் இந்திய தேசிய இராணுவத்தின் பொறுப்பை ஏற்றார். மாபெருங் கூட்டத்தில், "டெல்லி நோக்கிச் செல்லுங்கள்" எனப் போர்முழக்கம் செய்தார்.

அப்போது தமிழகத்திலிருந்து பெரும்படையைத் திரட்டி இராணுவத்திற்கு வலுச்சேர்த்த பெருமை, பசும்பொன் முத்துராமலிங்கனாரைச் சேரும். தலைவராக இருந்த தில்லான், "இந்திய தேசிய இராணுவத்தின் இதயமும் ஆத்மாவும் தமிழர்கள்தாம்" என்றார்.

**இராணுவத்தில் பெண்கள் படை :**

இந்திய தேசிய இராணுவத்தில் ஜான்சிராணி பெயரில் பெண்கள் படை உருவாக்கப்பட்டது. டாக்டர் லட்சுமி, ஜானகி, இராஜாமணி போன்றோர், தலைவர்களாக விளங்கினர். நேதாஜி அமைத்த தற்காலிக அரசில் கேப்டன் லட்சுமி, சிதம்பரம் லோகநாதன் முதலான தமிழர்கள், அமைச்சர்களாக இருந்தார்கள். 45 இளைஞர்கள், வான்படைப் பயிற்சிக்கு டோக்கியோ சென்றனர்.

www.Padasalai.Net

**இரண்டாம் உலகப்போர் :**

இந்திய தேசிய இராணுவம், ஆங்கிலேயரோடு போரிடப் பர்மா வழியாக இந்தியா வரத் திட்டமிட்டது. தமிழக மக்களைக் கொண்டு போராடிய நேதாஜியைக் கண்டு, ஆங்கிலப் பிரதமர் சர்ச்சில் கோபம் கொண்டார். "தமிழர்களின் இரத்தம் நேதாஜியின் மூளையில் கட்டியாக உள்ளது" என்று கூறினார். அதற்கு நேதாஜி, "இந்தத் தமிழினம்தான் ஆங்கிலேயர்களை அழிக்கும்" என்று கூறினார்.

## பலவுள் தெரிக

1. இந்திய தேசிய இராணுவத்தை ______ இன் தலைமையில் ______ உருவாக்கினர்.
   அ) சுபாஷ் சந்திரபோஸ், இந்தியர் ஆ) சுபாஷ் சந்திரபோஸ், ஜப்பானியர்
   இ) மோகன்சிங், ஜப்பானியர் ஈ) மோகன்சிங், இந்தியர்
   **விடை : இ) மோகன்சிங், ஜப்பானியர்**
2. **கூற்று** : இந்திய தேசிய இராணுவப்படைத் தலைவராக இருந்த தில்லான், "இந்திய தேசிய இராணுவத்தின் இதயமும் ஆத்மாவும் தமிழர்கள்தான்" என்றார்.
   **காரணம்** : இந்திய தேசிய இராணுவத்திற்கு வலுச்சேர்த்த பெருமைக்கு உரியவர்கள் தமிழர்கள்.
   அ) கூற்று சரி; காரணமும் சரி ஆ) கூற்று சரி; காரணமும் தவறு
   இ) கூற்று தவறு; காரணமும் சரி ஈ) இரண்டும் தவறு
   **விடை : அ) கூற்று சரி; காரணமும் சரி**

## கூடுதல் வினாக்கள்

3. இந்திய தேசிய இராணுவத்தை உருவாக்கியவர்கள் ______.
   அ) தமிழர்கள் ஆ) ஜப்பானியர்கள் இ) ஆங்கிலேயர்கள் ஈ) ஜெர்மனியர்
   **விடை : ஆ) ஜப்பானியர்கள்**
4. ஆங்கிலேயப் படைகள் சரணடைந்தது ______.
   அ) தமிழகத்தில் ஆ) இந்தியாவில் இ) மலோயாவில் ஈ) ஜப்பானில்
   **விடை : இ) மலேயாவில்**
5. தமிழர்கள் பிழைக்கச் சென்ற நாடுகள் ______.
   அ) மலேயா, பர்மா ஆ) குஜராத், கேரளா
   **இ) ஜெர்மனி, சிங்கப்பூர்** ஈ) ஜப்பான், டோக்கியோ
   **விடை :** அ) மலேயா, பர்மா
6. இந்திய தேசிய இராணுவத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்றவர் ______.
   அ) மகாத்மா காந்தியடிகள் ஆ) நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ்
   இ) பண்டித ஜவஹர்லால் நேரு ஈ) பசும்பொன் முத்துராமலிங்கனார்
   **விடை : ஆ) நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ்**
7. இந்திய தேசிய இராணுவத்தில், பெண்கள் படை ______ பெயரில் அமைக்கப்பட்டது.
   அ) வேலு நாச்சியார் ஆ) இராணி லட்சுமிபாய்
   இ) சரோஜினி நாயுடு ஈ) ஜான்சி ராணி
   **விடை : ஈ) ஜான்சி ராணி**
8. சுதந்திர இந்தியாவில் செசல்ஸ் நாட்டுத் தூதுவராகப் பணியாற்றியவர் ______.
   அ) கேப்டன் மார்வெல் ஆ) கேப்டன் தாசன்
   இ) கேப்டன் பிரபாகரன் ஈ) கேப்டன் லட்சுமி
   **விடை : ஆ) கேப்டன் தாசன்**
9. நேதாஜியுடன் போராடிய ஆங்கிலப் பிரதமர் ______.
   அ) வாரன் ஹேஸ்டிங் ஆ) சார்லஸ்
   இ) சர்ச்சில் ஈ) காரன்வாலிஸ்
   **விடை : இ) சர்ச்சில்**

www.Padasalai.Net

# கவிதைப்பேழை

# சீவகசிந்தாமணி

### குறுவினா

1. **கருக்கொண்ட பச்சைப் பாம்பு எதற்கு உவமையாக்கப்பட்டுள்ளது?**
   ✶ கருக்கொண்ட பச்சைப்பாம்பு, வளர்ந்து உள்ளே கருக்கொண்ட பயிர்க்கு உவமையாகக் கூறப் பட்டுள்ளது. பச்சைப் பாம்பு கருவுற்றிருப்பதுபோல, நெற்பயிரின் தாள் தண்டு தடித்து இருக்கிறது.

### கூடுதல் வினாக்கள்

2. **சீவகசிந்தாமணிக் காப்பியத்தால் அறியப்படும் செய்தியை எழுதுக.**
   ➤ ஒப்பில்லாத் தலைவன் ஒருவன் வாழ்க்கையைப் பாடுவன காப்பியங்கள். இவ்வகையில் சீவகனைத் தலைவனாகக் கொண்டு தோன்றிய சீவக சிந்தாமணி, வாழ்வின் இறுதியில் இன்பங்களைத் துறந்து, துறவு பூணுதல் வேண்டும் என்பதை மையக்கருத்தாகக் கொண்டு பாடப்பட்டுள்ளது.
3. **ஏமாங்கத நாட்டில் வெள்ளம் எவ்வாறு பாய்கிறது?**
   ➤ உயர்ந்த மலையிலிருந்து செல்வங்களைத் திரட்டிக்கொண்டு, ஏமாங்கத நாட்டில் ஓடிவரும் வெள்ள மானது, வள்ளல்களைப் போல, மக்களுக்கு ஊர்தோறும் வழங்கும் வகையில் விரைந்து பாய்கிறது.
4. **ஏமாங்கத நாட்டில் நெற்பயிர்கள் வளர்ந்து சாய்ந்தமைக்குக் கூறப்பட்ட உவமைகளை எழுதுக.**
   ➤ ஏமாங்கத நாட்டு நெற்பயிர்கள், கதிர்விட்டு நிமிர்ந்து நிற்பதானது, செல்வத்தை மிகுதியாகப் பெற்றுப் பக்குவப்படாதோர் தலைநிமிர்ந்து நிற்பது போல் இருந்தன.
   ➤ நெற்கதிர்கள் முற்றிச் சாய்ந்திருப்பதானது நூல்களைத் தெளிவாகக் கற்ற நல்லவர்கள் பணிந்திருப்பது போல் இருந்தன என்று கூறப்பட்டுள்ளது.
4. **ஏமாங்கத நாட்டில் வரால் மீன்கள் ஏன் கலைந்து ஓடின?**
   ➤ அழகிய கொம்புகளை உடைய ஆண் எருமைகளும், உடல் வலிமையுடைய எருதுகளும் எழுப்பிய பேரொலி கேட்டுப் புள்ளிகளை உடையவரால் மீன்கள் கலைந்து ஓடின.
5. **ஏமாங்கத நாடு யாருக்கு இனிய இடமாகும்?**
   ➤ ஏமாங்கத நாடு, உண்மையான தவம் புரிவோர்க்கும், இல்லறம் நடத்துவோர்க்கும் இனிய இடமாகும்.
6. **ஏமாங்கத நாடு யாருக்கு உகந்த இடமாகும்?**
   ➤ ஏமாங்கத நாடு, நிலையான பொருளைத் தேடுவோர்க்கும், நிலையில்லாத பொருட்செல்வத்தைத் தேடுவோர்க்கும் உகந்த இடமாகும்.
7. **ஐம்பெருங் காப்பியங்கள் யாவை?**
   ➤ சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, குண்டலகேசி, வளையாபதி ஆகியவை, ஐம்பெருங் காப்பியங்கள் ஆகும்.

### சிறுவினா

1. **ஏமாங்கத நாட்டில் எவையெல்லாம் ஆயிரக்கணக்கில் இருப்பனவாகத் திருத்தக்கதேவர் பாடியுள்ளார்?**
   ✶ ஏமாங்கத நாட்டில் உள்ள ஊர்களில் நாள்தோறும் ஆயிரக்கணக்கான உணவு வகைகள் கிடைக்கின்றன. உணவு அளிக்கும் அறச்சாலைகளும் ஆயிரம் இருக்கின்றன.
   ✶ மகளிர் ஒப்பனை செய்துகொள்ள, மணிமாடங்கள் ஆயிரம் இருக்கின்றன.
   ✶ சிறிதும் சோம்பல் இல்லாமல் தொழில் செய்கிற கம்மியர் ஆயிரம்பேர் உள்ளனர்.
   ✶ திருமணங்களும் ஆயிரக்கணக்கில் நிகழ்ந்துகொண்டு இருக்கின்றன. இவ்வாறு நாட்டில் இல்லாதன இல்லை என்னும் வகையில், ஆயிரக்கணக்கில் எல்லா நிகழ்வுகளும் குறைவின்றி நிகழ்கின்றன.


Kindly send me your study materials to padasalai.net@gmail.com

## கூடுதல் வினாக்கள்

**2. புறப்பொருள் அமைந்த சங்க இலக்கிய நூல்களை அறிந்தெழுதுக.**

1. பதிற்றுப்பத்து 2. பரிபாடல் 3. புறநானூறு 4. மதுரைக்காஞ்சி
5. நெடுநல்வாடை 6. திருமுருகாற்றுப்படை 7. பொருநராற்றுப்படை 8. சிறுபாணாற்றுப்படை
9. பெரும்பாணாற்றுப்படை 10. கூத்தராற்றுப்படை

பின்னுள்ள (6–10) ஆற்றுப்படை நூல்கள் ஐந்தும், புறப்பொருள் அமைந்த சங்க இலக்கிய நூல்களாகும்.

**3. ஏமாங்கத நாட்டின் புகழ் உலகின் பல திசைகளிலும் எவ்வாறு பரவியிருந்தது?**

- ஏமாங்கத நாட்டில், தென்னைமரங்கள் மிக உயரமாக வளர்ந்திருந்தன. அவற்றைவிடச் சற்றுத் தாழ்வாகப் படிப்படியாய்ப் பாக்கு, பலா, மா, வாழை மரங்கள் அமைந்து இருந்தன.
- தென்னைமரத்தில் முதிர்ந்த தேங்காய் விழுந்தது; அது விழுந்த வேகத்தில் பாக்கு மரத்தில் இருந்த தேனடைகளைக் கிழித்தது; அடுத்துப் பலாமரத்தில் பழுத்திருந்த பழத்தினைப் பிளந்தது;
- அதன் கீழ் நின்ற மாமரக் கனிகளைச் சிதறடித்தது; பின்பு கீழ் இருந்த வாழை மரத்தில் பழுத்திருந்த பழங்களை உதிர்த்துவிட்டு நிலத்தில் வீழ்ந்தது. இத்தகு வளம் நிறைந்த மரங்களைக் கொண்ட ஏமாங்கத நாட்டின் புகழ், உலகின் பலதிசைகளிலும் பரவியிருந்தது.

**4. ஏமாங்கத நாட்டில் நெற்பயிர்கள் வளர்ந்து எவ்வாறு காட்சியளித்தன?**

- ஏமாங்கத நாட்டில் நட்ட நெற்பயிர்கள் வளர்ச்சி அடைந்து தண்டு பருத்து இருந்தமை, கருக்கொண்ட பச்சைப் பாம்பு போலத் தோற்றம் அளித்தன. நெற்பயிர்கள் வளர்ந்து நின்றமை, செல்வம் பெற்றும் பக்குவம் இல்லாதவர் போலத் தலை நிமிர்ந்து நின்றன. அப்பயிர்கள், பால்கட்டி மணி பிடித்ததும், தெளிந்த நூலைக் கற்ற நல்லவர்களின் பணிவைப்போல் தலை தாழ்ந்து நின்றன.
- பாம்பின் தோற்றம், செல்வம் பெற்ற பின்னும் பக்குவம் இல்லாதவர் பெற்ற செருக்கு, நூலைக் கற்றவர்களின் பணிவு என்பன, நெற்பயிரின் வளர்ச்சிக்கு உவமைகளாகக் காட்சிப்படுத்தப் பட்டுள்ளன.

**5. சீவகசிந்தாமணி – நூற்குறிப்புத் தருக.**

- சீவகனின் அரிய வரலாற்றைக் கூறுவதனால், 'சீவகசிந்தாமணி' என வழங்கப்பெற்றது.
- சீவகசிந்தாமணி, ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்று.
- விருத்தப்பாக்களால் இயற்றப்பட்ட முதல் காப்பியமாகும்.
- இதில், 'இலம்பகம்' என்ற உட்பிரிவு காணப்படுகிறது.
- இந்நூல், 13 இலம்பகங்களைக் கொண்டுள்ளது.
- இது, 'மணநூல்' எனவும் அழைக்கப்படுகிறது.

**6. சீவகசிந்தாமணி – ஆசிரியர் குறிப்புத் தருக.**

- சீவகசிந்தாமணி நூலின் ஆசிரியர், திருத்தக்க தேவர் ஆவார். இவர், சமண சமயத்தைச் சேர்ந்தவர். இன்பச்சுவை மிக்க இலக்கியமும் இயற்றமுடியும் என்று நிறுவும்வகையில், இக்காப்பியத்தை இயற்றினார். இவரது காலம் ஒன்பதாம் நூற்றாண்டு.
- இந்நூலைப் பாடுவதற்குமுன் இவர், 'நரிவிருத்தம்' என்னும் நூலைப் பாடினார் என்பர்.

## நெடுவினா

**1. ஏமாங்கத நாட்டு வளம் குறித்த வருணனைகளை நும் ஊரின் வளங்களோடு ஒப்பிடுக.**

ஏமாங்கத நாட்டின் இயற்கை வளம் கூறும் பாடல்கள், தேனில் தோய்த்து எடுத்த பலாச்சுளைகளாக இனிக்கின்றன. மகாகவி கம்பரையே மெய்ம்மறக்கச் செய்த காப்பியம் இது.

**வளம் நிறைந்த மரங்கள் :**

தென்னையில் காய்த்து முற்றிய தேங்காயானது விழுந்த வேகத்தில், பாக்கு மரத்தில் இருந்த தேனடை கிழிந்து தேன் சிந்தியது; அடுத்துப் பலாமரத்தின்மீது விழுந்தபோது, பழுத்திருந்த பலாப்பழம் பிளந்தது.

அதன்கீழ் இருந்த மாமரத்தில் விழுந்ததால், அதில் இருந்த மாங்கனிகள் சிதறின; பின்பு வாழை மரத்தின்மேல் வீழ்ந்ததால், வாழைப்பழங்கள் உதிர்ந்தன; இறுதியில் நிலத்தில் வீழ்ந்தது.

இத்தகு வளம் நிறைந்த மரங்களைக் கொண்டது ஏமாங்கத நாடு.

நமது ஊரில் சோலைகள் எல்லாம் பாலைகளாகக் காட்சிதருகின்றன. தென்னைமரங்கள் போதிய நீர்வளம் இல்லாததால், மெலிந்த மட்டைகளும் ஓலைகளும் கொண்டு காட்சியளிக்கின்றன.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

**வள்ளல்போல் வெள்ளம் :**

வாரி வழங்கும் வள்ளல்களின் உள்ளம்போல், உயர்ந்த மலையிலிருந்து விரைந்து நாட்டினுள் பாய்கிறது புதுவெள்ளம். நமது ஊரில் மழைக்காலத்தில் மட்டுமே ஊரில் தெருவில் வெள்ளம்போல் நீர் வருவதைக் காணலாம். வரும் வெள்ளத்தையும் தேக்கி வைக்க நீர்நிலைகளோ, கால்வாய்களோ இல்லை!

உழவர்கள் கூட்டமாய் நிறைந்து வயலை உழுது, சேறும் சகதியும் உள்ள கழனியாக மாற்றுகிறார்கள். அங்கிருந்த எருமைகளும் எருதுகளும் எழுப்பிய ஓசைகேட்டுப் புள்ளிகளை உடைய வரால் மீன்கள், துள்ளி ஓடுகின்றன. நமது ஊரில் நிலத்தடி நீரினை நம்பி வயலை உழுது, நெல்லும் கரும்பும் உடைய வயலாக மாற்றுகிறோம்.

**முற்றிய கதிர்களும் கற்ற சான்றோரும் :**

கோதாவரி ஆற்றிற்குச் சான்றோர்தம் கவிதையை உவமையாகக் காட்டுவார் கம்பர். கம்பருக்கு முன்னோடியான திருத்தக்கத்தேவரோ, வயல்களில் விளைந்து தலைசாய்த்து நிற்கும் நெற்கதிர்களுக்குக் கல்விசேர் மாந்தரை உவமையாக்கிக் காட்டும்திறன், நினைந்து நினைந்து இன்புறத்தக்கது.

நமது ஊரில் ஒரு பருவம் நன்றாக விளைந்ததும், அடுத்த பருவம் பயிர்கள் எல்லாம் காய்ந்து போவதைத்தான் காண்கிறோம்.

ஏமாங்கத நாட்டில் ஆயிரக்கணக்கான உணவுவகைகள், அறச்சாலைகள், ஒப்பனை மண்டபங்கள், திருமணக்கூடங்கள் இருக்கின்றன. அங்கு இல்லாதது எதுவும் இல்லை. ஆயிரக்கணக்கான நிகழ்வுகள், குறைவின்றி நடந்த வண்ணம் இருக்கின்றன.

நமது ஊரில் ஊர்த்திருவிழா, திருமணம், தேர்தல் நேரங்களில்மட்டும் ஏதோ இங்கொன்றும் அங்கொன்றுமாக நிகழ்வுகள் நிகழ்கின்றன.

**விண்ணுலகுபோல் மண்ணுலகு :**

ஏமாங்கத நாடு, உண்மையான தவம்புரிவோருக்கும், இல்லறம் நடத்துவோருக்கும், பொருள் தேடுவோருக்கும், தொழில் புரிவோருக்கும் உகந்த இடமாதலால், விண்ணுலகம்போலக் காட்சியளிக்கிறது. நமது ஊரில் கிராமப்பகுதிகள் ஏழை எளிய மக்களும், நகர்ப்பகுதிகள் மேட்டுக்குடி மக்களும் வாழும் இடங்களாக உள்ளன. எண்ணிலா வளங்கள் நிறைந்தது ஏமாங்கத நாடு! வறுமையும் ஏழ்மையும் குடிபுகுந்தது நமது ஊர்.

## இலக்கணக்குறிப்பு

**தேமாங்கனி, தீந்தேன், செந்நெல், தண்கடல், நற்றவம்** – பண்புத்தொகைகள்
**விளைக** – வியங்கோள் வினைமுற்று
**செய்கோலம்** – வினைத்தொகை
**தேர்ந்த** – பெயரெச்சம்
**இறைஞ்சி, போழ்ந்து, சிதறி** – வினையெச்சங்கள்

## பகுபத உறுப்பிலக்கணம்

1. **இறைஞ்சி – இறைஞ்சு + இ**
   **இறைஞ்சு** – பகுதி, **இ** – வினையெச்ச விகுதி.
2. **ஓம்புவார் – ஓம்பு + வ் + ஆர்**
   **ஓம்பு** – பகுதி, **வ்** – எதிர்கால இடைநிலை, **ஆர்** – பலர்பால் வினைமுற்று விகுதி.
3. **போழ்ந்து – போழ் + த் (ந்) + த் + உ**
   **போழ்**–பகுதி, **த்**–சந்தி, 'ந்' ஆனது விகாரம், **த்**–இறந்தகால இடைநிலை,
   **உ** – வினையெச்ச விகுதி.
4. **செய்வார் – செய் + வ் + ஆர்**
   **செய்** – பகுதி, **வ்** – எதிர்கால இடைநிலை, **ஆர்** – பலர்பால் வினைமுற்று விகுதி.

## பலவுள் தெரிக

1. இளங்கமுகு, செய்கோலம் – இலக்கணக்குறிப்புத் தருக.
   அ) உருவகத்தொடர், வினைத்தொகை. ஆ) பண்புத்தொகை, வினைத்தொகை.
   இ) வினைத்தொகை, பண்புத்தொகை. ஈ) பண்புத்தொகை, உருவகத்தொடர்.
   **விடை : ஆ) பண்புத்தொகை, வினைத்தொகை.**

2. வெறிகமழ் கழனியுள் உழுநர் வெள்ளமே – இவ்வடி உணர்த்தும் பொருள் யாது?
அ) மணம் கமழும் வயலில் உழவர் வெள்ளமாய் நிறைந்திருந்தனர்.
ஆ) வறண்ட வயலில் உழவர் வெள்ளமாய் அமர்ந்திருந்தனர்.
இ) செறிவான வயலில் உழவர் வெள்ளமாய்க் கூடியிருந்தனர்.
ஈ) பசுமையான வயலில் உழவர் வெள்ளமாய் உழுதிருந்தனர்.
**விடை: அ) மணம் கமழும் வயலில் உழவர் வெள்ளமாய் நிறைந்திருந்தனர்.**

## கூடுதல் வினாக்கள்

3. பாதிரி ஒத்த பூ, செய்கோலம் – இலக்கணக்குறிப்புத் தருக.
அ) உருவகத்தொடர், வினைத்தொகை. ஆ) உவமைத்தொடர், வினைத்தொகை.
இ) வினைத்தொகை, பண்புத்தொகை. ஈ) வினைத்தொகை, உருவகத்தொடர்.
**விடை : ஆ) உவமைத்தொடர், வினைத்தொகை.**

4. ஏமாங்கதம் என்று இசையால் திசை போயது உண்டே – இத்தொடரில், இசை என்ற சொல்லின் பொருள் யாது?
அ) இசைப்பாடல் ஆ) வாய்ப்பாட்டு இ) புகழ் ஈ) பாடுதல்
**விடை : இ) புகழ்**

5. காய்மாண்ட தெங்கின் பழம் வீழ – இத்தொடரில் தெங்கு என்ற சொல்லின் பொருள் யாது?
அ) தேங்காய் ஆ) மாங்காய் இ) பாக்கு ஈ) பலாப்பழம்
**விடை : அ) தேங்காய்**

6. ஏமாங்கத நாட்டின் புகழ், ______ பரவியது.
அ) பல ஊர்களிலும் ஆ) பல திசைகளிலும்
இ) பல நாடுகளிலும் ஈ) பல மன்னர்களிடமும்
**விடை : ஆ) பல திசைகளிலும்**

7. கருக்கொண்ட நெற்பயிர்கள், ______ போல் இருந்தன.
அ) நல்ல பாம்பு ஆ) நாகப் பாம்பு இ) பாம்புகள் ஈ) பச்சைப் பாம்பு
**விடை : ஈ) பச்சைப் பாம்பு**

8. “நற்றவம்”, “செய்கோலம்” முறையே இலக்கணக்குறிப்புக் காண்க.
அ) பண்புத்தொகை, வினைத்தொடர்.
ஆ) வியங்கோள் வினைமுற்று, வினையெச்சம்.
இ) பண்புத்தொகை, வினைத்தொகை.
ஈ) பண்புத்தொகை, வேற்றுமைத்தொகை.
**விடை : இ) பண்புத்தொகை, வினைத்தொகை.**

9. சீவகசிந்தாமணி – நூலாசிரியர் யார்?
அ) நாமக்கல் கவிஞர் ஆ) திருத்தக்க தேவர்
இ) பாவேந்தர் பாரதிதாசன் ஈ) கவிச்சக்கரவர்த்தி கம்பர்
**விடை : ஆ) திருத்தக்க தேவர்**

10. சீவகசிந்தாமணியின் மையக்கருத்து எது? பின்வருவனவற்றுள் சரியானதைத் தேர்ந்தெடு.
அ) துன்பங்களைத் துறத்தல் ஆ) இன்பங்களைத் துறத்தல்
இ) இன்பங்களைத் துறந்து துறவு பூணல்
ஈ) இன்பங்களையும் துன்பங்களையும் அனுபவித்தல்
**விடை : இ) இன்பங்களைத் துறந்து துறவு பூணல்**

11. விருத்தப்பாக்களால் இயற்றப்பட்ட முதல் காப்பியம்
அ) சிலப்பதிகாரம் ஆ) மணிமேகலை
இ) சீவக சிந்தாமணி ஈ) கம்பராமாயணம்
**விடை : இ) சீவகசிந்தாமணி**

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

# இயல் – 8

## உரைநடை உலகம்

# பெரியாரின் சிந்தனைகள்

### குறுவினா

1. **'பகுத்தறிவு' என்றால் என்ன?**
   - ★ 'பகுத்தறிவு' என்பது, எச்செயலையும் அறிவியல் கண்ணோட்டத்துடன் அணுகி, ஏன், எதற்கு, எப்படி என்னும் வினாக்களை எழுப்பி, அறிவின் வழியே சிந்தித்து முடிவு காண்பதாகும்.

### கூடுதல் வினாக்கள்

2. **பகுத்தறிவு இன்றியமையாதது – ஏன்?**
   - ➤ ஒரு சமூகம், செம்மாந்து சீர்மையுடன் திகழப் பாகுபாடுகள் அற்ற, மனவுறுதி படைத்த மக்கள் தேவை. அத்தகைய மக்களை உருவாக்கப் பகுத்தறிவு இன்றியமையாததாகும்.
3. **சமூகம் செம்மாந்து திகழ எப்படிப்பட்ட மக்கள் தேவை?**
   - ➤ சமூகம், செம்மாந்து திகழப் பாகுபாடுகளற்ற மனவுறுதி படைத்த மக்கள் தேவை.
4. **தந்தை பெரியார் மக்களுக்கு அளித்த இருகண்கள் யாவை?**
   - ➤ தந்தை பெரியார், பகுத்தறிவு, சுயமரியாதை என்னும் இரு கண்களை மக்களுக்கு அளித்தார்.
5. **தந்தை பெரியாரின் சிறப்புப் பெயர்கள் யாவை?**
   - ➤ வெண்தாடி வேந்தர், பகுத்தறிவுப் பகலவன், வைக்கம் வீரர், ஈரோட்டுச் சிங்கம் என்பன, தந்தை பெரியாரின் சிறப்புப் பெயர்கள்.
6. **பெரியாரின் சிந்தனைகள் புதிய எழுச்சியை ஏற்படுத்திய துறைகள் யாவை?**
   - ➤ சமூகம், மொழி, கல்வி, பண்பாடு, பொருளாதாரம் ஆகிய துறைகளில், பெரியாரின் சிந்தனைகள் புதிய எழுச்சியை ஏற்படுத்தின.
7. **பெரியார் எவற்றைக் கண்டு கொதித்தெழுந்தார்?**
   - ➤ சமூகத்தில் சாதிமதப் பிரிவுகள், பிறப்பால் உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்னும் வேறுபாடு, சாதியின் பெயரால் ஒருவரை ஒருவர் இழிவு செய்யும் கொடுமை ஆகியவற்றைக் கண்டு, பெரியார் கொதித்தெழுந்தார்.
8. **பெரியார் சாதி என்னும் கட்டமைப்பை ஏன் உடைத்தெறிய வேண்டும் என்றார்?**
   - ➤ சாதி, ஆதிக்க உணர்வை வளர்க்கிறது; மற்றவர்களின் உரிமைகளைப் பறிக்கிறது; மனிதர்களை இழிவுபடுத்துகிறது. ஆதலால், சாதி என்னும் கட்டமைப்பை உடைத்தெறிய வேண்டும் என்றார் பெரியார்.
9. **மனிதவாழ்விற்குச் சாதி தேவையில்லை என்று பெரியார் கூறக் காரணம் என்ன?**
   - ➤ மனிதவாழ்விற்குச் சாதியினால் எவ்விதப் பயனும் இல்லை; வீண் சண்டைகளும், குழப்பங்களும் ஏற்படுகின்றன. அவற்றின் காரணமாகவே, சாதி தேவையில்லை என்று, பெரியார் கூறினார்.
10. **பெரியார் பள்ளிகளில் எத்தகைய கல்வி கற்றுத்தர வேண்டும் என்றார்?**
    - ➤ பள்ளிகளில் சுயசிந்தனை ஆற்றலையும், தன்னம்பிக்கை வளர்க்கும் கல்வியையும் கற்றுத்தர வேண்டும் என்று, பெரியார் கூறினார்.
11. **பெரியார் பள்ளிகளில் எத்தகைய கல்வியைக் கற்றுத்தரக் கூடாது என்றார்?**
    - ➤ பெரியார், அறிவியலுக்குப் புறம்பான செய்திகளையும், மூடப்பழக்கவழக்கங்களையும் வளர்க்கும் கல்வியைப் பள்ளிகளில் கற்றுத்தரக் கூடாது என்றார்.
12. **கல்வி குறித்துப் பெரியார் கடுமையாக எதிர்த்தவை யாவை?**
    - ➤ குறிப்பிட்ட பிரிவினருக்கு மட்டுமே கல்வி உரிமையானது எனவும், சில பிரிவினருக்குக் கல்வி கற்க உரிமை இல்லை எனவும் கூறப்பட்ட கருத்துகளைப் பெரியார், கடுமையாக எதிர்த்தார்.



www.Padasalai.Net

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

**13. பெரியார் திருக்குறளை மதிப்புமிக்க நூலாகக் கருதக் காரணம் என்ன?**

➤ அறிவியல் கருத்துகளும், தத்துவக் கருத்துகளும், அரசியல், சமூகம், பொருளாதாரம் உள்ளிட்ட அனைத்தும் பொதுவான வகையில் திருக்குறளில் இடம் பெற்றிருப்பதால், பெரியார் திருக்குறளை மதிப்புமிக்க நூலாகக் கருதினார்.

**14. பெரியாரின் எக்கருத்தினைத் தமிழக அரசு நடைமுறைப்படுத்தியது?**

➤ பெரியார் உருவாக்கிய உயிர்மெய் எழுத்துச் சீர்திருத்தக் கருத்தினை ஏற்றுக்கொண்டு, தமிழக அரசு 1978ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தியது.

**15. பெரியார் எவற்றையெல்லாம் எதிர்த்தார்?**

➤ பெரியர், இந்தித் திணிப்பு, குலக் கல்வித்திட்டம், தேவதாசிமுறை, கள்ளுண்ணல், குழந்தைத் திருமணம் ஆகியவற்றையெல்லாம் எதிர்த்தார்.

**16. பெரியார் விதைத்த விதைகள் யாவை?**

➤ பெண்களுக்கு வேலைவாய்ப்பில் இடஒதுக்கீடு, பெண்களுக்குச் சொத்துரிமை, குடும்ப நலத்திட்டம், கலப்புத் திருமணம், கைம்பெண்களுக்கு மறுமணம் ஆகியவை, பெரியார் விதைத்த விதைகள் ஆகும்.

## சிறுவினா

**1. சிக்கனம் குறித்த பெரியாரின் கருத்துகளை இன்றைய நடைமுறைகளோடு தொடர்புபடுத்தி எழுதுக.**

✶ பெரியார், சிக்கனத்தை வலியுறுத்தியதோடு, வாழ்ந்தும் காட்டினார்.
✶ சிக்கனத்தைக் கடைப்பிடிப்பது கட்டாயம் என்றார். வீண்செலவு ஏற்படுவதால், தேவையற்ற சடங்குகளையும் விழாக்களையும் தவிர்க்க வேண்டும் என்றார்.
✶ திருமணம் போன்ற விழாக்களை பகட்டுக்காக நடத்தாமல் எளிமையாய் நடத்த வேண்டும்.
✶ பயனுள்ள, உபயோகமுள்ளவற்றைச் செய்தால் மட்டுமே, கடனில்லாமல் வாழ முடியும்.
✶ வீடுகள் கட்டுவதும், வாங்குவதும் அடிப்படை வசதிகள் ஏற்படுத்துவதும் ஒருவகையில் சிக்கனமே.
✶ வங்கிகளில், அஞ்சலகங்களில் சேமிப்புகள், நாளுக்குநாள் பெருகிக்கொண்டே இருக்கின்றன.
✶ கல்விக்காகவும், எதிர்கால வாழ்வுக்காகவும் செலவு செய்வது, சிக்கனத்தின் ஒரு நிலையே ஆகும். இன்றைய உலகில், கண்மூடித்தனமாகச் செலவு செய்வது குறைந்திருக்கிறது எனலாம்.

## கூடுதல் வினாக்கள்

**2. தமிழ்மக்களுக்காகப் பெரியார் எவ்வாறு உழைத்தார்?**

➤ மூடப்பழக்கத்தில் மூழ்கிக் கிடந்த தமிழ் மக்களைப் பகுத்தறிவுப் பாதைக்கு அழைத்துச் சென்றார்.
➤ அடிமையாக உறங்கிக் கிடந்த சமூகம் விழித்தெழுவதற்குச் சுயமரியாதைப் பூபாளம் இசைத்தார்.
➤ தமிழர்கள் மானமும் அறிவும் கொண்டவர்களாக வாழ அரும்பாடுபட்டார்.
➤ தாமே அரும்பாடுபட்டுச் சுயமாகச் சிந்தித்து, அறிவார்ந்த கருத்துகளைப் பெரியார் கூறினார்.

**3. பெரியாரின் சிந்தனை எவ்வாறு புதிய எழுச்சியை ஏற்படுத்தியது?**

➤ முன்னோர்கள் செய்தார்கள் என்பதற்காக, ஒரு செயலை அப்படியே பின்பற்றி இன்றும் கடைப்பிடித்தல் கூடாது. அவர்கள் காலத்திற்கு ஏற்ப அப்படிச் செய்திருப்பார்கள். இப்போது காலம் மாறிவிட்டது.
➤ இக்கால வளர்ச்சிக்கும் நடைமுறைக்கும் ஏற்றவகையில், அறிவோடு சிந்தித்துச் செயல்பட வேண்டும். இத்தகைய கண்ணோட்டத்துடன் பெரியார், ஏன், எப்படி, எதற்கு என்னும் வினாக்களை எழுப்பி, அனைத்துத் துறைகளிலும் பெரியாரின் சிந்தனை புதிய எழுச்சியை ஏற்படுத்தியது.

**4. சமூகத்தில் சாதி என்ற கட்டமைப்பை உடைத்தெறிய வேண்டும் என்பது பற்றிப் பெரியார் கூறியது என்ன?**

➤ தந்தை பெரியார் வாழ்ந்த காலத்தில், சாதிமதப் பிரிவுகள், சமூகத்தில் மேலோங்கி இருந்தன. உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்னும் வேறுபாடுகளும், சாதியின் பெயரால் ஒருவரை ஒருவர் இழிவுபடுத்தும் கொடுமைகளும் இருந்தன.
➤ சாதி உணர்வு ஆதிக்க உணர்வை வளர்க்கிறது; மனிதர்களை இழிவுபடுத்துகிறது. சாதியினால் எவ்விதப் பயனும் இல்லை. வீண்சண்டைகளும் குழப்பங்களும் ஏற்படுகின்றன. ஆதலால், சாதி என்ற கட்டமைப்பை உடைத்தெறிய வேண்டும் என்றார்.

www.Padasalai.Net

**5. பெரியார் கடவுள் மறுப்புக் கொள்கையை ஏன் கடைப்பிடித்தார்?**

- மதங்கள், மனித சமூகத்தின் நலத்திற்காக ஏற்படுத்தப்பட்டன. ஆனால், இன்று மனிதர்களுக்காக மதங்கள் என்ற நிலை மாறி, மதங்களுக்காக மனிதர்கள் என்ற நிலை உருவாகியுள்ளது.
- மனிதர்களை ஒற்றுமைப்படுத்த வேண்டிய மதம், மனிதர்களை வேற்றுமைப்படுத்திப் பிரித்து வைக்கிறது. பரஸ்பர உதவியும் நம்பிக்கையும் அற்றுப்போய் விட்டன. ஆதலால், பெரியார் பகுத்தறிவு வினாக்களை எழுப்பிக் கடவுள் மறுப்புக் கொள்கையைக் கடைப்பிடித்தார்.

**6. கல்வி குறித்த பெரியாரின் கருத்துகளைக் கூறுக.**

- கல்வியானது மக்களிடம் பகுத்தறிவையும், சுயமரியாதை உணர்ச்சியையும், நல்லொழுக்கத்தையும் ஏற்படுத்த வேண்டும். மேலான வாழ்வு வாழவும், தொழில் செய்யவும், அலுவல் பார்க்கவும் பயன்பட வேண்டும்.
- அறிவியலுக்குப் புறம்பான செய்திகளையும் மூடப்பழக்க வழக்கங்களையும் கற்றுத்தரக் கூடாது. சுயசிந்தனை ஆற்றலையும், தன்னம்பிக்கையையும் வளர்க்கும் கல்வியைத் தரவேண்டும்.
- சிலபிரிவினர்க்கு அதனை அளிப்பதும், சிலருக்கு அத்தகைய உரிமை இல்லை எனவும் கூறக் கூடாது. பெண்களுக்குக் கல்விபுகட்ட, முன்னுரிமை அளிக்கவேண்டும். மனப்பாடத்திற்கும், மதிப்பெண்களுக்கும் முதன்மை அளிக்கும் முறையையும் கடுமையாக எதிர்த்தார்.

**7. மொழி, இலக்கியம் குறித்த பெரியாரின் கருத்துகளைக் கூறுக**

- ஒருமொழியின் தேவை என்பது, அதன் பயன்பாட்டு முறையால் அமைகிறது. மொழியோ இலக்கியமோ மனிதனுக்குத் தன்மானம், பகுத்தறிவு, வளர்ச்சி, நற்பண்பு ஆகிய தன்மைகளை உண்டாக்க வேண்டும். இயற்கை அறிவையும், மறுக்க முடியாத அறிவியலையும் கொண்ட இலக்கியங்கள் தேவை.
- திருக்குறளின் அறிவியல் கருத்துகளும், தத்துவக் கருத்துகளும் அனைவருக்கும் பொதுவான வகையில் உள்ளன. அரசியல், சமூகம், பொருளாதாரம் உள்ளிட்ட கருத்துகளை ஊன்றிப் படிப்பவர், சுயமரியாதை உணர்ச்சி பெறுவர்.

**8. மொழியின் முயற்சியால் ஏற்பட்ட எழுத்துச் சீர்திருத்தம் யாது?**

- மொழி என்பது, எளிதில் கற்றுக்கொள்ளக் கூடியதாக அமைய வேண்டும். காலவளர்ச்சிக்கு ஏற்பச் சீரமைக்கத் தயங்கக்கூடாது என்றார் பெரியார். மொழி, உலகின் போட்டி, போராட்டத்திற்கு ஏற்ற கருவியாகும். அந்தக் கருவி, காலத்திற்கு ஏற்ப மாற்றப்பட வேண்டும் என்றார்.
- அம்மாற்றத்திற்கான முயற்சியையும் மேற்கொண்டார். உயிர் எழுத்துகளில் 'ஐ' என்பதை 'அய்' என்றும் 'ஔ' என்பதை 'அவ்' என்றும் சீரமைத்தார். உயிர்மெய்யெழுத்துகளின் முரண்பாட்டு வரிவடிவங்களையும் மாற்றி அமைத்தார். பெரியாரின் எழுத்துச் சீர்திருத்தத்தை, 1978ஆம் ஆண்டு தமிழக அரசு ஏற்றுக்கொண்டு, நடைமுறைப்படுத்தியது.

**9. பெண்கள்நலம் குறித்துப் பெரியார் கூறுவது என்ன?**

- பெரியார், நாட்டு விடுதலையைவிடப் பெண்கள் விடுதலைதான் முதன்மையானது என்றார். கல்வி, வேலை வாய்ப்புகளில் ஆண்களுக்கு நிகராகப் பெண்களுக்கும் உரிமை அளிக்கப்படட் வேண்டும். வேலைவாய்ப்பில் 50 விழுக்காடு இடஒதுக்கீடு தரப்பட வேண்டும்.
- சுய உழைப்பில் பொருளீட்ட வேண்டும். கல்வி கற்றுத் தெளிந்த அறிவுடனும் தன்னம்பிக்கையுடனும் திகழ வேண்டும். இளம்வயதில் திருமணம் செய்யக்கூடாது. மறுமணம் செய்ய வழிவகை செய்ய வேண்டும். குடும்பத்தில் சமஉரிமை அளிக்க வேண்டும். சொத்தில் உரிமை வழங்க வேண்டும்.

**10. பெரியாரின் பண்புகள் யாவை?**

- பெரியார், மூடப்பழக்கவழக்கத்தில் மூழ்கிக் கிடந்த தமிழ்மக்களைப் பகுத்தறிவுப் பாதைக்கு அழைத்துச் சென்றார். அடிமையாய் உறங்கிக் கிடந்த சமூகம், விழிப்பதற்குச் சுயமரியாதைப் பூபாளம் இசைத்தார்.
- தமிழர்கள், மானமும் அறிவும் கொண்டவர்களாக வாழவேண்டும் என்று, அரும்பாடு பட்டவர். தமது சீர்திருத்தக் கருத்துகளுக்கு ஏற்ப வாழ்ந்து காட்டினார். வாழ்நாள் முழுவதும் பகுத்தறிவுக் கருத்துகளைப் பரப்புரை செய்தார். இறுதி மூச்சுவரை சமூகச் சீர்திருத்தப் போராளியாகவே வாழ்ந்து மறைந்தார்.

www.Padasalai.Net

## நெடுவினா

**1. மொழியிலும் இலக்கியத்திலும் பெரியார் மேற்கொண்ட சீரமைப்புகளை விளக்குக.**

**மொழி குறித்த பெரியாரின் சிந்தனை :**

ஒருமொழியின் தேவை, அதன் பயன்பாட்டு முறையைக் கொண்டே அமைகிறது. மிகப் பழமையான நமது தமிழ்மொழியில், அறிவியல் வளர்ச்சிக்கேற்ற நூல்கள் படைக்கப்படல் வேண்டும். மொழியோ, நூலோ, இலக்கியமோ மனிதனுக்கு மானம், பகுத்தறிவு, வளர்ச்சி, நற்பண்பு ஆகிய தன்மைகளை உருவாக்க வேண்டும் என்று சிந்தித்தார்.

**மொழி கற்க எளிதாக அமையவேண்டும் – ஏன்?**

மதம், கடவுள் தொடர்புடைய இலக்கியம், இயற்கை அறிவைத் தரும் இலக்கியம், அறிவியல் பற்றிய இலக்கியம் ஆகியவற்றின் மூலமாகத்தான் மேன்மை அடைய முடியும்; மக்களும் அறிவுடையவராவர் என்று கூறினார். திருக்குறளில் அறிவியல், தத்துவக் கருத்துகள் பொதுவான வகையில் உள்ளன. அரசியல், சமூகம், பொருளாதாரக் கருத்துகளை ஊன்றிப் படிப்பவர், சுயமரியாதை உணர்ச்சி பெறுவர். மொழி, எளிதில் கற்கக் கூடியதாக அமைய வேண்டும்.

**தமிழ்மொழிச் சீர்திருத்தம் :**

கால வளர்ச்சிக் கேற்பவும், உலகின் போட்டி, போராட்டத்திற்கு ஏற்பவும் மாற்றப்படல் வேண்டும் என்றார். மாற்றத்திற்கான முயற்சியையும் மேற்கொண்டார். உயிர் எழுத்துகளில் 'ஐ' என்பதனை 'அய்' எனவும், 'ஔ' என்பதனை 'அவ்' எனவும் சீரமைத்தார். உயிர்மெய்யெழுத்துகளின் முரண்பாட்டு வரிவடிவங்களையும் மாற்றியமைத்தார். கற்பதற்கும் தட்டச்சு செய்வதற்கும் எளிதாகும் எனக் கருதினார். இம்மாற்றத்தை 1978ஆம் ஆண்டு, தமிழக அரசும் ஏற்று நடைமுறைப்படுத்தியது.

## பலவுள் தெரிக

1. சரியான விடையைத் தேர்ந்தெடுக்க.

கூற்று : பெரியார் உயிர் எழுத்துகளில் 'ஐ' என்பதனை 'அய்' எனவும், 'ஔ' என்பதனை 'அவ்' எனவும் சீரமைத்தார்.

காரணம் : சில எழுத்துகளைக் குறைப்பதன் வாயிலாகத் தமிழ் எழுத்துகளின் எண்ணிக்கையைக் குறைக்கலாம் என்று எண்ணினார்.

அ) கூற்று சரி, காரணம் தவறு
ஆ) கூற்று, காரணம் இரண்டும் சரி
இ) கூற்று, காரணம் இரண்டும் தவறு
ஈ) கூற்று தவறு, காரணம் சரி

**விடை : ஆ) கூற்று, காரணம் இரண்டும் சரி**

## கூடுதல் வினாக்கள்

2. 'தெற்காசியாவின் சாக்ரடீசு' என்று சிறப்பிக்கப்பட்டவர் ______.

அ) பேரறிஞர் அண்ணா
ஆ) தந்தை பெரியார்
இ) ஈரோடு தமிழன்பன்
ஈ) ஆலந்தூர் மோகனரங்கன்

**விடை : ஆ) தந்தை பெரியார்**

3. தந்தை பெரியார், மக்களுக்கு அளித்த இருகண்கள் ______.

அ) பகுத்தறிவு, கலப்பு மணம்
ஆ) குழந்தைத் திருமணம், கலப்புமணம்
இ) பகுத்தறிவு, சுயமரியாதை
ஈ) சமூகநீதி, சாதிய எதிர்ப்பு

**விடை : இ) பகுத்தறிவு, சுயமரியாதை**

4. தம் பகுத்தறிவு ஒளியால் தமிழகத்தில் பாகுபாட்டு இருளைப் போக்கியவர் ______.

அ) பேரறிஞர் அண்ணா
ஆ) பெருந்தலைவர் காமராசர்
இ) புரட்சித்தலைவர் எம். ஜி. ஆர்
ஈ) தந்தை பெரியார்

**விடை : ஈ) தந்தை பெரியார்**

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

## கவிதைப்பேழை

# யசோதர காவியம்

### குறுவினா

1. **யசோதர காவியத்தின் பாட்டுடைத் தலைவன் யார்?**
   - ✶ யசோதர காவியத்தின் பாட்டுடைத் தலைவன், அவந்தி நாட்டு மன்னன் 'யசோதரன்' ஆவான்.

### கூடுதல் வினா

2. **நாம் செய்யும் செயல் எப்படி இருத்தல் வேண்டும்?**
   - ➤ நாம் ஒரு செயலைச் செய்வதென்றால், அச்செயல் பயன்தரத்தக்க நற்செயலாக இருத்தல் வேண்டும். (நாம் செய்யும் செயல், பயன்தரத்தக்கதாக இருத்தல் வேண்டும்.)

### சிறுவினா

1. **நாம் கடைப்பிடிக்க வேண்டிய வாழ்க்கை நெறிகளாக யசோதர காவியம் குறிப்பிடுவன யாவை?**
   - ✶ நாம் செய்யும் செயல் பயன்தரத்தக்கதாக இருத்தல் வேண்டும்.
   - ✶ நம்மிடம் உள்ள தீய பண்புகளை நீக்க வேண்டுமானால், நம்மிடமுள்ள சினத்தை நீக்கவேண்டும்.
   - ✶ ஆராய வேண்டுமானால், மெய்யறிவு நூல்களை ஆராயவேண்டும்.
   - ✶ காக்க வேண்டுமானால், நாம் கொண்ட நன்னெறியினைக் காக்க வேண்டும்.
   - ✶ இவையே நாம் கடைப்பிடிக்க வேண்டிய வாழ்க்கை நெறிகளாக, யசோதர காவியம் குறிப்பிடுவன.

2. **பிறமொழி இலக்கியங்களைத் தழுவி எழுதப்பட்ட தமிழ் இலக்கியங்களைக் குறிப்பிடுக.**
   - ✶ வடமொழி இதிகாசங்களைத் தழுவிப் பாரதம், இராமாயணம் எழுதப்பட்டன.
   - ✶ ஆங்கில இலக்கியங்களைத் தழுவி, இரட்சணிய யாத்திரிகம், ஆசிய ஜோதி எழுதப்பட்டன.

3. **யசோதர காவியம் வெளிப்படுத்தும் வாழ்க்கை நெறிகளைத் திருக்குறளுடன் ஒப்பிட்டு எழுதுக.**
   - ✶ நாம் செய்யும் செயல் பயன்தரத்தக்கதாக இருக்கவேண்டும் என, யசோதர காவியம் கூறுகிறது.

     "மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
     ஆகுல நீர பிற" என்பது குறள்.
   - ✶ மனித வாழ்க்கைக்குத் தூய அறமே ஏற்புடையது எனக் குறள் கூறுவது ஒப்புநோக்கத் தக்கதாகும்.

     "போக்குவது ஏதெனில் வெகுளி போக்குக." என்பது, யசோதர காவியம். அதாவது, சினத்தை முதலில் நீக்கவேண்டும் என்பது கருத்து.

     "தன்னைத்தான் காக்கின் சினங்காக்க காவாக்கால்
     தன்னையே கொல்லுஞ் சினம்" என்பது குறள்.
   - ✶ ஒருவன் தன் நற்பண்புகளைக் காக்க வேண்டுமானால், முதலில் கோபம் வராமல் தன்னைக் காக்க வேண்டும். அவ்வாறு காக்காவிட்டால், அச்சினமே அவனை அழித்துவிடும் என்னும் குறளின் கருத்து ஒப்புநோக்கத் தக்கதாகும்.

4. **யசோதர காவியம் – குறிப்பு வரைக.**
   - ✶ யசோதர காவியம், ஐஞ்சிறு காப்பியங்களுள் ஒன்றாகும்.
   - ✶ இந்நூல், வடமொழியிலிருந்து தமிழில் தழுவி எழுதப்பெற்றதாகும்.
   - ✶ சமண முனிவரால் இயற்றப்பட்டது என்பர்.
   - ✶ இதன் ஆசிரியர் பெயர் அறிய முடியவில்லை.
   - ✶ இந்நூல், அவந்தி நாட்டு மன்னன் 'யசோதரனின்' வாழ்க்கை வரலாற்றைக் கூறுகிறது.
   - ✶ இது, ஐந்து சருக்கங்களையும், 330 பாடல்களையும் கொண்டுள்ளது.


Kindly send me your study materials to padasalai.net@gmail.com
www.Padasalai.Net

www.Padasalai.Net www.CBSEtips.in


## இலக்கணக்குறிப்பு

**ஆக்குக, போக்குக, நோக்குக, காக்க** – வியங்கோள் வினைமுற்றுகள்

## பகுபத உறுப்பிலக்கணம்

1. **காக்க – கா + க் + க**

**கா** – பகுதி, **க்** – சந்தி, **க** – வியங்கோள் வினைமுற்று விகுதி.

## பலவுள் தெரிக

1. 'ஞானம்' என்பதன் பொருள் யாது?

அ) தானம் ஆ) தெளிவு இ) சினம் ஈ) அறிவு

**விடை : ஈ) அறிவு**

## கூடுதல் வினாக்கள்

2. யசோதர காவியம் என்பது ______.

அ) ஐம்பெரும் காப்பியங்களுள் ஒன்று ஆ) ஐஞ்சிறு காப்பியங்களுள் ஒன்று
இ) சிற்றிலக்கியங்களுள் ஒன்று ஈ) மன்னர்களின் சிறப்பைக் கூறும் நூல்

**விடை : ஆ) ஐஞ்சிறு காப்பியங்களுள் ஒன்று**

3. யசோதர காவியம் என்ற நூலை இயற்றியவர் ______.

அ) மீனாட்சி சுந்தரனார் ஆ) குமரகுருபரர்
இ) வீரமாமுனிவர் ஈ) பெயரறியப்படாதவர்

**விடை : ஈ) பெயரறியப்படாதவர்**

4. வெகுளி என்ற சொல்லின் பொருள் ______.

அ) சினம் ஆ) தானம் இ) அறிவு ஈ) ஆசை

**விடை : அ) சினம்**

5. ஆக்குவது ஏதெனில் அறத்தை ஆக்குக - இத்தொடரில் ஆக்குக என்பதற்கு இலக்கணக்குறிப்புத் தருக.

அ) வினைத்தொகை ஆ) வினைத்தொடர்
இ) வினையெச்சத் தொடர் ஈ) வியங்கோள் வினைமுற்று

**விடை : ஈ) வியங்கோள் வினைமுற்று**

6. பட்டியல் – I உடன் பட்டியல் IIஐப் பொருத்துக.

| பட்டியல் – I | | பட்டியல் – II |
|---|---|---|
| அ) அறத்தை | – 1 | போக்குக |
| ஆ) வெகுளி | – 2 | காக்க |
| இ) ஞானம் | – 3 | ஆக்குக |
| ஈ) விரதம் | – 4 | நோக்குக |

அ) 2 3 1 4 ஆ) 3 2 4 1 இ) 4 2 1 3 ஈ) 3 1 4 2

**விடை : ஈ) 3 1 4 2**

7. கீழ்க்கண்ட வாக்கியங்களைக் கருத்தில் கொள்க.

அ. பயன்தரத்தக்க அறச்செயல்களைச் செய்தல் வேண்டும்.
ஆ. தீய பண்பாகிய சினத்தை நீக்கவேண்டும்.

மேற்கண்ட வாக்கியங்களில் ______.

1. அ மட்டும் சரி 2. ஆ மட்டும் சரி 3. இரண்டும் சரி 4. இரண்டுமல்ல

**விடை : 3. இரண்டும் சரி.**

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

# இயல் – 9

## கவிதைப்பேழை

## குறுந்தொகை

### குறுவினா

1. **பிடிபசி களைஇய பெருங்கை வேழம் – இவ்வடியில் உள்ள இலக்கணக் குறிப்புகளைக் கண்டறிக.**

பிடிபசி – ஆறாம் வேற்றுமைத்தொகை.

களைஇய – சொல்லிசை அளபெடை.

பெருங்கை – பண்புத்தொகை.

பெருங்கை வேழம் – இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கதொகை.

2. **குறுந்தொகை – பெயர்க்காரணம் எழுதுக.**

✶ குறுமை + தொகை = குறுந்தொகை. குறைந்த அடிகள் கொண்ட பாடல்களின் தொகுப்பாக இருப்பதால், குறுந்தொகை எனப் பெயர் பெற்றது. நான்கடிச் சிறுமையும், எட்டடிப் பெருமையும் கொண்ட பாடல்களின் தொகுப்பாகும்.

### கூடுதல் வினாக்கள்

3. **குறுந்தொகை – நூற்குறிப்பு வரைக.**

➤ குறுந்தொகை, எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று. நான்கடிச் சிற்றெல்லையும் எட்டடிப் பேரெல்லையும் கொண்ட பாடல்களின் தொகுப்பாகும். இந்நூல், 401 பாடல்களைக் கொண்டது. 205 புலவர்களால் பாடப்பெற்றது.

4. **சங்க காலக் கவிதைகளின் சிறப்பு யாது?**

➤ சங்ககாலக் கவிதைகள், ‘யாதும் ஊரே யாவரும் கேளிர்’ என்னும் மனிதநேயம் பேசும் சிறப்புடையன; தமிழ்ச் சமுதாயத்தின் மாண்புகளைக் காட்டும் காலக் கண்ணாடியாகத் திகழ்வனவுமாகும்.

5. **குறுந்தொகைப் பாடல்களின் சிறப்பு யாது?**

➤ குறுந்தொகைப் பாடல்கள், தமிழர் வாழ்வின் அகப்பொருள் நிகழ்வுகளைக் கவிதையாக்கிக் கூறுகின்றன. இயற்கைக் காட்சிகள்மூலம், நாட்டு வளத்தைப் படம்பிடித்துக் காட்டுகின்றன.

### சிறுவினா

1. **யாமரத்தின் பட்டையை உரித்தது எது? எதற்காக? விளக்குக.**

✶ யாமரப்பட்டையை உரித்தது ஆண்யானை.

✶ பெரிய கைகளை உடைய ஆண்யானை, பெண்யானையின் பசியைப் போக்க, மெல்லிய கிளைகளை உடைய ‘யா’மரத்தின் பட்டைகளை உரித்துக் கொடுத்துத் தன் அன்பை வெளிப்படுத்தியது.

✶ பாலைநிலத்தில் தலைவன் இக்காட்சியைக் காண்பான். அவனுக்கு உன் நினைவு வரும். விரைந்து உன்னை நாடிவருவான் என்று, தலைவியிடம் தோழி கூறினாள்.

### கூடுதல் வினாக்கள்

2. **தலைவனைப் பிரிந்த தலைவியின் துயரைத் துடைக்கத் தோழி ஆறுதல் கூறியது எவ்வாறு?**

➤ “அழாதே! கண்ணீரைத் துடை” என்றாள் தோழி.

➤ “நான் என்செய்வேன்? அவர் என்னை மறந்தே போனாரே”.

➤ “வருந்தாதே! அவர் உன்னை ஒருநாளும் மறக்கமாட்டார்.

➤ அவர் சென்ற வழி உன்னை நினைவுபடுத்தும். அந்த வழியில் யானைகள் ஏராளம்.

➤ பாலைநிலமாதலால், நீர் வேட்கை கொண்ட பெண்யானையின் பசியைப் போக்க, ஆண்யானையானது, ‘யா’மரப்பட்டைகளை உரித்துப் பெண்யானைக்கு ஊட்டும்.

➤ அதைக் கண்ட தலைவனுக்கு உன் நினைவு வரும். விரைவில் வருவார். வருந்தாதே” என்று, தோழி ஆறுதல் கூறினாள்.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net

**3. 'நசை பெரிது உடையர்' என்ற குறுந்தொகைப் பாடலில் இறைச்சி அமைந்துள்ளது. – விளக்குக.**

- அகப்பொருள் பாடல்களில் கருப்பொருளைப் பயன்படுத்தி, உவமை கூறுவது 'உள்ளுறை' எனப்படும். கருப்பொருளின் வழியே, மேலும் ஓர் உட்பொருள் இருப்பதாகக் கூறுவது 'இறைச்சி' எனப்படும்.
- 'நசை பெரிது உடையர்' என்ற பாடலில், பெண்யானையின் பசியைப் போக்க ஆண்யானை,
- யா மரப்பட்டைகளை உரித்துத் தருவதுபோலத் தலைவியின் துயர்நீக்கத் தலைவன் வருவான் என்பது உள்ளுறையாகும்.
- தலைவியைத் தவிக்கவிட்டு தலைவன் பிரிந்து சென்ற பாலைநிலத்தில், 'யா'மரங்கள் பிறருக்குப் பயன்படுமாறு நீர்த்தன்மை உடையதாக இருக்கின்றதே! இஃது என்ன வியப்போ? இவ்வாறு அகப்பொருள் ஒழுகலாற்றை விளக்குவதற்கு, 'யா'மரத்தைப் பயன்படுத்தியது 'இறைச்சி'யாகும்.

## இலக்கணக்குறிப்பு

**களைஇய** – சொல்லிசை அளபெடை

**பெருங்கை, மென்சினை** – பண்புத்தொகைகள்

**பொளிக்கும்** – செய்யும் என்னும் வினைமுற்று

**அன்பின** – பலவின்பால் அஃறிணை வினைமுற்று

**நல்கலும் நல்குவர்** – எச்சஉம்மை

## பகுபத உறுப்பிலக்கணம்

1. **உடையர் – உடை + ய் + அர்**

**உடை** – பகுதி, **ய்** – சந்தி, 'உடம்படுமெய்', **அர்** – பலர்பால் வினைமுற்று விகுதி.

2. **பொளிக்கும் – பொளி + க் + க் + உம்**

**பொளி** – பகுதி, **க்** – சந்தி, **க்** – எதிர்கால இடைநிலை, **உம்** – வினைமுற்று விகுதி.

## பலவுள் தெரிக

1. யாமரம், எந்த நிலத்தில் வளரும்?

அ) குறிஞ்சி ஆ) மருதம் இ) பாலை ஈ) நெய்தல்

**விடை : இ) பாலை**

## கூடுதல் வினாக்கள்

2. எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று ______.

அ) பெருங்கதை ஆ) குறுந்தொகை இ) நெடுநல்வாடை ஈ) நான்மணிக்கடிகை

**விடை : ஆ) குறுந்தொகை**

3. நான்கடிச் சிறுமையும் எட்டடிப் பெருமையும் உடைய ஆசிரியப்பாக்களால் ஆகிய நூல் ______.

அ) நற்றிணை ஆ) அகநானூறு இ) குறுந்தொகை ஈ) புறநானூறு

**விடை : இ) குறுந்தொகை**

4. குறுந்தொகையில் உள்ள மொத்தப் பாடல்கள் ______.

அ) 400 ஆ) 401 இ) 402 ஈ) 404

**விடை : ஆ) 401**

5. 'நசைபெரிது' என்ற குறுந்தொகைப் பாடலைப் பாடியவர் ______.

அ) வாய்மொழிக் கபிலர் ஆ) பாலை பாடிய பெருங்கடுங்கோ

இ) பெருந்தேவனார் ஈ) வரந்தருவார்

**விடை : ஆ) பாலை பாடிய பெருங்கடுங்கோ**

6. ______ ஓர் அகஇலக்கிய நூலாகும்.

அ) புறநானூறு ஆ) பதிற்றுப்பத்து இ) பரிபாடல் ஈ) குறுந்தொகை

**விடை : ஈ) குறுந்தொகை**

7. 'நசைபெரிது உடையர்' என்ற குறுந்தொகைப் பாடல், ______ திணையைச் சார்ந்தது.

அ) முல்லைத் ஆ) குறிஞ்சித் இ) பாலைத் ஈ) மருதத்

**விடை : இ) பாலைத்**

www.Padasalai.Net

# கற்கண்டு

# அணியிலக்கணம்

## குறுவினா

1. **நினைத்தேன் கவித்தேன் படைத்தேன் சுவைத்தேன் – இத்தொடரில் அமைந்துள்ள உருவகத்தைக் கண்டறிக.**

**உருவகங்கள் :** கவித்தேன் – தேன்கவி; சுவைத்தேன் – தேன்சுவை

## கூடுதல் வினாக்கள்

2. **அணி இலக்கணம் என்றால் என்ன?**
   - ➤ அணி என்றால் அழகு. செய்யுளை அழகு படுத்துவது, அணி எனப்படும். சொல்லாலும் பொருளாலும் அழகுபட எடுத்துரைப்பது அணி இலக்கணமாகும்.
3. **உவமையணி என்றால் என்ன?**
   - ➤ ஒரு பொருளை அதன் இயல்பு கொண்ட மற்றொரு பொருளோடு ஒப்பிட்டுக் கூறுவதற்கு, ‘உவமையணி’ என்று பெயர்.

     **எ – கா :** தாமரைமுகம்
4. **உருவகஅணி என்றால் என்ன?**
   - ➤ உவமைக்கும் பொருளுக்கும் வேறுபாடின்றி, உவமையினையே பொருளாகக் கூறுவது, ‘உருவக அணி’ எனப்படும்.

     **எ – கா :** முகத்தாமரை
5. **பின்வருநிலையணி என்றால் என்ன?**
   - ➤ ஒரு செய்யுளில் முன்னர் வந்த சொல்லே, மீண்டும் மீண்டும் வருவது, ‘**பின்வரு நிலையணி**’ எனப்படும்.
6. **பின்வருநிலையணி எத்தனை வகைப்படும்? அவை யாவை?**
   - ➤ பின்வருநிலையணி, மூன்று வகைப்படும்.
   - ➤ **அவை :** சொல்பின்வரு நிலையணி, பொருள் பின்வரு நிலையணி, சொல்பொருள் பின்வரு நிலையணி என்பனவாகும்.
7. **சொல்பின்வரு நிலையணி என்றால் என்ன?**
   - ✶ செய்யுளில் முன்னர் வந்த ஒருசொல், பின்னர்ப் பல இடங்களிலும் வந்து, வெவ்வேறு பொருள்களைத் தருமாயின், அது ‘**சொல்பின்வரு நிலையணி**’ எனப்படும்.
8. **பொருள்பின்வரு நிலையணி என்றால் என்ன?**
   - ✶ ஒரு செய்யுளில் முன்னர்க் கூறப்பட்ட பொருளே பின்னரும் பல இடங்களில் வெவ்வேறு சொற்களால் உணர்த்தப்படுமானால், அது ‘பொருள்பின்வரு நிலையணி’ ஆகும்.
9. **சொற்பொருள் பின்வரு நிலையணி என்றால் என்ன?**
   - ✶ செய்யுளில் முன்னர் வந்த சொல்லே பின்னர்ப் பல இடங்களில் வந்து, முன்னர் உணர்த்திய பொருளையே உணர்த்துமாயின், அது ‘சொற்பொருள் பின்வரு நிலையணி’ ஆகும்.

## சிறுவினா

1. **உருவகஅணியை எடுத்துக்காட்டுடன் எழுதுக.**
   - ✶ கவிஞன், தான் ஒரு பொருளைச் சிறப்பிக்க எண்ணி, அதற்கு உவமையாகும் வேறொரு பொருளோடு ஒன்றுபடுத்திக் கூறுவான். உவமைக்கும் பொருளுக்கும் வேறுபாடின்றி, உவமையினையே பொருளாகக் கூறுவது, உருவக அணியாகும். இதில் பொருள் முன்னும் உவமை பின்னுமாக அமையும்.

     **எ – கா :** இன்சொல் விளைநிலமா ஈதலே வித்தாக<br>
     வன்சொற் களைகட்டு வாய்மை எருவட்டி<br>
     அன்புநீர் பாய்ச்சி அறக்கதிர் ஈன்றதோர்<br>
     பைங்கூழ் சிறுகாலைச் செய்.
   - ✶ இப்பாடலில் இன்சொல் – விளைநிலம், ஈதல் – விதை, வன்சொல் – களை, வாய்மை – எரு, அன்பு – நீர், அறம் – கதிர் என உருவகம் செய்யப்பட்டுள்ளன.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

## கூடுதல் வினாக்கள்

**2. சொல்பின்வருநிலை அணியைச் சான்றுடன் விளக்குக.**

➤ ஒரு செய்யுளில் முன்னர்வந்த ஒருசொல், பின்னரும் பல இடங்களில் வந்து, வெவ்வேறு பொருள்களைத் தருவது, 'சொல்பின்வரு நிலையணி' எனப்படும்.

**எ – கா :** துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉம் மழை.

★ இக்குறளில், 'துப்பு' என்னும் சொல், பலமுறை வந்து, வெவ்வேறு பொருள்களைத் தருகிறது.

துப்பார்க்கு – உண்பவர்க்கு, துப்பாய – தூய்மையான
துப்பாக்கி – நல்ல உணவுகளை உண்டாக்கி துப்பார்க்கு – உண்பவர்க்கு
துப்பாய – மழையாகிய உணவு என்ற ஒருசொல், பல பொருள்களில் வருவதைக் காணலாம்.

**3. பொருள்பின்வரு நிலையணியைச் சான்றுடன் விளக்குக.**

➤ செய்யுளில் முன்னர்வந்த பொருளே பின்னர்ப் பல இடங்களில் வெவ்வேறு சொற்களால் உணர்த்தப் படுமானால், அது 'பொருள்பின்வரு நிலையணி' எனப்படும்.

**எ – கா :** அவிழ்ந்தன தோன்றி; அலர்ந்தன காயா;
நெகிழ்ந்தன நேர்முகை முல்லை; – மகிழ்ந்திதழ்
விண்டன கொன்றை; விரிந்த கருவிளை;
கொண்டன காந்தள் குலை.

★ இச்செய்யுளில் அவிழ்ந்தன, அலர்ந்தன, நெகிழ்ந்தன, விண்டன, விரிந்தன, கொண்டன என்ற சொற்கள் வெவ்வேறாயினும், 'மலர்ந்தன' என்னும் ஒரு பொருளையே தந்தன. ஆதலால், இது **'பொருள் பின்வரு நிலையணி'** ஆயிற்று.

**4. சொற்பொருள் பின்வருநிலையணியைச் சான்றுடன் விளக்குக.**

★ செய்யுளில் முன்னர் வந்த சொல்லே, பின்னரும் பல இடங்களில் வந்து, ஒரே பொருளை உணர்த்துமாயின், அது 'சொற்பொருள் பின்வருநிலையணி' ஆகும்.

**எ – கா :** உதவி வரைத்தன்று உதவி உதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து.

★ இக்குறட்பாவில், 'உதவி' என்னும் சொல், பலமுறை பயின்று, உபகாரம் என்னும் ஒரே பொருளில் வந்துள்ளதால், இது 'சொற்பொருள் பின்வருநிலையணி' எனப்படும்.

**5. வஞ்சப்புகழ்ச்சி அணியைச் சான்றுடன் விளக்குக.**

★ ஒன்றைப் புகழ்வதுபோலப் பழிப்பதும், பழிப்பதுபோலப் புகழ்வதும், 'வஞ்சப்புகழ்ச்சி அணி'யாகும்.

**புகழ்வதுபோலப் பழித்தல் :**

**எ – கா :** "கல்லா தவரும் நனிநல்லர் கற்றார்முன்
சொல்லா திருக்கப் பெறின்"

★ இக்குறட்பாவில் கல்லாதவர், கற்றார்முன் ஒன்றும் சொல்லாது இருந்தால், அவரும் நல்லவரே என்று கூறுகிறார். கெட்டவராகிய கல்லாதவரை 'நல்லவர்' என்று புகழ்ந்து கூறுவதன்மூலம் பழித்து உரைக்கின்றார்.

**பழிப்பதுபோலப் புகழ்தல் :** "பாரி பாரி என்றுபல ஏத்தி
ஒருவர்ப் புகழ்வர் செந்நாப் புலவர்
பாரி ஒருவனும் அல்லன்
மாரியும் உண்டு, ஈண்டுஉலகு புரப்பதுவே"

★ இப்பாடலில் பாரிபாரி என்று ஒருவனையே பலவாறு புலவர் புகழ்கின்றனர். பாரி ஒருவன் மட்டுமா உதவி செய்வதற்கு? மாரியும் கைம்மாறு கருதாமல் கொடுத்து உதவுகிறதே எனப் பாரியை இகழ்வது போலக் கூறினாலும், பாரிக்கு நிகராக விண்ணில் மாரியைக் கூறுவதன்மூலம் மண்ணில் எவரும் கொடுப்பார் இல்லை எனப் புகழ்ந்து கூறியுள்ளனர்.

**6. உவமையணி என்றால் என்ன? விளக்குக.**

★ ஒரு பொருளை அதன் ஒத்த தன்மை கொண்ட மற்றொரு பொருளோடு ஒப்பிட்டுக் கூறுவதற்கு, 'உவமையணி' என்று பெயர்.

**எ – கா :** மலர்ப்பாதம் – மலர் போன்ற பாதம்
இத்தொடரில், பாதத்துக்கு மலர் உவமையாகக் கூறப்பட்டுள்ளது.
பாதம் – பொருள், மலர் – உவமை, போன்ற – உவமஉருபு.

www.Padasalai.Net

# மாதிரி வினாத்தாள்

## மொழிப்பாடம் – பகுதி I – தமிழ்

காலஅளவு : 3 மணிநேரம்] [மொத்த மதிப்பெண்கள் : 100

### பகுதி – 1

(மதிப்பெண்கள் 14)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 15 × 1 = 15

1. முண்டி மோதும் துணிவே இன்பம் இவ்வடியில் இன்பமாக உருவகிக்கப்படுவது,
   அ) மகிழ்ச்சி ஆ) வியப்பு இ) துணிவு ஈ) மருட்சி
2. தமிழ்ப் புலவரைப் போலவே உரோமச் சிந்தினையாளர் கொண்ட கொள்கை
   அ) நிலையற்ற வாழ்க்கை ஆ) பிறருக்காக வாழ்தல்
   இ) இம்மை மறுமை ஈ) ஒன்றே உலகம்
3. நீர் நிலைகளோடு தொடர்பில்லாதது எது?
   அ) அகழி ஆ) ஆறு இ) இலஞ்சி ஈ) புலரி
4. சரியான அகர வரிசையைத் தோந்தெடுக்க
   அ) உழவு, மண் , ஏர், மாடு ஆ) மண், மாடு, ஏர், உழவு
   இ) உழவு, ஏர், மண், மாடு ஈ) ஏர், உழவு, மாடு, மண்
5. பொருந்தாத இணை எது?
   அ) ஏறுகோள் – எருதுகட்டி ஆ) திருவாரூர் – கரிக்கையூர்
   இ) ஆதிச்சநல்லூர் – அரிக்கமேடு ஈ) பட்டிமன்றம் – பட்டிமண்டபம்
6. தென்னிந்தியாவின் அடையாளச் சின்னமாகக் காங்கேயம் மாடுகள் போற்றப்படுகின்றன – இது எவ்வகைத் தொடர்?
   அ) வினாத்தொடர் ஆ) கட்டளைத்தொடர்
   இ) செய்தித்தொடர் ஈ) உணர்ச்சித்தொடர்
7. கீழ்க்காண்பவற்றுள் உணர்ச்சித் தொடர் எது?
   அ) சிறுபஞ்ச மூலத்தில் உள்ள பாடல்கள் பெரும்பாலும் மகடூஉ முன்னிலையில் அமைந்துள்ளன.
   ஆ) இந்திய நூலகவியலின் தந்தையென அறியப்படுபவர் யார்?
   இ) என்னண்ணே! நீங்கள் சொல்வதை நம்பவே முடியவில்லை!
   ஈ) வாழ்க்கையில் அடிப்படைத் தேவைகளுக்கு அடுத்த இடத்தைப் புத்தகசாலைக்குத் தருக.
8. இந்திய தேசிய இராணுவம் ............இன் தலைமையில் ....... உருவாக்கினர்.
   அ) சுபாஷ் சந்திரபோஸ், இந்தியர் ஆ) சுபாஷ் சந்திரபோஸ், ஜப்பானியர்
   இ) மோகன்சங், ஜப்பானியர் ஈ) மோகன்சிங், இந்தியர்
9. <u>அழியா</u> வனப்பு, <u>ஒழியா</u> வனப்பு, சிந்தா மணி – அடிக்கோடிட்ட சொற்களுக்கான இலக்கணக் குறிப்பு
   அ) வேற்றுமைத்தொகை ஆ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
   இ) பண்புத்தொகை ஈ) வினைத்தொகை
10. "Linguistics"- இதற்கு இணையான தமிழ்ச் சொல்லைத் தருக.
    அ) மொழியியற் புலமை ஆ) மொழிப் புலமை
    இ) இலக்கியப் புலமை ஈ) பன்மொழிப் புலமை



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

11. கீழ்க்காணும் குறட்பாவில் அமைந்த அணிவகையைக் கண்டறிக.

ஊழி பெயரினும் தாம்பெயரார் சான்றாண்மைக்கு
ஆழி எனப்படு வார்.

அ) பொருள் பின்வரு நிலையணி ஆ) ஏகதேச உருவக அணி
இ) சொற்பொருள் பின்வரு நிலையணி ஈ) தற்குறிப்பேற்ற அணி

பாடலைத் படித்துப் பின்வரும் வினாக்களும் (12,13, 14,) விடை தருக.

“காடெல்லாம் கழைக்கரும்பு காவெல்லாம் குழைக்கரும்
மாடெல்லாம் கருங்குவளை வயலெல்லாம் நெருங்குவளை
கோடெல்லாம் மடஅன்னம் குளமெல்லாம் கடல்அன்ன
நாடெல்லாம் நீர்நாடு தனைஒவ்வா நலமெல்லாம்”

12. இப்பாடல் இடம் பெற்ற நூல் எது?

அ) இராவண காவியம் ஆ) சீவகசிந்தாமணி
இ) மணிமேகலை ஈ) பெரியபுராணம்

13. “காடெல்லாம் குழைக்கரும்பு” என்னும் தொடரில் ‘மலர் மொட்டு’ எனப் பொருள் தரும் சொல் எது?

அ) குழை ஆ) எல்லாம் இ) கரும்பு ஈ) அரும்பு

14. ‘கருங்குவளை, நெருங்குவளை’ – இலக்கணக்குறிப்பு எழுதுக.

அ) உவமைத்தொகை, பண்புத்தொகை ஆ) பண்புத்தொகை, பண்புத்தொகை
இ) வினைத்தொகை, பண்புத்தொகை ஈ) பண்புத்தொகை, வினைத்தொகை

15. முட்டி மோதும் துணிவே இன்பம் – இவ்வடியில் இன்பமாக உருவகிக்கப்படுவது

அ) மகிழ்ச்சி ஆ) வியப்பு இ) துணிவு ஈ) மருட்சி

## பகுதி II

**(மதிப்பெண்: 18)**

**எவையேனும் நான்கு வினாக்களுக்குமட்டும் குறுகிய விடையளிக்கவும்.**

**(21 – ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.)** $4 \times 2 = 8$

15. பாண்டியர் காலச் சிற்பங்கள் அமைந்துள்ள இடங்கள் யாவை?

16. அகமாய்ப் புறமாய் இலக்கியங்கள் – அவை
அமைந்ததைச் சொல்லும் இலக்கணங்கள் – இலக்கியங்களின் பாடுபொருள்களாக இவ்வடிகள் உணர்த்துவன யாவை?

17. விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க

அ. சங்க காலத்திற்குப் பிந்தைய அற இலக்கியங்களின் காலம் அறநெறிக்காலம் எனப்படும்.
ஆ. காந்தியடிகள் சத்தியாகிரகம் என்ற அறப்போர் முறையை 1906 ஆம் ஆண்டு தொடங்கினார்.

18. திராவிடமொழிகளின் பிரிவுகள் யாவை?

19. பாலை நிலத்தில் பருந்துகள் பறந்ததன் காரணம் என்ன?

20. இந்திய தேசிய இராணுவத்தின் மகளிர் படைப்பிரிவு பற்றி எழுதுக.

21. ‘இலர்’ என முடியும் திருக்குறளை எழுதுக.

www.Padasalai.Net

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்குமட்டும் விடையளிக்கவும்.** $5 \times 2 = 10$

22. சூறாவளியின்போது மேல்மாடியில் தங்காமல் தரைத்தளத்திலேயே தங்கியதால் தப்பிப்பான்.(பிழை நீக்கி எழுதுக).
23. கீழ்க்காணும் தொடர்களில் வல்லினம் மிகும், மிகா இடங்களைக் கண்டறிந்து அதற்கான இலக்கணம் அறிக.
    அ) வங்கிக் கடன் ஆ) அரசு ஆணை பிறப்பித்தது
24. இடைச் சொற்களைப் பயன்படுத்திக் கீழ்க்காணும் சொற்றொடர்களை மாற்றியமைத்துக் காண்க.
    அ) வீட்டுக்குச் செல்லத்தான் இவ்வளவு பீடிகையா?
    ஆ) இந்தச் சூழ்நிலை மாறியாக வேண்டும்.
25. பிறமொழிச்சொற்களைத் தொகுத்து அவற்றிற்கு இணையான தமிழ்ச்சொற்களைப் பட்டியலிடுக.
    அ) Software
    ஆ) Cyberspace
26. பகுபத உறுப்புகள் வகைகள் யாவை?
27. இடிகுரல், பெருங்கடல் – இலக்கணக் குறிப்புத் தருக.
28. மலர்விழி வீணை வாசித்தாள்; கேட்டவர் வெள்ளம் போன்ற இன்பத்தில் நீந்தினர்.
    (உவமைத் தொடர்களை உருவகத் தொடர்களாக மாற்றுக)

## பகுதி III

## (மதிப்பெண்கள் : 18) பிரிவு – 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்குமட்டும் சுருக்கமான விடையளி.** $2 \times 3 = 6$

29. மூன்று என்னும் எண்ணுப்பெயர் பிற திராவிட மொழிகளில் எவ்வாறு இடம்பெற்றுள்ளது?
30. இசையின் சிறப்பு யாது?
31. சிக்கனம் குறித்த பெரியாரின் கருத்துக்களை இன்றைய நடைமுறையோடு தொடர்புபடுத்தி எழுதுக.
32. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.

    வாய்மையைச் சிறந்த அறமாகச் சங்க இலக்கியங்கள் பேசுகின்றன. வாய்மை பேசும் நாவே உண்மையான நா என்ற கருத்தை "பொய்யாச் செந்நா, பொய்படு பறியா வயங்கு செந்நா" என்று இலக்கியங்கள் கூறுகின்றன. நாக்கு ஓர் அதிசயத் திறவுகோல் என்பார்கள். இன்பத்தின் கதவைத் திறப்பதும் அதுதான். துன்பத்தின் கதவைத் திறப்பதும் அதுதான். மெய் பேசும் நா மனிதனை உயர்த்துகிறது. பொய் பேசும் நா மனிதனைத் தாழ்த்துகிறது.

    அ) எதனைச் சிறந்த அறமாகச் சங்க இலக்கியங்கள் பேசுகின்றன?
    ஆ) மனிதனை உயர்த்தும் நா எது?
    இ) இப்பத்திக்கேற்ற தலைப்பொன்று தருக.

## பிரிவு 2

$2 \times 3 = 6$

**எவையேனும் இரண்டு வினாக்களுக்குமட்டும் சுருக்கமாக விடையளிக்க**

**(36–ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.)**

33. பழங்களை விடவும் நசுங்கிப் போனது – இடஞ்சுட்டிப் பொருள் விளக்கம் தருக.
34. படத்திற்கேற்ற குறளைத் தேர்வு செய்க.



அ) நாணாமை நாடாமை நாரின்மை யாதொன்றும்
பேணாமை பேதை தொழில்.

ஆ) விழைதகையான் வேண்டி இருப்பர் கெழுதகையாற்
கேளாது நட்டார் செயின்.

இ) செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை.

35. பட்ட மரத்தின் வருத்தங்கள் யாவை?

36. அடிபிறழாமல் எழுது.

அ. 'பூவாது காய்க்கும்' எனத்தொடங்கும் சிறுபஞ்சமூலப் பாடல்.

(அல்லது)

ஆ. 'தலைவணங்கி விளைந்த நெற்பயிர் குறித்த' சீவகசிந்தாமணிப் பாடல்

பிரிவு – 3 $2 \times 3 = 6$

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமான விடையளிக்க

37. தளையின் வகைகளை விளக்குக.

38. உவமையணி அமைந்த பாடல் அடிகளை எழுதி விளக்குக.

39. நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும். (அலகிட்டு அதன் வாய்பாடும் எழுதுக)

40. காணாதான் காட்டுவான் தான்காணான் காணாதான்

கண்டானாம் தான்கண்ட வாறு. (இக்குறட்பாவில் பயின்று வரும் தொடைநயத்தை எழுதுக)

பகுதி - IV

(மதிப்பெண்கள் : 20)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க: $5 \times 5 = 25$

41. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



42. பின்வரும் பத்தியைப் படித்துப் பார்த்து, அச்செய்தியை உங்கள் பள்ளி அறிவிப்புப் பலகையில் இடம்பெறும் அறிவிப்பாக மாற்றுக.

மருதூர் அரசு மேல்நிலைப் பள்ளி இருபத்தைந்து ஆண்டுகளாகச் சிறந்த கல்விப் பணியை வழங்கி வருகிறது. இப்பள்ளி, சிறந்த கவிஞராகத் திகழும் இன்சுவை முதலான பன்முகப் படைப்பாளிகளை உருவாக்கிய பெருமை கொண்டது. ஒரு சோற்றுப் பதமாய் மருதூர்ப் பள்ளி மாணவி பூங்குழலி படைத்த "உள்ளங்கையில் உலகம்" என்ற நூலின் வெளியீட்டு விழா 21 ஜூன் திங்கள், பிற்பகல் 3.00 மணியளவில் நடைபெற உள்ளது. அவ்விழாவில் (கின்னஸ் சாதனை படைத்த) முன்னாள் மாணவர் இன்சுவை நூலை வெளியிட்டு, சிறப்புரை ஆற்றுவார். மருதூர்ப் பள்ளி விழா அரங்கத்தில் நிகழும் இந்நூல் வெளியீட்டு விழாவில் கலந்துகொள்ள, அனைவரையும் அழைக்கின்றோம்.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

43. விண்ணப்பப் படிவத்தை நிரப்புக.

**மேல்நிலை வகுப்பு – சேர்க்கை விண்ணப்பம்**

சேர்க்கை எண்: தேதி: வகுப்பும் பிரிவும் :

1. மாணவ / மாணவியின் பெயர் :
2. பிறந்த தேதி :
3. தேசிய இனம் :
4. பெற்றோர் / பாதுகாவலர் பெயர் :
5. வீட்டு முகவரி :
7. பயின்ற மொழி :
8. பெற்ற மதிப்பெண்கள் :
9. இறுதியாகப் படித்த பள்ளியின் முகவரி :

| தேர்வின் பெயர் | பதிவு எண் – ஆண்டு | பாடம் | மதிப்பெண் (100) |
|---|---|---|---|
| | | தமிழ் | |
| | | ஆங்கிலம் | |
| | | கணிதம் | |
| | | அறிவியல் | |
| | | சமூக அறிவியல் | |
| | | மொத்தம் | |

10. மாற்றுச் சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளதா? :
11. தாய்மொழி :
12. சேர விரும்பும் பாடப் பிரிவும் பயிற்று மொழியும் :

மாணவ / மாணவியின் கையெழுத்து

44. மொழிபெயர்க்க
1. Strengthen the body
2. Love your food
3. The art of people is a true mirror to their minds
4. The biggest problem is the lack of love and charity.

45. பின்வரும் கவிதையின் விவரிப்பை உரைநடையில் எழுதுக.

வானகமே, இளவெயிலே, மரச்செறிவே, நீங்களெல்லாம்
கானலின் நீரோ? – வெறுங் காட்சிப் பிழைதானோ?
போன தெல்லாம் கனவினைப்போல் புதைந்தழிந்தே
போனதனால் நானுமோர் கனவோ?
இந்த – ஞாலமும் பொய்தானோ?

– பாரதியார்

www.Padasalai.Net

# முதல் இடைப்பருவத் தேர்வு

## தமிழ்

கால அளவு : 1.30 மணி நேரம்] [மொத்த மதிப்பெண்கள் : 50

### பகுதி – I

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 7 × 1 = 7

1. தமிழ்விடுதூது ______ என்னும் இலக்கிய வகையைச் சேர்ந்தது.
   அ) தொடர்நிலைச் செய்யுள் ஆ) புதுக்கவிதை
   இ) சிற்றிலக்கியம் ஈ) தனிப்பாடல்
2. இந்திய நாடு மொழிகளின் காட்சிச்சாலையாகத் திகழ்கின்றது என்று கூறியவர் ______.
   அ) ச. அகத்தியலிங்கம் ஆ) கால்டுவெல்
   இ) மாக்ஸ்முல்லர் ஈ) குமரிலபட்டர்
3. அழியா வனப்பு, ஒழியா வனப்பு, சிந்தா மணி – அடிக்கோடிட்ட சொற்களுக்கான இலக்கணக்குறிப்பு ______.
   அ) வேற்றுமைத்தொகை ஆ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
   இ) பண்புத்தொகை ஈ) வினைத்தொகை
4. நீர் நிலைகளோடு தொடர்பில்லாதது எது?
   அ) அகழி ஆ) ஆறு இ) இலஞ்சி ஈ) புலரி
5. மல்லல் மூதூர் வயவேந்தே – அடிக்கோடிட்ட சொல்லின் பொருள் என்ன?
   அ) மறுமை ஆ) பூவரசு மரம் இ) வளம் ஈ) பெரிய
6. 'சாப்ட்வேர்' என்பதன் தமிழ்ச்சொல் எது?
   அ) உலவி ஆ) செதுக்கி இ) ஏவி ஈ) மென்பொருள்
7. பொருத்தமான வினையை எடுத்து எழுதுக.
   கதிர் அலுவலகத்திலிருந்து விரைவாக ______.
   அவன் பையன் பள்ளியிலிருந்து இன்னும் ______.
   அ) வந்தான், வருகிறான் ஆ) வந்துவிட்டான், வரவில்லை
   இ) வந்தான், வருவான் ஈ) வருவான், வரமாட்டான்

### பகுதி – II

### (பிரிவு – 1)

**II. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்க.** 5 × 2 = 10

8. நீங்கள் பேசும் மொழி எந்த இந்திய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது?
9. கண்ணி என்பதன் விளக்கம் யாது?
10. "கூவல்" என்று அழைக்கப்படுவது எது?
11. நிலையான வானத்தில் தோன்றி மறையும் காட்சிக்குப் பெரியபுராணம் எதனை ஒப்பிடுகிறது?
12. வீணையோடு வந்தாள், கிளியே பேசு – தொடரின் வகையைச் சுட்டுக.
13. விடைக்கேற்ற வினா அமைக்க.
    அ. திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்னும் நூலை எழுதியவர் கால்டுவெல்.
    ஆ. மழையே பயிர்க்கூட்டமும் உயிர்க்கூட்டமும் வாழ பெருந்துணை புரிகின்றது.
14. கணினி சார்ந்து நீங்கள் அறிந்த எவையேனும் நான்கு தமிழ்ச் சொற்களைத் தருக.



Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net

பிரிவு – 2

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளி.** $3 \times 3 = 9$

15. மூன்று என்னும் எண்ணுப்பெயர் பிற திராவிட மொழிகளில் எவ்வாறு இடம் பெற்றுள்ளது?
16. நிலைத்த புகழைப் பெறுவதற்குக் குடபுலவியனார் கூறும் வழிகள் யாவை?
17. தன்வினை, பிறவினை – எடுத்துக்காட்டுகளுடன் வேறுபடுத்திக் காட்டுக.
18. சொற்களை இணைத்துத் தொடரை விரிவுபடுத்துக.
    மழை பெய்தது
19. பட்ட மரத்தின் வருத்தங்கள் யாவை?

பகுதி – III (பிரிவு – 1)

**அடிமாறாமல் எழுதுக.** $1 \times 4 = 4$

20. "தித்திக்கும் தெள்அமுதாய்த்" எனத் தொடங்கும் தமிழ்விடுதூது பாடலில் முதல் நான்கு வரிகள் மட்டும் எழுதுக.

(பிரிவு – 2)

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளி.** $2 \times 5 = 10$

21. திராவிட மொழிகளின் ஒப்பியல் ஆய்விற்குத் தமிழே பெருந்துணையாக இருக்கிறது என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விவரி.
22. பெரியபுராணம் காட்டும் திருநாட்டுச் சிறப்பினைத் தொகுத்து எழுதுக.
23. "தண்ணீர்" கதையைக் கருப்பொருள் குன்றாமல் சுருக்கித் தருக.

(பிரிவு – 3)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** $5 \times 2 = 10$

24. உண்ணப்படும் தமிழ்த்தேனே – இத்தொடரைச் செய்வினைத் தொடராக மாற்றுக.
25. அடைப்புக்குள் உள்ள சொற்களைப் பொருத்தமான வினைமுற்றாக மாற்றுக.
    அ) இந்திய மொழிகளின் மூலமும் வேருமாகத் தமிழ் ______ (திகழ்)
    ஆ) குழந்தைகள் அனைவரும் சுற்றுலா ______ (செல்)
26. சொல்லுக்குள் சொல் தேடுக.
    அ) எடுப்பார் கைப்பிள்ளை ஆ) எட்டுக்கால்பூச்சி
27. பொருத்தமான பெயரடைகளை எழுதுக. (நல்ல, பெரிய, இனிய)
    அ) எல்லோருக்கும் ______ வணக்கம்.
    ஆ) அவன் ______ நண்பனாக இருக்கிறான்.
28. பிறமொழிச் சொற்களைத் தமிழ்ச் சொற்களாக மாற்றி எழுதுக.
    மார்னிங் எழுந்து, பிரஷ் பண்ணி யூனிஃபார்ம் போட்டு ஸ்கூலுக்குப் போனான்.

வாழ்க! வளர்க! வெல்க!

www.Padasalai.Net